## உள்ளூராட்சி மன்றங்களுக்கான புதிய தேர்தல் முறை:

## சாதகமா? பாதகமா?



10



09

## சவூதி அரேபியாவின் அதிகார விளையாட்டு


# மீள்பார்வை

මීල්පාර්වෙ

Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/75/NEWS/2017 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 381 • 10 நவம்பர் 2017 வெள்ளிக்கிழமை • ஸபர் 1439 • விலை 40.00







# பொதுபலசேனாவுடனான சமரசம்: முஸ்லிம் சமூகத்தின் ஏற்பாடா?



இலங்கை முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பு உணர்வை நாட்டு மக்களுக்கு மத்தியில் விதைத்து முஸ்லிம்களுக்கெதிரான பெரும் கலவரமொன்றுக்கே காரணமாக இருந்ததாகக் கருதப்படும் பொதுபலசேனா அமைப்புடன் தற்போது நடத்தப்பட்டு வரும் பேச்சுவார்த்தைகள் தொடர்பில் பலத்த சந்தேகங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன.

கடந்த 02 ஆம் திகதிய சந்திப்புடன் இதுவரை ஐந்து சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டிருப்பதுடன் பல்வேறு விடயங்களில் சமரசம் எட்டப்பட்டுள்ளதாகவும் அறிய வருகிறது. இந்தப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்கள் தரப்பிலிருந்து அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் சார்பில் அஷ். பாஸில் பாரூக்,

ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸிலின் தலைவர் என்.எம்.அமீன், அண்மையில் அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்ட தேசிய ஐக்கிய முன்னணியின் செயலாளர் அசாத் சாலி உள்ளிட்ட பலரும் இந்தச் சந்திப்புகளில் தொடர்ச்சியாக பங்கெடுத்து வருகின்றனர்.

இந்தச் சந்திப்புகளின் பின்னர், முஸ்லிம்கள் தொடர்பாக பொதுபலசேனா ஏற்றுக் கொண்டிருந்த பல்வேறு தவறான விடயங்களுக்கும் விளக்கம் அளிக்கப்பட்டிருப்பதாகவும், இந்தத் தவறுகளை அவர்கள் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் செய்திகள் (பக்.14)

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை விரைவுபடுத்த கோரிக்கை



பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதில் இலங்கை அரசு காட்டி வருகின்ற தாமதப் போக்கு ஏமாற்றமளிக்கின்றது என ஐரோப்பிய ஒன்றியம் கூறியுள்ளது.

இலங்கைக்கான குறுகிய கால பயணத்தின் முடிவில், செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட, ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் பயணக் குழுவின் தலைவி ஜீன் லெம்பட் இதனைத் தெரிவித்துள்ளார். (பக்.14)

## இலங்கையில் மதச் சுதந்திரத்தை நிலைநாட்ட அமெரிக்கா உதவி

இலங்கையிலும் இந்தியாவிலும் மதச் சுதந்திரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களைக் கொண்டுள்ள நிறுவனங்களுக்கு உதவுவதற்கு அமெரிக்கா முன்வந்துள்ளது. இதற்கென அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் 493,827 டொலர்களை ஒதுக்கியுள்ளது.

இந்த உதவித் திட்டத்தினூடாக இலங்கை அரசாங்கத்தின் அனைத்து நிறுவனங்களும் மதச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான தேசியக் கொள்கைகளையும் சட்டங்களையும் உரிய முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. (பக்.14)

## மு.த.ச. திருத்தம்: கிடப்பில் போடப்படும் அபாயம்



முஸ்லிம் தனியார் சட்டத்தில் திருத்தங்களை முன்மொழிவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடைய ஆட்சிக் காலத்தில் நீதியமைச்சர் மிலிந்த மொரகொடவினால் நியமிக்கப்பட்ட நீதியரசர் ஸலீம் மர்சூப் தலைமையிலான ஆணைக்குழு எட்டு வருடங்களாகியும் தமது அறிக்கையினை முன்வைக்காத நிலையில், முஸ்லிம் தனியார் சட்டத் திருத்த ஏற்பாடுகள் தொடர்ந்தும் தாமதமடைந்து வருகின்றன. (பக்.14)

## கருத்துக்களைப் பெறுவதற்காக மாகாண எல்லை நிர்ணயக்குழு மாவட்டங்களுக்கு விஜயம்

மாகாண எல்லை நிர்ணயம் சம்பந்தமாக பொதுமக்களின் முன்மொழிவுகளை முன்வைப்பதற்கான காலம் நவம்பர் 02 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிலையில், மாகாண சபை தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயத்துக்காக நியமிக்கப்பட்ட குழுவினர் தற்போது மாவட்டங்கள் தோறும் விஜயம் செய்து மக்களது கருத்துக்களைப் பெறும் பணியை ஆரம்பித்துள்ளனர். குழுவினரின் இந்த விஜயத்தின் போது, மாகாண சபை தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயத்துக்கான தமது முன்மொழிவுகளையும் கருத்துக்களையும் முன்வைக்க முடியும் எனவும், மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளைப் பிரித்தொதுக்குவது தொடர்பாக ஆர்வம் காட்டுகின்ற பொதுமக்களும் அரசியல் கட்சிகளும் சிவில் அமைப்புக்களும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டு தமது கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் முன்வைக்க முடியுமென்றும் மாகாண சபை தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயத்துக்காக நியமிக்கப்பட்ட குழுவின் செயலாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார். (பக்.15)

## கண்ணுக்கு புலப்படாத சக்தியொன்று தாஜுதீனின் கொலையை மூடி மறைக்கிறது



நாங்கள் இந்த நல்லாட்சியை உருவாக்கியது, நீதியையும், சட்டத்தையும் நிலைநாட்டுவதற்கே. சட்டத்தை எல்லோருக்கும் சமமாக நடைமுறைப்படுத்துவதற்கே. தாஜுதீனின் சடலத்தை வெளியே எடுத்தது தாஜுதீனுக்கு நீதியை நிலைநாட்டுவதற்கு. மாறாக தாஜுதீனின் சடலத்தைக் காட்டி வாக்கு பெறுவதற்கல்ல என்று பாராளுமன்றத்தில் நீதித்துறை தொடர்பான திருத்தச் சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய முஜீபுர் றஹ்மான் கூறினார்.

அவர் தனதுரையில், மஹிந்த ராஜபகஷவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற படுகொலை ஒன்று சம்பந்தமாக நல்லாட்சி அரசாங்கம் அந்த கொலைக்கான காரணத்தை வெளியே கொண்டு வந்து நீதியை வழங்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்தது. (பக்.15)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வி.ரீ.எம். இம்றாத்

பயந்த புத்திஜீவிகள் வாழும் பூமியை தைரியமான முட்டாள்கள் ஆட்சி செய்வார்கள்!




- முபாரிஸ் ரஷாதி

ஈரானின் உதவியோடு அவர்கள் அரச அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகத்தை இலங்கையில் நிறுவியுள்ளார்கள், சஊதியின் உதவியோடு நாம் வருடா வருடம் நோன்புக்கு பேரீச்சம் பழத்தைப் பெற்றுக் கொடுக்கிறோம்.

## கேட்டதில் பிடித்தது

- ஸம்ஹர் ஸனூர்தீன்

கல்வி கற்றுக்கொடுப்பதென்பது உள்ளத்தில் இருந்து உள்ளங்களுக்கு கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். ஆனால் இன்று நாவிலிருந்து காதுகளுக்கு கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அது தான் எம் எதிர்பார்ப்புகள் வீணாகிப் போகின்றன.

# சவூதியில் தொடரும் மர்மங்கள்

- டில்ஷான்

லெபனான் பிரதமரான சஅத் ஹரீரீ அவசரமாக சவூதி அரேபியாவுக்கு அழைக்கப்படுகிறார். சவுதி அரேபியாவுக்கு வந்து சில மணித்தியாலங்களில் அவரோடு வந்த உதவியாளர்களே அறியாத ஒரு இடத்தில் இருந்து சவூதி அரேபியாவின் அல் அரேபியா தொலைக் காட்சி ஊடாக தான் தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்வதாக லெபனான் மக்களுக்கு அறிவிக்கிறார்.

ஹரீரீ சவூதி சார்பானவராக அறியப்பட்டவர். சவூதி-லெபனான் இரட்டை குடியுரிமை பெற்றவர். இவரது கட்சிக்கும் ஹிஸ்புல்லாஹ் சார்பான கட்சிக்கும் இடையிலான தேசிய அரசாங்கமே லெபனானில் இருக்கிறது. அதில் ஜனாதிபதி ஆரோன் ஈரான் சார்பானவர்.

தனது இராஜினாமாவுக்கு ஈரானும் ஹிஸ்புல்லாஹ்வும் காரணம் என்று குற்றம் சாட்டுகிறார். இவர் இராஜினாமா செய்து சில மணித்தியாலங்களில் யெமனில் இருந்து ஹூத்திகள் ரியாத் நோக்கி பலஸ்டிக் ஏவுகணைகள் ஏவுகிறார்கள். ஏவுகணைகள் எதுவும் தரையில் வெடிக்கவில்லை. அவை அனைத்தும் வானில் வைத்து இடைமறிக்கப்பட்டன.



ஆனாலும் சில மணித்தியாலங்களில் தரையில் வேறொரு ஏவுகணை வெடித்தது. அதிகாரமிக்க மற்றும் பணபலம் பொருந்திய இளவரசர்கள் உட்பட பல முக்கிய புள்ளிகள் ஊழல் குற்றச்சாட்டுக்களை அடிப்படையாக வைத்து கைதுசெய்யப்படுகிறார்கள்.

இவர்கள் கைதுசெய்யப்பட்டு சில மணித்தியாலங்களில் இளவரசர் மக்ரீன் உட்பட முக்கிய புள்ளிகள் பயணம் செய்த ஹெலிகொப்டர் யெமன் எல்லையில் 'விபத்துக்குள்ளாகியிருக்கிறது'.

48 மணித்தியாலத்திற்குள் நடந்து முடிந்த இந்த சம்பவங்கள் மூலம் சவூதி அரேபியா நாட்டுக்குள்ளும் நாட்டுக்கு வெளியிலும் ஒரு இக்கட்டுக்குள் சிக்கியிருக்கிறது என்பதை மட்டும் உணர்த்துகிறது.

மர்மங்கள் தொடரக்கூடும்.. முடிச்சுகளும் அவிழக்கூடும்.

# பெற்றோலும் பற்றுச்சீட்டும்

- நியாஸ் அஹ்மத்



வீட்டுக்கு நேர் எதிரில் பெற்றோலிய கோபரேஷன் தலைமையகம். அதன் அருகிலேயே ஷெட். இருந்தும் பாம்பு போல் நீண்டிருக்கும் கியூவில் ஃபோனை நோண்டிக் கொண்டும் தூஷணம் பாடிக்கொண்டிருக்கும் கூட்டத்துடன் ஐக்கிய மாக முடியவில்லை.

கடல் மேல் விழி வைத்துக் காத்திருந்த கப்பலும் சோமாலிய ஃபைரேட்களின் பார்வையில் உப்பைத் தூவி இலங்கை பரப்பில் நுழைந்து விட்டதாம்.

இனி என்ன நல்லதோ கெட் டதோ முத்து ராஜவல எண்ணெய்க் குதங்களில் இறக்கப்படும் பெற்றோல் நல்ல ரகமாக இருக்க வேண்டும் என மனம் பிரார்த்திக்கிறது. ஏனென்றால், முன்பொருமுறை மட்டரக பெற்றோல் அடித்து சென்சர்கள் பழுதாகி நடுரோட்டில் நின்ற அனுபவம் இன்னும் உள்ளது.

பெற்றோல் அடித்ததற்கான பற்றுச் சீட்டு இல்லாததினால் வாகனத்திற்கு உண்டான 27,000/- திருத்தச் செலவை மீளப்பெற்றுக் கொள்ள முடியாமல் போனது.

காணிக்கைகள் உரிய முறையில் கைமாறினால் ட்ரிங்கோவில் நங்கூரமிட்டுருக்கும் கப்பல் நாளை வேறொரு பெயரில் வரக்கூடும். பற்றுச்சீட்டு முக்கியம்.

# நாம் ஒவ்வொருவரும் அரசியல்வாதி

- சிராஜ் மஷ்ஹூர்

நேர்மையாக அரசியல் செய்ய முடியாது என்ற குரலை அடிக்கடி கேட்க நேர்கிறது. நமது பார்வையில் மாற்றம் தேவை. நம்மில் பலர் அரசியலைப் புரிந்து வைத்திருப்பதில், பல்வேறு வகையான குழப்பங்களும் போதாமைகளும் உள்ளன. கட்சி அரசியலும் தேர்தல் அரசியலும் மட்டும்தான் அரசியல் என்று மேலோட்டமாகப் புரிந்து கொண்டிருக்கிறோம்.

'அரசியல் என்றாலே எனக்கு அலர்ஜி' என்று சொல் பவர்கள் கூட, அரசியல் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். நாம் ஒவ்வொருவரும் அரசியல்வாதி தான். ஒரு குறிப்பிட்ட விவகாரத்தில் எனக்கு எந்த அபிப்பிராயமும் இல்லை என்று சொல்பவர் கூட, மறைமுகமாக ஒரு கருத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் வாதிதான். இதை நாம் சரியாக உணர்ந்தோமானால், நமது தலைவிதியை நாம் மாற்றியமைக்கலாம்.

கூடி வாழத் தெரிந்த மனிதனால் அரசியலைத் தவிர்த்து வாழ முடியாது. 'ஒன்றில் நாம் அரசியலில் தலையிட வேண்டும். இல்லாவிடில் அரசியல் நம் மீது தலையிட்டுக் கொண்டே இருக்கும்.'

# அரசியல் நீக்கம் செய்யப்பட்ட சமூகத்தில் மாற்று அரசியல்

- அர்கம் முனீர்

தேர்தல் என்றவுடன் அரசியல் களம் வழமை போல சூடுபிடித்துள்ளது. ஆங்காங்கே அரசியல் கட்சிகள் தமது இருக்கைகளை தக்கவைத்துக் கொள்ளும் போராட்டத்தை இப்போதே ஆரம்பித்து விட்டார்கள். இம்முறை வழமை போல் அல்லாது 'மாற்று அரசியல்' என்ற கோஷம் மிகவும் வேகமாக வலுப்பெற்று வருகிறது. ஆகவே இந்நிலையில் 'மாற்று அரசியல்' என்பதைப் பற்றிய ஒரு புரிந்துணர்வு எமக்கு இப்போது தேவைப்படுகிறது.

முதலில் நாம் மூன்று சொற் பதங்களை சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஒன்று 'அரசியல் நீக்கம்'. அடுத்தது 'அரசியல் மாற்றம்' (Political Alternative) மூன்றாவது 'மாற்று அரசியல்' (Alternative Politics). இந்த மூன்று சொற் பதங்களையும் விளங்கிக் கொள்ளாமல் எம்மால் மாற்று அரசியல் கோஷத்தை முன்வைக்க முடியாது.

அரசியல் நீக்கம் எனப்படுவது ஒரு சமூகத்தை அரசியல் பிரக்ஞை அற்ற சமூகமாக மாற்றுவதைக் குறிக்கும். அதாவது அரசியல் என்றால் என்ன? அரசியலில் எமது உரிமைகள் சம்பந்தமான தெளிவுகள் அற்ற ஒரு நிலையை ஏற்படுத்தல். இன்னும் குறிப்பாக சொல்லப் போனால் ஒரு சமூகத்தை அரசியல் ரீதியாக வலுவிழக்கச் செய்தல்.

இலங்கையில் முஸ்லிம் சமூகம் இதற்கான ஒரு தெளிவான உதாரணமாகும். சுதந்திரத்திற்கு பிந்தைய காலத்தின் முஸ்லிம் அரசியல்வாதிகளும் இந்த 'அரசியல் நீக்கத்திற்கு' முக்கிய காரணமாகும். அதாவது எமக்கு அரச இயந்திரம் எவ்வாறு தொழிற்படுகிறது என்பது பற்றிய சரியான தெளிவு இல்லை. உரிமைகளுக்கும் சலுகைகளுக்கும் வித்தியாசம் தெரியாது. மொத்தமாக சொல்லப் போனால் அரசியல் என்றால் என்னவென்றே தெரியாது எமக்கு. ஆகவே தான் அரசியல்வாதிகள் அள்ளி வீசும் சலுகைகளையே நாம் அரசியல்வாதிகளை அளவிடும் கருவியாக மாற்றி வைத்துள்ளோம். அவர்களும் இந்த சூழ்நிலையை பயன்படுத்தி சலுகைகளை அள்ளி வீசி பிழைப்பு அரசியலை நடாத்திக் கொண்டிருக்கிறார்கள்.

எந்த விடயத்தை அரசாங்க அதிபரிடம் கொண்டு செல்ல வேண்டும்? எந்த விடயத்தை நாம் எமது முனிசிபல் மூலம் தீர்க்க வேண்டும் என்று நாம் பார்ப்பதில்லை. மேலிடத்தில் ஒரு அமைச்சரைத் தெரியுமா? அல்லது ஒரு பாராளுமன்ற உறுப்பினரை தெரியுமா? நல்லது... அவரிடம் சொல்லி விட்டால் ஐந்து நிமிடத்தில் வேலை ஆகிவிடும். இதுதான் எமக்குத் தெரிந்த அரசியல்...

மிகவும் இலகுவான செயற்பாடு. 'ஊருக்கு ஒரு எம்.பி' 'ஊருக்கு ஒரு அமைச்சர்' போன்ற அப்பட்டமான பிரதேசவாதம் ஊறிப்போன இந்த கோரிக்கைகளுக்கும் இதுவே காரணம். அபிவிருத்திகளை அப்போதுதான் இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்று நினைக்கிறோம். ஒரு வீதி உடைந்தால் கூட அதை யார் மூலம் போய் செய்ய வேண்டும் என்று தெரியாது. காணிப் பிரச்சினையா? நேரடியாக ஒரு முஸ்லிம் அமைச்சருக்குத்தான் கோல் பறக்கும். உரிமைகளை கூட வரவேண்டிய வழியில் எடுக்க தைரியமில்லாத வலுவிழந்த சமூகமாக மாறியிருக்கிறோம்.

இரண்டாவது 'அரசியல் மாற்றம்' பற்றிய தெளிவு எமக்குத் தேவைப்படுகிறது. அரசியல் மாற்றம் எனப்படுவது தலைகளை மாற்றும் செயற்பாடு. அதாவது மோசமான அரசியல்வாதிகளை நல்ல அரசியல்வாதிகள் மூலமோ அல்லது கொஞ்சம் மோசமான அரசியல்வாதிகள் மூலமோ replace பண்ணுவது.

'அரசியல் மாற்றம் என்பது மோசம், மிக மோசம் என்ற தெரிவுகளில் மோசத்தை தெரிவு செய்வதாகும். இது உண்மையில் ஒரு dead end politics'.

-Yogendra Yadav, Indian political scientist.

ஒரு மூன்றாம் அரசியல் அணியொன்றை உருவாக்குதல் (3rd party politics) என்பதையும் 'அரசியல் மாற்றம்' என்ற பதத்திற்குள் அலசலாம். இந்த மூன்றாம் அணியொன்றை உருவாக்குவது சம்பந்தமான சாதக பாதகங்களை தமிழகத்தின் கடைசி தேர்தலின் போது உருவாக்கப்பட்ட 'மக்கள் நலக் கூட்டணி'யை அவதானித்தால் நன்கு புரிந்து கொள்ள முடியுமாக இருக்கும்.

அதேபோன்று வெறும் அரசியல் மாற்றம் நிகழ்ந்து விட்டால் மாத்திரம் நாம் எதிர்பார்க்கும் மாற்றம் நிகழ்ந்து விடப் போவதில்லை. ஏற்கனவே corrupt ஆகியிருக்கும் political சிஸ்டத்தில் தாக்குப்பிடிப்பது என்பது அத்துனை இலகுவான காரியமல்ல. நான் மேலே ஆரம்பத்தில் குறிப்பிட்ட வாசகத்தை போல அது உள்ளே வருபவர்களை மாற்றி விடும். இந்த இடத்தில் பல உதாரணங்களை நாம் எமக்குள்ளே நினைவுகூறிக் கொள்ளலாம்.

பலர் இந்தத் தலைகளை மாற்றும் அரசியல் மாற்றத்தைத்தான் 'மாற்று அரசியல்' என்று தப்பாக வரையறுக்கின்றனர். உண்மையில் அரசியல் மாற்றம் என்பது 'மாற்று அரசியலின்' ஒரு முக்கியமான கூறுதானே ஒழிய தலைகளை மாற்றுவதுதான் மாற்று அரசியல் அல்ல.

# மாகாண சபைத் தொகுதிகளுக்கான எல்லை நிர்ணயம்:

## தேசிய ஷூரா சபை முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகள் சந்திப்பு



இவ்வருடம் ஜூலை மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால், பல் வேறு வாதப் பிரதிவாதங்களுக்கும் இழுபறிகளுக்கும் பின்னர் திருத்தங்களுடன் இச்சட்டமூலம் கடந்த செப்டம்பர் 20 ஆம் திகதி வாக்கெடுப்புக்கு விடப்பட்டு மூன்றில் இரு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது.

எனவே, இந்தப் பின்னணியில் தான் மாகாண சபைகளுக்கான தேர்தல் தொகுதிகள் எல்லை நிர்ணயம் தொடர்பாக தேசிய ஷூரா சபையானது அதன் 18 அங்கத்துவ அமைப்புக்களில் ஒன்றான அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்துடன் இணைந்து நாடளாவிய ரீதியில் விழிப்புணர்வு மற்றும் ஆய்வுப் பணிகளை குறுகிய கால இடைவெளியில் மேற்கொண்டது.

மாகாண சபைத் தொகுதிகளுக்கான எல்லை நிர்ணயம் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்பதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள விஷேட குழுவிடம் சமூகம் சார் கரிசனைகளையும் முன்மொழிவுகளையும் ஷூரா சபை தொகுத்து அறிக்கையாக சமர்ப்பிக்கவுள்ளது.

இறுதி அறிக்கையை தயாரிக்க முன்னர் முஸ்லிம் பாராளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்கள், ஷூரா சபையின் அங்கத்துவ அமைப்புக்களது பிரதிநிதிகள் போன்றோரது கருத்துக்களையும் உள்வாங்க் வேண்டும் என்ற நோக்கில் அவர்களுடனான ஒரு சந்திப்பு 7 ஆம் திகதி செவ்வாய் மாலை கொழும்பில் இடம்பெற்றது.

புதிய கலப்புத் தேர்தல் முறையின் கீழ் முஸ்லிம்களது பிரதிநிதித்துவம் பாரிய அளவில் குறையலாம் என்ற அச்சம் இருப்பதனால் தேவையான அளவு முஸ்லிம் பிரதிநிதிகளை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அல்லது சிறுபான்மை வாக்குகள் தீர்மானிக்கும் பலத்தை கொண்டிருக்கும் வகையில் முடியுமான இடங்களில் மாகாண தேர்தல் தொகுதி எல்லைகளை வரைவு செய்தல் போன்ற விடயங்களும் இரட்டை அங்கத்தவர் தொகுதிகள் குறித்தும் கலந்துரையாடலின் பொழுது கவனம் செலுத்தப்பட்டது.

விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் எவ்வாறு எமது பிரதிநிதிகளை தேசியக் கட்சிகளூடாக பெற்றுக் கொள்வது, அவ்வாறு பெறப்படும் உறுப்பினர்களுக்கு நிதி ஒதுக்கீடுகளை எவ்வாறு பெற்றுக் கொள்வது போன்ற இன்னோரன்ன விவகாரங்களும் ஆராயப்பட்டன.

புதிய தேர்தல் முறை, வாக்குச் சீட்டு வடிவமைப்பு, இரட்டை வாக்களிப்பு முறை போன்ற விவகாரங்களை பிறிதொரு அமர்வில் ஆராய்வதாகவும் எல்லோருமாக ஒரு நிலைப்பாட்டை முன்வைப்பது குறித்தும் உடன்பாடுகள் எய்தப்பட்டன.

தொடர்ந்தும் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கையை கூட்டாக ஆராய்வது பற்றியும் உடன்பாடு காணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாய்ந்தமருது - கல்முனை விவகாரம்: இயலாமையின் வலி

• மொஹமட் பாதுஷா

தனித்துவ அடையாளம் என்றும் அபிவிருத்தியோடு சேர்ந்த உரிமை அரசியல் என்றும் பல வருடங்களாகப் பேசி வருகின்ற முஸ்லிம்களின் அரசியல் இயலாமை, கிழக்கில் மீண்டும் ஒரு தடவை நிரூபணமாகி இருக்கின்றது.

வரலாற்றில் இருந்து, முஸ்லிம் அரசியல்வாதிகள் பாடம் கற்றுக் கொள்ளவில்லை என்பதையும், அரசியலில் இன்னும் அவர்கள் பக்குவப்படவில்லை என்பதையும், மக்களை உசுப்பேற்றி விடுவதில் கைதேர்ந்த அளவுக்கு காரியம் முடித்துக் காட்டுவதில் அவர்களுக்கு ஆற்றல் கிடையாது என்பதையும், சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்ற விவகாரம் வெளிக்காட்டியிருக்கின்றது.

இங்கே இருக்கின்ற பிரச்சினை, சாய்ந்தமருதுக்கு உள்ளூராட்சி மன்றம் கொடுக்கப்படவில்லை என்பதோ, கல்முனை வெற்றி பெற்றிருக்கின்றது என்பதோ அல்ல. மாறாக, இவ்விரு ஊர்களுமே பிழையாகக் கையாளப்பட்டு, பகிரங்கமாக ஏமாற்றப்பட்டிருக்கின்றன என்பதுதான்.

அதாவது, முஸ்லிம் கட்சித் தலைவர்கள், விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் முதற்கொண்டு, நாட்டின் பிரதமரே நேரில் வந்து, சாய்ந்தமருதுக்கு ஒரு பிரதேச சபை தருவதாக வாக்குறுதியளித்திருந்தார்கள். அதே நேரத்தில், ''நான்கு சபைகளாகப் பிரிப்பது'' என்றே தமக்கு வாக்குறுதி வழங்கப்பட்டதாக அனைத்துப் பள்ளிவாசல்கள் பொது நிறுவனங்கள் சம்மேளம், கல்முனை மக்கள் சார்பாகக் கூறுகின்றது.

அப்படியாயின், சாய்ந்தமருதுக்கு வழங்கிய வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை. அதேபோன்று, கல்முனைக்கு வழங்கப்பட்ட உத்தரவாதமும் காப்பாற்றப்படவில்லை என்பதே கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயங்களாகும். இதுதான், முஸ்லிம் அரசியலின் நிலையும் கையாலாகாத்தனமும் ஆகும்.

கல்முனை மக்களும் சாய்ந்தமருது மக்களும் எதிர் எதிரானவர்கள் அல்ல. பிரதேச அடிப்படையில் பிரிந்திருக்கின்றார்களே தவிர, அவர்களிடையே வேற்றுமை, பிரிவினை உணர்வுகள் இருந்ததில்லை. ஆனால், எல்லா ஊர்களையும் போல, கல்முனைக்கும் சாய்ந்தமருதுக்கும் இடையில் வர்த்தகப் போட்டி இருந்து வந்தது. கல்முனை மாநகரைத் தங்களது கைக்குள் வைத்திருக்க, கல்முனை உள்ளூர் அரசியல்வாதிகள் விரும்பியிருந்த நிலையில், கல்முனை மாநகர சபையின் ஆட்சி, சாய்ந்தமருது மக்கள் மனங்களில் சில கேள்விகளை எழுப்பியது.




''தமது பிரதேச வருமானத்தை, சாய்ந்தமருதுக்கே செலவளித்தோம்'' என்று கல்முனை அரசியல்வாதிகள் இப்போது சொன்னாலும், குப்பை சேகரிப்புத் தொடக்கம், பல விடயங்களில் மாநகராட்சியின் வினைத்திறனற்ற செயற்பாடுகளை, சாய்ந்தமருது மக்கள் 'மாற்றாந் தாய் மனப்பாங்கு' என்றுதான் கணிப்பிட்டிருந்தனர் என்பதை மறுக்க முடியாது.

இப்படியாக, சாய்ந்தமருது மக்களிடையே இருந்து வந்த உணர்வை, கொஞ்சம் சமூக நலனுக்காகவும் கொஞ்சம் அரசியலுக்காகவும் முதலில் கையில் எடுத்தவர் அவ்வூரைச் சேர்ந்த முன்னாள் மேயர் சிராஸ் மீராசாகிப் ஆவார்.

மேயர் பதவியில் இருந்து, அவர் இராஜினாமாச் செய்ய வைக்கப்பட்ட போது, இந்தக் கோரிக்கை வலுப்பெற்றது. அதற்குப் பிறகு அவ்வழியில், மாகாண சபை உறுப்பினராக இருந்த ஜெமில் நகர்ந்தார் எனலாம்.

மறுபுறத்தில், கல்முனையில் இருந்து பிரதியமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ் உம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஜவாத்தும், இரு பக்கமும் காய்களை நகர்த்திக் கொண்டிருந்தனர்.

தனி உள்ளூராட்சி சபை என்பது, அரசியல்வாதிகளின் கோரிக்கையாக வெளித்தெரிந்தாலும் கூட, இதில் முழுமையான நியாயங்கள் இருப்பதையும், இப்பிரதேசம் ஓர் உள்ளூராட்சி சபைக்கான அடிப்படை நிபந்தனைகளைக் கொண்டிருப்பதையும் யாரும் மறுக்கவியலாது.

அதேபோன்று, கல்முனையில் இருந்து சாய்ந்தமருது தனியே பிரிக்கப்படுவதால் ஏற்படக் கூடிய ஆபத்துகள், பாதக நிலைமைகள் குறித்து, கல்முனை மக்கள் முன்வைக்கின்ற கருத்துகளும் புறக்கணிக்கக் கூடியவை அல்ல.

அந்தவகையில், முன்னதாக விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சராக இருந்த ஏ.எல்.எம். அதாவுல்லா, கல்முனை மாநகர சபையில் இருந்து, தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமாக நான்கு புதிய நகர சபைகளை உருவாக்குவதற்குத் திட்டமிட்டிருந்தார்.

அதற்கான வர்த்தமானி அறிவித்தலும் தயாராகி இருந்தது. கடைசி நேரத்தில், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், கடும் அழுத்தங்களைக் கொடுத்து அதைத் தடுத்ததாக அதாவுல்லா பகிரங்கமாகக் கூறினார்.

அதன் பிறகு, கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் காலத்தில், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் சாய்ந்தமருது உள்ளூராட்சிமன்ற விவகாரத்தை, வாக்குச் சேகரிப்பதற்கான ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தின.

அதுதான் இன்று ஏற்பட்டிருக்கின்ற இத்தனை நிலைமைகளுக்கும் அடிப்படைக் காரணமாகும். முஸ்லிம் காங்கிரஸினால் அழைத்து வரப்பட்ட, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கல்முனையில் வைத்துத்தான் சாய்ந்தமருதுக்கு பிரதேச சபை வழங்குவதாக வாக்குறுதியளித்தார். மக்கள் காங்கிரஸால் அழைத்து வரப்பட்ட உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா, சாய்ந்தமருதில் வைத்து இதே வாக்குறுதியை வழங்கினார்.

சாய்ந்தமருதுக்கு பிரதேச சபையை பெற்றுக் கொடுக்க, கடந்த மாதம் வரை, இரு பிரதான முஸ்லிம் கட்சிகளும் கடுமையான அழுத்தங்களைக் கொடுத்தன. இதில், சாய்ந்தமருது அரசியலுக்குச் சாதகமான கட்சி அதிக முயற்சிகளையும், கல்முனை அரசியலுக்குச் சாதகமான கட்சி சற்று 'விலாங்கு மீன்' போன்ற முயற்சிகளையும் மேற்கொண்டதாகச் சொல்லப்படுகின்றது.

எவ்வாறாயினும், இரு முஸ்லிம் கட்சிகளும், சாய்ந்தமருதுக்கு ஒரு நகர சபையைப் பெறுவதில், ஒருமித்த நிலைப்பாட்டில் இருந்ததை மறப்பதற்கில்லை. இந்தநிலையில், சாய்ந்தமருதுக்குப் புதிய பிரதேச சபை உருவாகும் நிலையொன்று ஏற்பட்டதுடன், அதற்கு மக்கள் காங்கிரஸின் முயற்சியே காரணம் என்ற கதைகளும் வெளியாகியிருந்தன.

எனவே, இது மு.கா கட்சியின் முயற்சியாலேயே உருவாகின்றது என்று காட்டிக் கொள்ளும் தோரணையில், பிரதியமைச்சர் வெளியிட்ட அறிக்கை, கல்முனையில் கொதிநிலையை உருவாக்கியது மட்டுமன்றி, இவ்விவகாரத்தில் புதியதொரு திருப்பத்துக்கும் வித்திட்டது எனலாம்.

(பக்.14)

# பேரம் பேசும் முஸ்லிம் அரசியல்வாதிகளும் உதவி செய்யவும் உரிமைக் குரல் எழுப்பவும் யாரும் அற்ற முஸ்லிம் சமூகமும்

• லத்தீப் பாரூக்

அரசியல் மற்றும் சமய மட்டத்தில் காணப்படும் தலைமைத்துவ நெருக்கடியால் இந்த நாட்டின் முஸ்லிம் சமூகம் தொடர்ந்து பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றது. இந்த சமூகத்தைக் காப்பாற்ற சிவில் சமூகம் முன்வராவிட்டால் எதிர்காலத்தில் பாரிய ஒரு அழிவை சந்திப்பது நிச்சயம்.

தற்போது நிலவும் சூழலில் இந்த சமூகத்தின் எதிர்கால விதியை இந்த ஊழல் அரசியல்வாதிகளை நம்பி ஒப்படைக்க முடியாது. முஸ்லிம்களுக்கு எதிரான தமது சொந்த நிகழ்ச்சி நிரலைக் கொண்ட சிறிய சிங்கள இனவாதக் குழுக்கள் வளர்ச்சி அடைந்து வரும் இன்றைய நிலையில், தற்போதைய அரசியல் வாதிகளை நம்பவே முடியாத நிலை தோன்றியுள்ளது.

உலகம் முழுவதும் முஸ்லிம் நாடுகளை கற்பழித்து சூறையாடி வரும் உலக சக்திகளின் உள்நாட்டு பிரசன்னம் குறித்தும் அரசாங்கம் பராமுகமாக இருந்து வருகின்ற நிலையில், முஸ்லிம் சமூகத்தின் நிலை மிகவும் பரிதாபகரமானதாகும்.

மிகவும் கவலைக்குரிய நிலை என்னவென்றால் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுள் அநேகமானவர்கள் சமூகத்தைப் பிரதிநிதித்துவம் செய்யாமல் பதவிகளுக்காகவும் சுகபோகங்களுக்காகவும் பேரம் பேசிய வண்ணம் உள்ளனர். உதாரணத்துக்கு அண்மையில் நிறைவேற்றப்பட்ட மாகாண சபைகள் தேர்தல் (திருத்த) சட்டத்தை முஸ்லிம் அரசியல்வாதிகள் எதிர்த்தனர். சமூக நலனுக்கு அது எந்தளவு பாதகமானது என்பதையும் அவர்கள் விளக்கினர். ஆனால் கடைசியில் எவ்வாறோ அவர்கள் அதற்கு ஆதரவாகவே கைகளை உயர்த்தினர். தமது திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக சிலர் கூறினர். இன்னும் சிலர் இந்த மாற்றங்கள் சமூகத்துக்கு எந்த வகையிலும் பயனற்றவை என்றும் விளக்கம் அளித்தனர்.



மறுபுறத்தில் நவம்பர் இரண்டாம் திகதி அளவில் மாகாண சபை எல்லைகளை மீள் நிர்ணயம் செய்யும் எல்லை மீள்நிர்ணயக் குழுவுக்கு தமது யோசனைகளை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் சிலர் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இந்த அறிக்கைகளைத் தயாரிப்பதற்குப் பதிலாக அவர்கள் எல்லோரும் புன்னகைத்தவாறே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அழைப்பை ஏற்று அவரோடு அவரின் உத்தியோக பூர்வ கத்தார் விஜயத்தில் இணைந்து கொண்டனர். முஸ்லிம் சமூகம் பற்றிய பிரச்சினைகளில் ஒட்டு மொத்தமாக அலட்சியமாக இருந்து கொண்டு சமூகம் சார்ந்த விடயங்களில் பொடுபோக்காக நடந்து கொள்வது முஸ்லிம் அரசியல்வாதிகளைப் பொறுத்தமட்டில் ஒன்றும் புதிய விடயம் அல்ல.

இந்த சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த பைஸர் முஸ்தபா ஒரு முஸ்லிம் அமைச்சராக இருந்தபோதும் கூட அவர் முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்பவர் என எடுத்துக் கொள்ள முடியாது. மாறாக இந்த அமைச்சுப் பொறுப்பை தனக்கு வழங்கியவர்களுக்குக் கீழ்படிவாக இருப்பதுதான் அவரின் பிரதான கடமை. இதே போல் தான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அதிலிருந்து பிரிந்து சென்று அரசோடு இணைந்து கொண்டிருக்கும் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களது நிலைமையும்

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் இன்றைய நிலை மிகவும் வங்குரோத்தானது. மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்ட மூலம் பற்றி ஆலோசிக்க முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் ஒன்றை கூட்டுமாறு ஒருவர் அகில இலங்கை ஜம்மிய்யத்துல் உலமாவிடம் வேண்டுகோள் விடுத்தார். ஆனால் இவர்கள் யாரும் இந்த விடயத்தில் அரசாங்கத்தைப் பகைத்துக் கொள்ளத் தயாரில்லை என்பதை தெரிந்துகொண்டதால் ஜம்மிய்யத்துல் உலமா இந்தக் கோரிக்கைக்கு செவி சாய்க்க மறுத்துவிட்டது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சி தோற்றுவிக்கப்பட்டு முஸ்லிம் தலைமைத்துவம் கிழக்கிற்கு கைமாறியது முதல், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் வரலாறு சந்தர்ப்பவாதத்தை அடிப்படையாகக் கொண்டதாகவும், சமூகத்தை அடகு வைத்து அல்லது காட்டிக் கொடுத்து தங்களுக்குத் தேவையான சுகபோகங்களையும் சொகுசுகளையும், பட்டம் பதவிகளையும் பெற்றுக் கொள்வதாகத் தான் அமைந்துள்ளது. இது தொடர்பான ஒரு சில விடயங்களை இங்கே சுட்டிக் காட்டலாம்

2002 இன் ஆரம்ப கட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸும் அதன் தலைமைத்துவமும் யுத்த நிறுத்த உடன்படிக்கை [illegible] த் தவறியதால் முஸ்லிம்கள் கட்சி [illegible]

மீதும் தலைமைத்துவம் மீதும் கடும் ஆத்திரம் அடைந்தனர். அத்தோடு முஸ்லிம் சமூகத்தை முழுமையாகப் புறக்கணித்து விட்டு 2002 பெப்ரவரியில் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யுத்த நிறுத்த உடன்படிக்கையை செய்து கொண்டதால் அவர் மீதும் முஸ்லிம்கள் கடும் ஆத்திரம் அடைந்தனர்.

மேலும் முஸ்லிம்கள் மீது புலிகள் அடாவடித்தனங்களை பிரயோகித்த போது அவற்றைக் கண்டு கொள்ளத் தவறிய ரணில் விக்கிரமசிங்க அரசின் மீதும் முஸ்லிம்கள் ஆத்திரம் அடைந்தனர். இவ்வாறான பின்னணியில் ஏன் முஸ்லிம் காங்கிரஸ் மீண்டும் ரணில் விக்கிரமசிங்க அரசோடு கைகோர்த்தது என்பது தான் பலரும் எழுப்புகின்ற கேள்வியாகும்.

பொத்துவில் படுகொலைகளை அடுத்து கட்சிக்குள் மீண்டும் அதிருப்திகள் உருவாகத் தொடங்கின. அதன் பிறகு புலிகளின் தத்துவ ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்தின் மரணத்துக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் விடுத்த அனுதாபச் செய்தி மீண்டும் முஸ்லிம்களை அதிருப்தியும் ஆத்திரமும் அடையச் செய்தது. இந்த குழப்ப நிலையின் பின்னணியில் முஸ்லிம் காங்கிரஸ் 2007 ஆம் ஆண்டு முற்பகுதியில் பொது சன ஐக்கிய முன்னணி அரசோடு இணைந்து அந்த அரசில் ரவூப் ஹக்கீமுக்கு துறைமுகங்கள் மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சு பதவியும் வழங்கப்பட்டது.

அவர்கள் தனிநபர்களாகவும் குழுக்களாகவும் பேரம் பேசி தமக்கு வேண்டிய அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொண்டார்கள். சமூகம் தொடர்ந்தும் கட்சியின் மீது ஆத்திரம் கொண்டதாகவே காணப்பட்டது. அளுத்கமை உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளிலும் முஸ்லிம்களுக்கு எதிராக மகிந்த ராஜபக்ஷ அரசு குழப்பங்களைக் கட்டவிழ்த்து விட்டபோதும் முஸ்லிம் காங்கிரஸும் அதிலிருந்து பிரிந்து சென்ற குழுக்களும் மஹிந்த அரசோடு தொடர்ந்தும் ஒட்டி உறவாடியதால் இவர்கள் மீதான முஸ்லிம் சமூகத்தின் ஆத்திரம் அதிருப்தி மற்றும் கோபம் என்பன மேலும் வலுவடைந்தது. இவ்வளவு நடந்தும் இவர்கள் அரசுடனேயே இருந்தார்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்களுக்கு வழங்கப்பட்ட கணிசமான இலஞ்சமே என்பதுதான் முஸ்லிம் சமூகத்தின் சந்தேகமாக இருந்தது.

எவ்வாறாயினும் 2015 ஜனவரி 08 ஜனாதிபதி தேர்தலின் போது இவர்கள் அனைவரும் கடைசி நேரத்தில் வந்து மைத்திரிபால சிறிசேனவுடன் சங்கமம் ஆனார்கள். இந்த இணைவு கூட ஒரு நல்ல பேரம் பேசலின் பின்னர்தான் இடம்பெற்றிருக்கலாம் என்பதுதான் சமூகத்தில் தொடர்ந்த சந்தேகம்.

முஸ்லிம் சமூகத்தின் நம்பிக்கையை இழந்த சந்தேகத்துக்குரிய இதே நபர்கள் தான் இன்றைய பாராளுமன்றத்திலும் அங்கம் வகிக்கின்றார்கள்.

மூதூர் பிரதேச முஸ்லிம்கள் தமது வாழ்வாதாரத்தையே இழக்கும் அபாயகரமான ஒரு நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அவர்களை அந்த ஆபத்தில் இருந்து காப்பாற்றுவதற்காக இந்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை ஒரே அணியின் கீழ் கொண்டு வந்து அதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு பல தனி நபர்களும் சமூக அமைப்புக்களும் இதுவரை மேற்கொண்ட எந்த முயற்சிகளும் பலனளிக்கவில்லை.

முஸ்லிம் காங்கிரஸ் இஸ்லாத்தையும் ஐக்கியத்தையும் தனது சுலோகமாகக் கொண்டு வந்தது. புனித குர்ஆன் மற்றும் ஹதீஸ் என்பனவற்றின் அடிப்படையில் அதன் யாப்பு அமைந்துள்ளதாகவும் அந்தக் கட்சி உரிமை கோரியது. ஒழுக்க விழுமியங்களும் கொள்கை பிடிப்பும் கொண்டவர்களுக்குத்தான் நாம் வாக்களிக்கின்றோம் என்று நம்பி மக்கள் முஸ்லிம் காங்கிரஸுக்கு வாக்களித்தனர். தலைவர்களுக்கு இஸ்லாம் வலியுறுத்துகின்ற மற்றும்

(பக்.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL

49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258 077 222 7569
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## நிலையான பொருளாதார இலக்குகள் வரையப்பட வேண்டும்

நிதியமைச்சர் மங்கள சமரவீர தனது கன்னி பட்ஜட்டை சமர்ப்பித்திருக்கிறார். எல்லோரும் எதிர்பார்த்தது போல அடுத்து வரும் தேர்தலை இலக்காகக் கொண்டு இந்த வரவு செலவுத் திட்டம் வரையப்பட்டிருப்பதாக விமர்சகர்கள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

ஜனாதிபதி அடிக்கடி எடுத்துரைக்கின்ற நிலைபேறான அபிவிருத்தி இலக்கை நோக்கியதாக பட்ஜட் அமையவில்லை என்பதே பெரும்பாலானோரின் கருத்தாகும். சுதந்திரத்துக்குப் பின்னர் நாடு 69 வருடங்களை நகர்த்தியுள்ளது. ஆனாலும் நாட்டின் அபிவிருத்தி பட்ஜட்டுக்கு பட்ஜட் பின்னோக்கியே செல்கிறது. சர்வதேச நாணய நிதியத்தின் 2017 ஒக்டோபர் அறிக்கையின்படி நாட்டின் மொத்தக் கடன் தொகை தேறிய உள்நாட்டு உற்பத்தியில் 90 வீதத்துக்கும் மேலாக அதிகரித்துச் செல்லக் கூடும் என்று எதிர்வு கூறியிருந்தது. இந்த வகையில் 90 வீதத்துக்கும் மேற்பட்ட உள்நாட்டு வருமானம் நாட்டின் கடன் மீளளிப்புக்கும் வட்டி செலுத்துவதற்குமே செலவாகியுள்ளது.

கடன் மீளளிக்கும் வல்லமையில் உலகின் 93 நாடுகளில் இலங்கை 91 ஆவது இடத்தில் இருக்கிறது. நாட்டின் வருமானத்தினதும் செலவினத்தினதும் அடிப்படையில் அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாக நாடு வெளிநாட்டுக் கடன் சுமையில் மூழ்கி வருவதையே இது காட்டுகிறது. கடனை அடைப்பதற்கான மூலமாக மேலும் கடனை வாங்குவதே அரசாங்கத்தின் நடைமுறையாக இருப்பதனால் பட்ஜட்டுக்கு பட்ஜட் கடன் சுமை அதிகரிப்பதேயன்றி குறைவதாக இல்லை. நாட்டின் உதவிக் கடன்தொகையை விட பொருளாதாரக் கடன்கள் அதிகரித்துச் செல்வது நாட்டை மீளமுடியாத கடன்சுமையில் தள்ளிவிடுவதற்கான பொறியாக இருக்குமேயன்றி நாட்டை மீட்பதற்கான பொறிமுறையாக அமையப் போவதில்லை. அரச வருமான சமநிலையில் 193 நாடுகளில் இலங்கை 143 ஆவது இடத்தில் இருப்பது இதனைக் காட்டுகின்ற மோசமான குறிகாட்டியாகும்.

உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதனை விட வெளிநாட்டு முதலீடுகளையும் நிதியினையும் பெறுவதிலேயே அரசின் கவனம் அதிகரித்திருப்பதை இம்முறைய வரவு செலவுத் திட்டம் எடுத்துக் காட்டுகிறது. அண்மைக் காலத்தில் நாட்டுக்குள் வந்து சேர்ந்த நீண்ட கால குத்தகைக்கு விடும் முதலீடுகள் நாட்டுக்கு வருமானம் ஈட்டித் தருவதனை விட நாட்டின் செல்வங்களைச் சூறையாடும் விதமாகவே அமைந்திருக்கின்றன. நாட்டின் கடன் சுமையைப் போக்குவதற்கான சிறந்த முதலீடான ஹம்பாந்தோட்டைத் துறைமுகத்திலிருந்து இன்னும் 99 வருடங்களுக்கு இலங்கைக்கு முழுமையான இலாபத்தைப் பெற முடியாது. உல்லாசப் பிரயாணிகளின் போக்கிடமான காலிமுகத் திடலில் உள்ள பல ஹோட்டல்களில் இருந்து இன்னும் இரண்டு தலைமுறைக்கு இலங்கை முழுமையான இலாபம் உழைக்க முடியாது.

நாட்டை நிலையான அபிவிருத்திக்கு இட்டுச் செல்வதற்கான வளங்கள் தற்போது நம்மிடமிருந்து அருகி வருகிறது என்பது நாட்டின் நிலையான அபிவிருத்திச் செயற்பாடு தொடர்பில் அவநம்பிக்கையினை ஏற்படுத்துகிறது. ஆட்சிக்கு வருகின்ற தலைவர்கள் எல்லாமே தம்முடைய காலப்பகுதியில் தாம் சிறப்பாகச் செயற்பட்டதாகக் காட்டுவதற்காக ஊதிப் பெருப்பிக்கின்ற பல விடயங்களை செய்து விட்டுப் போகிறார்களேயன்றி நாட்டின் ஸ்திரமான பொருளாதாரக் கொள்கையொன்றை வகுத்து நீண்ட காலத்தில் நாட்டை அபிவிருத்திப் பாதையில் நகர்த்திச் செல்வதற்கான திட்டங்களை வகுக்கின்ற தலைமைகளாக இருப்பதில்லை என்பது கவலைக்கிடமானது.

அடுத்த தேர்தலுக்குட்பட்ட காலப்பிரிவில் நாட்டை எப்படி நகர்த்திச் செல்வது என்பதை விட அடுத்த நாடுகளை விட முன்னணியில் நாட்டை எப்படி மிளிரச் செய்வது என்பது பற்றிச் சிந்திக்கின்ற தலைமுறையொன்றின் வெற்றிடத்தை இம்முறைய வரவு செலவுத் திட்டம் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறது. நீண்ட கால இலக்கை நோக்கிய அபிவிருத்தித் திட்டமொன்றை தலைசிறந்த வல்லுனர்களின் உதவியுடன் வரைவதற்குரிய காலம் கனிந்து விட்டது என்பதையே இது உணர்த்துகிறது.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றுவதற்கு எம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சனைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல : 96, கிருல வீதி, கொழும்பு - 05
தொலைபேசி : 011-5353635
பெக்ஸ் : 011-5335500
ஈமெயில் : srockwood@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

# வரவு - செலவுத் திட்டம் - 2018

## ஒரு முற்குறிப்பு

• சனத் நந்தசிறி

ஒவ்வொரு வருடத்தினதும் இறுதி நாட்களில் அடுத்து வரும் ஆண்டு எவ்வாறு இருக்கப் போகின்றது? எவ்வாறு நம் வரவு-செலவுகளைத் திட்டமிடப் போகின்றோம் என நமக்குள் ஒரு போராட்டமே நடந்து கொண்டிருக்கும். ஒரு வீட்டுக்கே இந்த நிலமையென்றால், ஒரு நாட்டைப் பற்றி கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.

இலங்கை போன்ற நாடொன்று தனது அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை முன்மொழியும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் எவை? சமாளிக்க வேண்டிய அழுத்த சக்திகள் யார்? நிறைவேற்ற வேண்டிய வாக்குறுதிகள் எவை? என ஏராளமான அழுத்தங்களையும், எதிர்பார்ப்புக்களையும் பூர்த்தி செய்ய வேண்டியதாகவே இருக்கும். அப்பேர்ப்பட்ட வரவு-செலவு திட்டத்தில் தங்களுக்கு சாதகமாக ஏதேனும் உள்ளதா? என ஒவ்வொரு சாமானியரும் எதிர்பார்ப்பது தவறில்லையே.

2018 ஆம் ஆண்டுக்காக அறிவிக்கப்படவுள்ள வரவு-செலவு திட்டத்தின் முதன்மையான நோக்கமே, ''வரவு-செலவு திட்டத்தின் மூலமாக நிதிப் பற்றாக்குறையை குறைவடையச் செய்வதுடன், இலங்கையின் வருமான மூலங்களை அதிகரித்து அதன் ஊடாக, சமூக மற்றும் பொருளாதாரம் சார் உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தலாகும்''.

இந்த வரவு-செலவு திட்டம் இலங்கையில் தேர்தலொன்றுக்கு அண்மித்த காலப் பகுதியில் வரவிருப்பதால், வெறுமனே மக்களுக்கு வழங்கும் கானல்நீர் வாக்குறுதிகள் போலல்லாமல், உண்மையாகவே இலங்கையின் அபிவிருத்திக்கு உகந்ததாக அமையுமெனின், மேற்கூறிய நோக்கம் அல்லது இலக்கு பாராட்டக் கூடியதே!

நிதிப் பற்றாக்குறையைக் குறைப்பது தொடர்பில் அரசு எடுத்துள்ள சில முன்னேற்பாடுகள் இந்த வரவு-செலவு திட்டம் தனியே கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை மாத்திரம் கொண்டிருக்காது என்கிற சிறு நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது. வரி வருமானத்தை அதிகரித்தமை, புதிய இறைவரி சட்டத்தை அமுலாக்கியமை, நிதியாண்டுக்கான பற்றாக் குறையை மொத்த தேசிய உற்பத்தியில் 5.4% இலிருந்து குறைக்க எடுத்த முன்னேற்பாடுகள் என்பவை இதற்கு மிகச் சிறந்த உதாரணங்கள் ஆகும்.

ஆனாலும், அடுத்து வரும் 2018 ஆம் ஆண்டில் இலங்கை முக்கியமான தேர்தல் களங்களை சந்திக்கவிருப்பதால், இதனையொட்டியதாக மக்களுக்கு வழங்கப்படக் கூடிய மானியங்களும், சலுகைகளும் எதிர்பாராத செலவினங்களை அதிகரிக்கவோ அல்லது நிதிப் பற்றாக் குறையை மேலும் சுமையுள்ளதாக செய்யக்கூடுமோ என்கிற ஐயமும் எழாமலில்லை. இவற்றுக்கு மேலதிகமாக, வருடம்தோறும் நட்டம் உழைக்கும் அரச ஸ்தாபனங்களுக்கு இறைக்கப்படும் நிதியின் அளவு இம்முறையும் அதிகரிக்கப்படும் என்பது மேலதிக கவலைக்குரிய விடயமாகும்.

இதுவரை வெளியான நம்பத் தகுந்த கணிப்பீடுகளின் பிரகாரம், 2018 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தில் வாகனங்களுக்கான வரி விதிப்பிலும், அதன் விலையிலும் மாற்றங்களைக் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம், மாற்று எரிபொருள் வாகனங்களுக்கான விலையில் பெருமளவு சலுகைகள் வழங்கப்பட உள்ளதாக நம்பப்படுகிறது. அத்துடன், இலங்கையில் வீடற்றவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கத்தக்க வகையிலான திட்டமொன்றை அறிமுகப்படுத்த உள்ளதுடன், ஒரு மில்லியன் வேலை வாய்ப்புக்களை உருவாக்கக் கூடிய வகையிலான சலுகைகளையும், திட்டங்களையும் அறிவிக்க உள்ளதாகவும் நம்பப்படுகிறது.

2018 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீட்டுக்காக நிதி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டு சட்டமூலம் பின்வரும் துறைகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலும், நன்கொடைகள் தொடர்பிலுமான தரவுகள் வெளிப்படுத்தப்பட்டு இருக்கிறன. அவை -


அரச மொத்த செலவினம் - 3,982 (பில்லியன்)

மீண்டெழும் செலவினம் - 1,308.9 (பில்.)

முதலீட்டு செலவினம் - 668 (பில்.)

வெளிநாட்டு நன்கொடை மூலமான எதிர்பார்க்கை வருமானம் - 1,275 (பில்.)

எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டு கடன் நிதி - [illegible] (பில்.)




இவை அனைத்துமே, வரவு-செலவு திட்டத்தில் வருமானங்களும், செலவினங்களும் எவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன என்பதற்கான சிறு தரவுகளே ஆகும்.

உண்மையில், இலங்கையின் இனிவரும் ஆண்டுகளிலான வரவு-செலவுத் திட்டம் வினைத்திறன் வாய்ந்ததாக அமைவதற்கு வரி முறைமையில் சீர்படுத்தலை கொண்டு வருவதுடன், செலவுகளை வினைத்திறன் வாய்ந்ததாக மாற்றி, நிதி ஒருங்கிணைப்பை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது. இதனையே, இந்த வருடம் இலங்கையின் கொள்கைகளுக்கான ஆய்வு நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கைகளிலும் வலியுறுத்தியிருக்கிறது.

இலங்கையின் 2017 ஆம் ஆண்டின் பொருளாதாரமானது அடைய வேண்டிய இலக்குகளில் உள்ள உண்மையான தடைகளை வெளிக்காட்டி இருக்கிறது எனச் சொல்லலாம். கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் திட்டமிட்டதன் பிரகாரம் அபிவிருத்திகளை அடைய முடியாமைக்கு பிரதான காரணங்களில் ஒன்று பலவீனமாகவுள்ள பொது நிதி முகாமைத்துவம் ஆகும்.

பலவீனப்படுத்தப்பட்ட அல்லது பலவீனமான பொது நிதி முகாமைத்துவத்தின் விளைவாக இலங்கையினால் எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகளை எட்ட முடியவில்லை. இது ஒட்டுமொத்த பொருளாதாரத்தின் வினைத்திறன் முதல் முதலீடு வரை பாதிப்பைத் தந்திருந்தது. எனவே, 2018ம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தில் இவற்றினை எல்லாம் படிப்பினையாகக் கொண்டு பின்வரும் திட்டங்களை உள்ளடக்க வேண்டியது அவசியமாகிறது.

- ஏற்றுமதியை ஊக்குவிப்பதன் மூலமாக வெளிநாட்டு நேரடி முதலீட்டை அதிகரித்தல்,
- தொழிலாளர் செயல்திறனை மேம்படுத்த உதவுதல்,
- மாற்று வருமானங்களை தரும் வழிகளுக்கு நிதிச் சலுகை வழங்கல்,
- சுகாதார நலன்களுக்கான நிதிமுறையை சீர்படுத்தல்,
- வளங்களை திறனாகப் பயன்படுத்துதுடன் வறுமையை குறைக்க வழி செய்தல்.

2018 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தில் கவனிக்க வேண்டிய மற்றுமொரு நிதிசார் சவால் இலங்கையின் ''பொதுப் படுகடன்'' ஆகும். இலங்கையின் அதிகரித்துச் செல்லும் சென்மதி நிலுவை பற்றாக் குறையானது இலங்கையின் கடன் பெறு நிலையை அதிகரிப்பதுடன், அது சார்ந்து பணவீக்க அழுத்தத்தை பொருளாதாரத்தில் உருவாக்குகிறது. இது இலங்கையின் வருமானத்தில் பொது செலவீனங்களுக்காக கொடுக்கப்படும் முன்னுரிமையை குறைத்து, கடனை செலுத்த வருமானத்தைப் பயன்படுத்த நிர்ப்பந்திக்கிறது. இதன் விளைவாக, அபிவிருத்தி செயல் திட்டங்களுக்குப் போதுமான நிதியை ஒதுக்கீடு செய்யவோ அல்லது ஒதுக்கப்பட்ட நிதியை பயன்படுத்த முடியாத நிலையையோ ஏற்படுத்துகிறது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முதல் தற்போதுள்ள நிதி அமைச்சர் வரை வெளிப்படையாகவே ஒப்புக்கொண்ட விடயங்களிலொன்று, இலங்கையின் பொருளாதாரம் தொடர்பில் நிதி ஒருங்கிணைப்பு செயல்பாட்டை மேற்கொள்வது கடினமான ஒன்றாகும் என்பதையாகும். காரணம், கடந்த காலங்களில் பெற்ற பொதுப் படுகடன் கழுத்தை இறுக்கும் நிலையில், அவ்வாறு கடன் பெற்று முடிவுக்கு கொண்டுவரப்பட்ட செயல் திட்டங்கள் அனைத்தும் வினைத்திறன் அற்றதாக அல்லது தோல்வி அடைந்ததாக உள்ளமை மேலதிக பளுவை வழங்குகிறது. இது நிதி ஒருங்கிணைப்பை செய்வதில் சிக்கல் நிலைமையை தொடர்ந்தும் தோற்றுவித்துக் கொண்டே இருக்கிறது.

2020 ஆம் ஆண்டளவில் இலங்கையின் நிதிப் பற்றாக்குறையை மொத்த தேசிய உற்பத்தியில் 3.5% மாகக் குறைக்க வேண்டுமெனின், அதற்கான முன்னெடுப்புக்களை இந்த அரசு 2018 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்திலிருந்தே ஆரம்பிக்க வேண்டியது அவசியமாகிறது. அப்படியாயின், மக்களுக்கு வீண் வாக்குறுதிகளை வழங்கும் வழமையான வரவு-செலவுத் திட்டமாக இது அமையாமல், சீரான பொருளாதார வளர்ச்சியுடன், பொதுப் படுகடனை குறைவடையச் செய்யத் தக்க வகையில் வரவு-செலவுத் திட்டத்தை வடிவமைக்க வேண்டியது அனைவரினதும் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

இம்முறை வரவு-செலவுத் திட்டம் நாட்டின் வருமானத்தை அதிகரிக்கும் பொறிமுறைகளை தன்னகத்தே கொண்டிருப்பதற்கான சமிக்ஞைகள் தென்படுகின்றன. அதேபோல, அவ்வாறு அதிகரிக்கப்பட்ட வருமானமானது தனியே கடன்களையோ, கடனுக்கான வட்டியை செலுத்தவோ முழுமையாக பயன்படுத்தாமல், கல்வித் துறை, சுகாதாரத் துறை உட்பட வளர்ச்சி அவசியமான துறைகளுக்கு வினைத்திறன் வாய்ந்த நிதிப் பங்கீட்டை கொண்டதாக அமைய வேண்டும் என்பதே எல்லோருடைய எதிர்பார்ப்பும் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றவூப் ஸெய்ன்



# முஸ்லிம்களின் அரசியல் எதிர்காலம் ஆபத்தான கட்டத்தை எட்டியுள்ளது

தற்போது அரசாங்கம் முன்வைத்துள்ள இடைக்கால அறிக்கையில் முஸ்லிம் சிவில் சமூகத்தின் யோசனைகள் எதுவும் உள்வாங்கப்படவில்லை என்பது தெட்டத் தெளிவானது. தேசிய ஷூறா சபை, ஜம்இய்யதுல் உலமா, நாட்டின் நாலா புறங்களிலுமுள்ள சிவில் நிறுவனங்கள் தனித்தனியாகவும் கூட்டாகவும் முன்வைத்த அரசியல் யாப்பு தொடர்பான பிரேரணைகள் எதற்கும் நல்லாட்சி அரசாங்கம் மதிப்பளிக்கவில்லை என்பதை முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கையின் உள்ளடக்கம் உணர்த்துகின்றது.

இந்த லட்சணத்திலேயே மாகாண சபை எல்லை மீள்நிர்ணயம் தொடர்பாக சிவில் சமூகம் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்று சிலர் எழுதியும் பேசியும் வருகின்றனர். இதன் உள்ளர்த்தம் மங்கலாகவே உள்ளது.

உள்ளூராட்சி எல்லை நிர்ணய அறிக்கை வெளியிடப்பட்டதன் பின்னர் முஸ்லிம்களின் கோரிக்கைகள் அதில் உள்ளடக்கப்படவில்லை என்ற விமர்சனங்கள் மேலெழுந்தன. அதற்குப் பதிலளித்த அமைச்சர் பைசர் முஸ்தபா, கலந்துரையாடல்களுக்கு சமூகமளிக்காத முஸ்லிம் கட்சிகள் இப்பொழுது அரசாங்கத்தை குற்றம்சாட்டுவதாக ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் தெரிவித்திருந்தார்.

இன்றைய மிகப் பெரிய அரசியல் விநோதம் என்னவெனில், உள்ளூராட்சி மற்றும் எல்லை நிர்ணய விவகாரங்களுக்குப் பொறுப்பாக இருப்பவர் ஒரு முஸ்லிம் அமைச்சர். எல்லை நிர்ணயத்தில் முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்படக் கூடிய சாதக, பாதகங்கள் குறித்த எந்தப் பிரக்ஞையும் அவருக்கு இருக்கவில்லை. அரசாங்கத்தின் பிரதிநிதியாக மட்டுமே தன்னைக் காட்டிக் கொள்ளும் அவர், முஸ்லிம் பிரச்சினைகள் குறித்து எதுவும் அறியாதவர் போல் நடந்து கொள்கிறார்.

முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகளின் நிலைப்பாட்டையே இறுதியாக அரசாங்கம் உள்ளீர்க்கின்றது. வாய்ப்புக்கேடாக, முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகளோ முக்கியமான விவகாரங்களில் அசமந்தமாக இருந்து விட்டு, இறுதித் தருணங்களில் அரசாங்கத்தை குற்றம் சுமத்துகின்றன.

முஸ்லிம் சிவில் சமூகத்தின் குரல்களுக்கு எந்தப் பெறுமானமும் இல்லாது போய்விட்டது. எழுதுகின்றவர்கள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். பேசுகின்றவர்கள் பேசிக் கொண்டே இருக்கிறார்கள். தீர்மானிப்பவர்கள் நாங்கள் என்று மார்தட்டிக் கொள்ளும் அரசியல் கட்சிகளோ அசமந்தமாக இருக்கின்றன.

இந்நிலையில், முஸ்லிம் சமூகத்தைக் காப்பாற்றுவது யார் என்ற கேள்வி தவிர்க்க முடியாதது. அவர் பார்த்துக் கொள்வார், இவர் பார்த்துக் கொள்வார், தேசிய ஷூறா சபை செய்யும், ஜம்இய்யதுல் உலமா செய்யும் என பரஸ்பரம் தமக்குள்ள பொறுப்பை தட்டிக் கழித்து அவரவர் பாட்டிலேயே இருக்கும் நமது தலைமைகளின் வங்குரோத்து நிலை மிக ஆபத்தானது. பொறுப்புக் கூறுகின்ற, வகைகூறும் கடப்பாடு கொண்ட அரசியல் தலைவர்களும் சிவில் நிறுவனங்களும் முனைந்து செயற்படுவதற்கான அடையாளங்கள் எதுவும் தென்படவில்லை.

இதற்கிடையில் அதிகாரக் கையளிப்புக்கான நகர்வுகள் மிக லாவகமாகவும் சூட்சுமமாகவும் முன்னெடுக்கப்படுகின்றன. ''இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. ஆனால், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான துணிவாற்றல் சிங்களத் தலைவர்களுக்கு வேண்டும்'' என்கிறார் சுமந்திரன். ''அடுத்த தீபாவளியை தமிழர்கள் நிம்மதியாகவும் திருப்தியாகவும் கொண்டாடலாம்'' என்கிறார் சம்பந்தன்.

இந்த வாக்கியங்களுக்குப் பின்னாலுள்ள அரசியல் என்ன? தமிழர்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்கான தீர்வுப் பொதி மேசையில் வைக்கப்பட்டுவிட்டதையே இவை குறிப்புணர்த்துகின்றன. தமிழ் டயஸ்பொரா உள்ளிட்டு, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஐரோப்பிய ஒன்றியம் என்பனவும் இந்த அதிகாரக் கையளிப்புக்குப் பின்னால் இருந்து செயல்படுகின்றன.

ஜனவரித் தேர்தலை முன்னிறுத்தி பிரதமரும் ஜனாதிபதியும் இதனை அடக்கி வாசிக்க ஆரம்பித்துள்ளனர். நாம் மகாநாயக்கர்களோடு பேச்சுவார்த்தை நடத்துவோம். இலங்கையைப் பிளவுபடுத்தும் தீர்வுத் திட்டத்திற்கு ஆதரவளியோம் என பிரதமரும் ஜனாதிபதியும் திரும்பத் திரும்பக் கூறுவது உள்ளூராட்சித் தேர்தலை முன்னிறுத்திதான் என்பதை மிக எளிதாக ஊகிக்கலாம்.

தேர்தல் முடிந்த கையோடு மகாநாயக்கர்களின் எதிர்ப்பையும் ஆட்சேபனைகளையும் கடந்து செல்லும் தீர்மானத்தை நல்லாட்சி அரசாங்கம் நிச்சயம் எடுக்கத்தான் போகின்றது. இந்நிலையில், முஸ்லிம்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு யார்? என்ன தீர்வை முன்மொழியப் போகின்றார்கள்? அதனை அடைவதற்கான பொறிமுறை என்ன என்பது தெளிவற்றதாகவே உள்ளது.

இடைக்கால அறிக்கையில் ''வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை தனியொரு மாகாணமாக அமைப்பது குறித்தான யோசனைகளை புதிய அரசியலமைப்பு எடுத்துக் கொள்கின்றது'' என்ற வாசகம் முஸ்லிம்களைத் திடுக்கிட வைக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டணியினர் ஒருமித்த நாட்டிற்குள் தமிழர்களுக்கான அரசியல் தீர்வையே தாம் எதிர்பார்ப்பதாகக் கூறுகிறது. நல்லாட்சி அரசாங்கமோ இதனை ''உச்ச கட்ட அதிகாரப் பகிர்வு'' என்கிறது.

> **இத்தகையதொரு கொதிப்பான அரசியல் சூழலில், தமிழர்களின் தீர்வுத் திட்டத்திற்குக் குறுக்கே முஸ்லிம் காங்கிரஸ் நிற்காது என்று நிஸாம் காரியப்பர் மிக எளிதாகச் சொல்லிவிட்டார். யாரும் யாருக்கு எதிராகவும் குறுக்காய் நிற்கத் தேவையில்லை. ஆனால், மரம் விருட்சமாக வேண்டும் என்பதற்காக கீழே உள்ள செடிகளும் கொடிகளும் அகற்றப்பட வேண்டும் என்பதில் முஸ்லிம் சமூகத்திற்கு உடன்பாடில்லை.**

இச்சொற்கள் உணர்த்தும் பொருள் என்ன? அதிகாரங்கள் மாகாணங்களுக்கோ மாநிலங்களுக்கோ பகிர்ந்தளிக்கப்பட்டால் அது சமஷ்டியாகவோ கூட்டாட்சியாகவோ மாறிவிடும். அங்கு ஒருமித்த நாடு என்பதற்குப் பொருள் இல்லை. ஒருமித்த நாட்டிற்குள் அதிகாரப் பகிர்வு என்பது சமஷ்டியைத்தான் குறிப்பிடுகின்றது. ஆக, இன்றைய அரசியல் தளத்தில் சொற்களின் நுணுக்கமான அரசியலை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இத்தகையதொரு கொதிப்பான அரசியல் சூழலில், தமிழர்களின் தீர்வுத் திட்டத்திற்குக் குறுக்கே முஸ்லிம் காங்கிரஸ் நிற்காது என்று நிஸாம் காரியப்பர் மிக எளிதாகச் சொல்லிவிட்டார். யாரும் யாருக்கு எதிராகவும் குறுக்காய் நிற்கத் தேவையில்லை. ஆனால், மரம் விருட்சமாக வேண்டும் என்பதற்காக கீழே உள்ள செடிகளும் கொடிகளும் அகற்றப்பட வேண்டும் என்பதில் முஸ்லிம் சமூகத்திற்கு உடன்பாடில்லை.

இன்றைய அரசியல் நகர்வுகள் நாளைய முஸ்லிம் சமூகத்தைப் பலிக்கடாவாகவோ பகடைக்காயாகவோ ஆக்கிவிடக் கூடாது. அரசியலமைப்பு மாற்றம் என்பது இலங்கையின் எதிர்கால அரசியல் வரலாற்றில் இனி ஒருபோதும் நிகழப் போவதில்லை. இந்த தகுந்த தருணத்தை கைநழுவ விட்டு விட்டு கடந்து சென்ற பேருந்துக்காக கைகாட்டி நிற்பதில் அர்த்தமில்லை. இந்த உண்மையை இன்றைய அரசியல் தலைவர்களும் சிவில் சமூகமும் புரிந்து செயல்பட வேண்டும்.

பொதுவாக முஸ்லிம் சமூகத்தின் அரசியல் எதிர்காலம் ஆபத்தான கட்டத்தை எட்டியுள்ளது. நாட்டின் எல்லா வகை அரசியல் நகர்வுகளும் காய்நகர்த்தல்களும் முஸ்லிம் சமூகத்தின் நலன்களுக்கு எதிராக உள்ளன. அரசியலமைப்பு மாற்றமாக இருக்கட்டும், தேர்தல் முறை மாற்றமாக இருக்கட்டும், எல்லை மீள்நிர்ணயமாக இருக்கட்டும். எதுவும் நமக்குச் சாதகமாய் இல்லை. இத்தனைக்கும் மத்தியில் முஸ்லிம் கட்சிகளோ தெருச் சண்டையில் ஈடுபட்டுள்ளன.

எல்லை மீள்நிர்ணயத்தின் பின்னரான அரச வர்த்தமானி அறிவித்தல் வெளிவருவதற்கு சில நாட்களுக்கு முன்பாகவே நுவரெலியா மாவட்டத்தில் இரு பிரதேச சபைகளை புதிதாக உருவாக்கிக் கொள்ள திகாம்பரத்தாலும் மனோ கணேஷனாலும் முடிந்தது. ஆனால், அம்பாறையில் சாய்ந்தமருது, கல்முனை பிரதேச சபைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுசொல்ல ஹக்கீமாலும் ரிஷாதாலும் முடியாமல் போய்விட்டது. இதுவே எமது அரசியல் வங்குரோத்தின் தெளிவான அடையாளம்.

இலங்கை முஸ்லிம்கள் சுமாராக ஒரு நவீன 'தைம்' சமூகமாகவே மாறி வருகின்றனர். ஜாஹிலிய்யக் காலத்தில் அறபுத் தீபகற்பத்தில் 'தைம்' என்றொரு கோத்திரம் இருந்தது. அவர்கள் அளவில் பெரிய கோத்திரமாக இருந்தபோதும், அவர்களின் கருத்துக்கு யாரும் மதிப்பளிப்பதில்லை. அன்றைய சமூக அமைப்பில் அரசியல், பொருளாதார, பாதுகாப்பு தொடர்பான கூட்டங்கள் கோத்திரங்களுக்கு இடையே நடைபெறுகின்றபோதும் தைம் கோத்திரத்திற்கு யாரும் அழைப்பு விடுப்பதில்லை.

அத்தி பூத்தாற் போல எப்போதாயினும் ஒரு அழைப்பு வரும். கலந்து கொள்கின்ற இந்தக் கோத்திரத்தவர்களும் கூட்டத்தில் செல்வாக்குச் செலுத்தும் அளவு கருத்துச் சொல்வதில்லை. அவ்வாறு சொன்னாலும் அவை எடுபடுவதுமில்லை. கூட்டங்களில் அவர்கள் கலந்துகொள்வதும் கலந்து கொள்ளாமல் இருப்பதும் ஏனைய கோத்திரங்களைப் பொறுத்தவரை ஒன்றுதான்.

அறபுத் தீபகற்பத்தில் முக்கிய விவகாரங்கள் குறித்து இவர்களிடம் எந்தக் கருத்தும் கோரப்படுவதுமில்லை. கூறினால் அவை ஏற்கப்படுவதுமில்லை. இதேபோன்றுதான் இன்று இலங்கை முஸ்லிம்கள் வாழ்கின்றனர்.

சுயநலம் கொண்ட அரசியல்வாதிகளும் ஆழ்ந்த சமூக அக்கறையற்ற சிவில் தலைமைகளும் என முஸ்லிம் சமூகம் மிக மந்த கதியிலேயே இயங்கிக் கொண்டிருக்கிறது. வில்பத்து விவகாரம், ஞானசாரவின் அச்சுறுத்தல்கள் குறித்து கலந்துரையாட நேரம் ஒதுக்காத ஜனாதிபதியுடன் கட்டாருக்குச் சென்ற முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் அங்கு ஜனாதிபதியுடன் பல்லிழித்துக் கொண்டிருக்கும் காட்சி ஊடகங்களுக்கு வந்தது. ஜனாதிபதியுடன் இத்தனை நெருக்கமாக இருக்கும் இவர்கள், முஸ்லிம்களின் பிரச்சினைகள் குறித்து கறாராகப் பேசுவதற்கு ஏன் தயங்குகிறார்கள் என்பதுதான் ஆச்சரியமான கேள்வியாகும்.

முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலம் குறித்து இன்றே சிந்திப்போம். காலம் கடந்து கைசேதப்படுவதால் எதுவும் நிகழ்ந்துவிடப் போவதில்லை. ■

---

# இலங்கையின் முதல் அரையாண்டுப் பொருளாதாரம் 3.7 வீதமாக வீழ்ச்சி

- உலக வங்கி



ஐடா ஸ்வராய்

2017 இன் முதல் அரையாண்டுப் பொருளாதாரம் 3.7 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது என உலக வங்கி தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. 2017 முதல் அரையாண்டுப் பொருளாதார வளர்ச்சி குறித்து உலக வங்கி சமீபத்தில் அறிக்கையொன்றை வெளியிட்டது. அதில் உலக வங்கியின் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான வதிவிடப் பணிப்பாளர் ஐடா ஸ்வராய் மற்றும் மாலைதீவுகளுக்கான சிரேஷ்ட வதிவிடப் பொருளியலாளர் ரல்ப் ஆகியோர் இலங்கை பொருளாதார வளர்ச்சி குறித்து விளக்கமளித்தனர்.

மொத்த தேசிய உற்பத்தியுடன் நோக்குகையில் (2016 இல்) ஒப்பீட்டளவில் அதிக பொதுக் கடன் காணப்படுகின்றமை அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் மற்றும் அரச முகவர் அமைப்புகளுக்கு வழங்கப்படுகின்ற திறைசேரி உத்தரவாதங்கள் ஆகியவற்றினால் நிதி அபாயங்களானது 2017 ஆம் ஆண்டின் முதல் 5 மாதங்களிலும் உயர்வானதாகவே காணப்பட்டது.

குறிப்பிடத்தக்க சவால்கள் காணப்பட்ட போதும் 2017 இல் இலங்கை பரந்தளவிலான, திருப்திகரமான பொருளாதார செயல்திறனைக் காண்பிக்கிறது. 2017 இற்குள் பொருளாதார வளர்ச்சியானது 4.6 சதவீதத்தை அடைந்து, நடுத்தர காலத்திற்குள்ளாக 5 சதவீதத்தை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2017 மே மாதத்தில் ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து ஜீ.எஸ்.பி.+ வரிச் சலுகையை இலங்கை மீளப் பெற்றுக்கொண்டது. இதேவேளை, இலங்கை அரசாங்கமானது பொருளாதார சீர்திருத்த நிகழ்ச்சிநிரல் தொடர்பில் அதன் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளதுடன், கடந்த செப்டம்பர் மாதத்தில் புதியதொரு உள்நாட்டு வருமான வரிச் சட்டத்தை நிறைவேற்றியுள்ளது. இது இலங்கையின் பொருளாதார கொள்கை வகுப்பில் முக்கியமானது என உலக வங்கியின் இந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை அதன் தூரதரிசனப் பார்வையாக இலட்சிய வேட்கையுடன் வெளியிட்டுள்ள விஷன் 2025 இல் கோடிட்டுக் காட்டியுள்ளது போல் மேல், நடுத்தர வருமான நிலையை ஈட்டும் பயணமானது [illegible] போட்டித் தன்மையிலும் [illegible]விடைந்த தரப்பினரில் அதிகமானவர்களை ஒதுக்கி விடாமல் இருப்பதை உறுதி செய்துகொண்டு ஏற்றுமதியை தலைமையாகக் கொண்டு வளர்ச்சி மாதிரியை முன்னெடுத்துச் செல்கின்ற இயலுமைகளிலும் தங்கியுள்ளது எனவும் அறிக்கை கூறுகின்றது.

அதேவேளை, இம்மாற்றமானது அதற்கேயுரிய அபாயங்களையும் வாய்ப்புக்களையும் கொண்டுள்ளது. பேரண்டப் பொருளாதார அபாயங்கள் தொடர்பில் இலங்கையை மேலும் நெகிழ்வுடையதாக மாற்றும் ஆனால், புதியவற்றுக்கு ஆட்படுத்தும் உலக வங்கியின் கொள்கை இலங்கைக்கு உதவும் என இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான உலக வங்கியின் வதிவிடப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இலங்கையில் அடிக்கடி அதிகரித்து வருகின்ற இயற்கை அனர்த்தங்கள் குறித்து அரசாங்கம் முன்னெச்சரிக்கையோடு செயல்பட வேண்டும் எனவும் இடர் அபாயங்களை முகாமைத்துவம் செய்வது முக்கியமானது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பேரண்ட நிதியத்தில் ஸ்திரத் தன்மையைப் பேணுதல் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் அதன் தயார் நிலைத் தன்மையை அதிகரித்துக் கொள்ளுதல் ஆகியவற்றின் மூலமாக இலங்கை அதன் இலக்கை அடைந்து கொள்ள முடியும் எனவும் வதிவிடப் பணிப்பாளர் அங்கு கருத்து வெளியிட்டார். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடுவது நலம்



இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

## வேற்றுமையில் ஒற்றுமை தேசத்தின் பலம்

2005 இலும் நாம் ஒரு போட்டியை நடாத்தினோம். வேற்றுமையில் ஒற்றுமை தேசத்தின் பலம் என்ற கருப்பொருளில் அன்று சித்திரம் வரைந்த மாணவர்களுக்கு இன்று 22 வயது. ஆனாலும் நாம் இன்னும் வேற்றுமையில் ஒற்றுமை காணும் சமூகமொன்றைக் கட்டியெழுப்ப தடுமாறி வருகின்றோம். நாம் பிரிவினைவாத யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தோம் என்றாலும் பிரிவினைவாத சிந்தனை படைத்த கருத்துக்களிலிருந்து சமூகத்தை விடுவிக்க முடியவில்லை. சிறியதொரு கூட்டம் தங்களது குறுகிய நோக்கங்களை நிவர்த்தி செய்து கொள்வதற்கு இனவாதத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

இம்முறை போட்டிக்கு 9000 இற்கும் அதிகமான சித்திரங்கள் தீட்டப்பட்டுள்ளன. 1200 இற்கும் அதிகமான கட்டுரைகள் வரையப்பட்டுள்ளன. இவற்றில் மதவாதமோ, குல பேதமோ, வகுப்பு வாதங்களோ இல்லை. இந்நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற வலியும் தேவையும் அவற்றைப் படைத்த மாணவர்களின் உள்ளங்களிலிருந்து வெளிக்காட்டப்பட்டுள்ளன. நாம் முகம்கொடுத்த பேரனர்த்தங்களை இப்பிள்ளைகளுக்கும் உரித்தாக்கிக் கொடுக்க விரும்புகிறோமா? சிங்கள, முஸ்லிம், தமிழ், கிறிஸ்தவம் என நாம் வெவ்வேறு பட்ட இனங்களாக இருந்தாலும் நாம் ஒரே தேசம், ஒரே இனம் என்பதை மறந்து விடக்கூடாது.

1946 செப்டம்பர் 06 ஆம் திகதி டி.எஸ். சேனாநாயக்க தெரிவித்த கருத்து இங்கு நோக்கத்தக்கது. "நாம் சிங்களம், தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவம் என்று பிரிந்திருந்தாலும் நாம் ஒரே இனம், இலங்கை இனத்தை நான் ஆசிர்வதிக்கிறேன்" என்றார். பண்டாரநாயக்கவின் தலைமையிலான சிங்கள மகா சபாவில் பொன்னம்பலம் அருணாசலம், நடேசனின் தமிழர் கூட்டமைப்பு, சொக்மனின் பேர்கர் சங்கம், ஜாயாவின் முஸ்லிம் லீக், சேர் ராசிக் பரீதின் சோனகர் சங்கம் என எல்லா சமூகங்களையும் பிரநிதித்துவப் படுத்தக் கூடிய கட்சிகள் அமைப்புக்கள் ஒன்றிணைந்திருந்தன. நாம் சுதந்திரம் பெறும் வேளையில் அறிவு ரீதியான போராட்டத்தையே முன்னெடுத்தோம். வெள்ளையர்கள் அன்று, எம்மை பார்த்து நீங்கள் பிளவுபட்டுள்ளதொரு சமூகம், உங்களுக்கு சுதந்திரம் வழங்க முடியாது, சுதந்திரத்தை வழங்கினால் சண்டையிட்டுக்கொள்வீர்கள், முதலில் ஒன்றிணையுங்கள் என்றார்கள்.

எனவே நாம் ஒன்றுபட்டால் நிறைய விடயங்களை சாதிக்கலாம். ஒன்றுபட்டால் நல்லதொரு பயணத்தை முன்னெடுக்கலாம். சிங்கப்பூரைப் பாருங்கள். அன்று இனரீதியாக பிளவுபட்டதொரு சமூகத்தையே லீ குவான்யூ பொறுப்பேற்றார். "வன் கண்ட்ரீ, வன் நேஷன்" என அவர் கூறினார். அவர் பொறுப்பெடுத்த சிங்கப்பூரை ஐக்கியப்படுத்தினார். அது மாத்திரமல்லாமல் அன்று சிங்கப்பூரை இலங்கையாக மாற்றுவதாக அவர் கூறினார். சிங்கப்பூர் இன்று எமது நாட்டையும் விட பொருளாதார, சமூக ரீதியில் முன்னேற்றம் பெற்றுள்ளது.

கடந்த காலத்தில் இலங்கை வந்த லீகுவான்யூ இலங்கையின் பின்னடைவுக்கு காரணம் இனவாதம் எனக் குறிப்பிட்டார். ஒரு சிலர் தமது அரசியல் லாபங்களுக்கு ஏற்படுத்தும் இன, மதவாத கருத்துக்கள் செயற்பாடுகளை தோற்கடிக்கும் பொறுப்பும் கடப்பாடும் எமக்குள்ளது. அதற்கு இந்நாட்டின் பெரும்பான்மை கூட்டத்தின் குரல் ஓங்க வேண்டியுள்ளது. இந்நாட்டிற்கு அன்பு செலுத்துகின்ற மக்கள் இவற்றுக்கெதிராக குரல் எழுப்ப வேண்டும். இன்று தருணம் பார்த்து இனவாதத்தை விதைக்கிறார்கள். இப்படி சென்றால் எமக்கு முன்னேற முடியாது.

இன்று ஊடகங்களைப் பாருங்கள். சிங்கள பத்திரிகை ஒரு உலகத்தையும், தமிழ், ஆங்கில பத்திரிகைகள் வெவ்வேறு உலகங்களையும் உருவாக்கிக் கொண்டுள்ளன. இவ்வாறு பிளவுபட்டு முன்னசுர முடியாது. பல்வகைமை எமக்கொரு வளம். மிகப் பெரிய இந்திய நாட்டிற்கு பல்வேறு இனங்களை வைத்துக்கொண்டு முன்னேற முடிந்ததென்றால், சீனாவுக்கு கூடிய சனத்தொகையொன்றுடன் உலகில் வல்லரசுக் கனவை நோக்கி நகர்ந்துகொண்டிருக்க முடியும் என்றிருந்தால் ஏன் இச்சிறிய நாட்டிற்கு முன்னேற முடியாமல் உள்ளது. லீ குவான்யூ இந்திய வம்சாவளியினரை இந்திய பொருளாதாரச் சந்தையை வென்றெடுக்க பயன்படுத்தினார், சீன வம்சாவளி மக்களை சீன பொருளாதார சந்தையை வெற்றிகொள்ள பயன்படுத்தினார், இஸ்லாமிய உலகை வெல்ல முஸ்லிம்களை பயன்படுத்தினார். பல்வகைமையை ஆசிர்வாதமாகவும் வளமாகவும் கொள்ள வேண்டும்.

# பிரச்சினை இனங்களுக்கிடையே மட்டுமல்ல, இனங்களுக்குள்ளாலும் இருக்கிறது

பெரும்பாலான விமர்சகர்கள் இலங்கையின் தேசியப் பிரச்சினையை சிங்களவருக்கும் சிங்களவரல்லாத சிறுபான்மை இனங்களுக்குமிடையிலான பிரச்சினையாகவே பார்க்கிறார்கள். இந்தப் பிரச்சினைக்குள்ளால் இனம் மட்டுமன்றி ஜாதி, மதமும் பிணைந்திருக்கிறது என்ற கருத்தையே நான் கொண்டிருக்கிறேன். இன பேதத்தைப் போல புற அடையாளங்களைக் காட்டாமல் நீறு பூத்த நெருப்பாக இது உள்ளூர மறைந்திருக்கிறது.

71 ஏப்ரல் கிளர்ச்சியில் இதனை நான் கண்டு கொண்டேன். அநேகமான விமர்சகர்கள் இதனை ஒரு வகுப்புவாதக் கிளர்ச்சியாகவே பார்த்தனர். இதற்குள்ளால் ஜாதி ஒரு முக்கிய விடயமாக இருந்தது கவனிக்கப்படவில்லை. ஆனால் அப்போது ஆட்சியில் இருந்த ஐக்கிய முன்னணி அரசு இதனைத் தெரிந்து வைத்திருந்தது. கைது செய்யப்பட்ட இளைஞர், யுவதிகளை புனர்வாழ்வுக்காகத் தெரிவு செய்யும்போது அவர்களது ஜாதியும் கவனத்தில் கொள்ளப்பட்டது. எனது புரிதலும் அவ்வாறே இருந்ததால் சாதி பற்றிய எனது தேடல் இதனூடாக ஆரம்பித்தது.

தேவையற்ற பிரச்சினையை உருவாக்குபவனாக அப்போது பலரும் என்னை விமர்சித்தார்கள். சமூகவியலாளர்களும் கூட சாதியம் பற்றிப் பேசுவதை தவிர்ந்து கொண்டார்கள். இதுபற்றி நான் பேசத் தொடங்கியபோது இவர்களில் பலரும் தமது அனுபவங்களை என்னுடன் பகிர்ந்து கொண்டார்கள். கிளர்ச்சியினால் நான் சிறைவாசம் அனுபவித்த வேளையில் அங்கிருந்த இந்தப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்களுடன் சுதந்திரமாக உரையாடக் கிடைத்ததில் எனது கருத்தை உரசிப் பார்க்க முடிந்தது. இதனூடாக சாதிப் பிரச்சினையின் பாரதூரத்தை நான் வெகுவாக உணர்ந்து கொண்டேன்.

இதன் விளைவாக இரண்டாவது கிளர்ச்சியின் இயல்பை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. வடக்கின் தமிழ் கிளர்ச்சியின் போதும் இனப் பிரச்சினைக்கு அப்பால் அதற்குள் அடங்கியிருந்த சாதிப் பிரச்சினையை என்னால் அடையாளம் காண முடிந்தது. விஜே வீரவும், பிரபாகரனும் உயர்ந்த சாதியினராக இருக்கவில்லை. விஜே வீர கராவ குலத்துக்கும் பிரபாகரன் கரயார் சாதிக்கும் உரித்தானவர்கள். கரயார் என்பதுதான் சிங்களத்தில் கராவ என்று வழங்கப்படுகிறது.

இந்த இரு கிளர்ச்சிக் குழுக்களதும் மற்றுமொரு பொதுவான அம்சம், இரண்டு தலைவர்களுமே தமது பிரதானிகளாக தம்மை விடக் குறைந்த சாதியினரையே நியமித்திருந்தனர். விஜே வீரவின் இரண்டு கிளர்ச்சிகளிலும் போலவே பிரபாகரனுடைய கிளர்ச்சியிலும் தரைப்படையில் இந்தச் சாதியினரே நியமிக்கப்பட்டனர். இவர்கள் இருவரினதும் விடுதலைக் கோஷம், உயர்ந்த சாதியினரை விட குறைந்த சாதியிடத்திலேயே வேகமாகப் பரவியது. இதனால் ஏற்பட்ட சேதங்களும் இந்தச் சாதியிலேயே பாதிப்புச் செலுத்தியது.

யுத்த காலங்களில் யாழ்ப்பாண தீபகற்பம் பிரபாகரனின் ஆதிக்கத்தில் இருந்த பொழுது நிலவிய குற்றவியல் சட்டக்கோவையில் இலங்கையின் சட்டக்கோவையில் இல்லாத, சாதி வேறுபாட்டுக்கு எதிரான சட்டங்களும் சீதன முறைக்கு எதிரான சட்டங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தமை எனது கருத்துக்கு வலுவூட்டின.

யுத்தம் நடைபெற்ற காலங்களில் முகாம்களில் தஞ்சமடைந்த உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரில் அநேகமானோர் குறைந்த சாதியினராகவே இருந்தனர். உயர்ந்த சாதியினர் முகாம்களுக்குச் செல்லவில்லை. அவர்கள் தமது உறவினர்களுடன் வேறு இடங்களில் தங்கினர். உயர் குலமான வெள்ளாளர் குலத்தைச் சேர்ந்தவர்கள் பிரபாகரனுடைய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு வெளிநாடு சென்றனர் அல்லது கொழும்புக்குக் குடிபெயர்ந்தனர்.

உள்நாட்டு யுத்தம் முடிந்த பிறகும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் முகாமை விட்டு தமது இருப்பிடங்களுக்குத் திரும்பவில்லை. தூரப் பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்தவர்களும் மீண்டும் முகாமுக்குத் திரும்பி வந்தார்களேயன்றி தமது சொந்த இருப்பிடங்களுக்குச் செல்லவில்லை.

இது தொடர்பில் பேராதனைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் காலிங்க டியூடர் டி சில்வா இந்திய சமூகவியலாளர் ஒருவருடன் இணைந்து ஆய்வொன்றை மேற்கொண்டிருந்தார். இந்த ஆய்வின்படி பிரபாகரன் இல்லாத யுகத்தில் மீண்டும் சாதி வேறுபாடு தலைதூக்கலாம் என்ற அச்சத்தினால் இவர்கள் தமது சொந்த இடங்களில் மீளவும் குடியேறுவதை விட முகாமிலேயே தங்கியிருப்பது மேல் எனக் கருதியிருப்பது தெரிய வந்துள்ளது.

ஜேவிபியின் இரண்டாவது கிளர்ச்சிக்குப் பின்னர் ஜனாதிபதி பிரேமதாசவினால் நியமிக்கப்பட்ட இளைஞர் அமைதியின்மைக்கான காரணங்களைக் கண்டறிவதற்கான ஆணைக்குழு முன்வைத்த அறிக்கையிலும் இந்த இரு கிளர்ச்சிகளுக்குமான [illegible] சாதி [illegible] செலுத்தியிருப்பது [illegible] உள்ளது.




இன மத பேதங்களுக்கு முன்னரே இலங்கையில் மக்களைப் பிரிப்பதற்கான காரணியாக சாதிகள் இருந்துள்ளன. இலங்கையின் சாதியமைப்பு பற்றிய முதலாவது ஆய்வான Cast in modern Ceylon ஐ மேற்கொண்ட அமெரிக்கரான ப்ரைஸ் ரயன் தனது ஆய்வுக் குறிப்பில், இலங்கையின் பௌத்த சாசன, குடும்ப, மானிய முறைகளுக்குள்ளால் சாதியம் சம்பந்தப்பட்டிருக்கும் விதத்தையும் சாதிகளுக்கிடையே இருக்கின்ற தொடர்புகளையும் ஆழமாக விபரிக்கிறார்.

சிங்கள சாதி முறை பற்றி எழுதப்பட்ட பைபளாகக் கருதப்படுகின்ற இந்நூலில், 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இருந்து 1925 வரை நடைபெற்ற மோதல்களுக்கெல்லாம் இன முரண்பாட்டை விட சாதிபேதமே காரணமாக இருந்திருக்கிறது என்று அவர் குறிப்பிடுகிறார். அக்காலத்தில் சாதிதான் இனமாகக் கருதப்பட்டது. இவர் எம்மினத்தவர் என்பதனூடாக சாதியே கருதப்பட்டது. சாதிக்குப் பின்னர்தான் இனமும் மதமும் மோதலுக்குரிய காரணிகளாக மாறின.



1963 இல் A Divided Nation என்ற நூலை எழுதிய பீ.எச்.பாமர், அன்றுவரை அரசியலின் பிரதான சக்தியாக சாதியே இருந்தது என்று குறிப்பிடுகிறார். இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமக்கு சொற்ப அறிவே இருந்ததாகவும், பாமருடைய இந்த நூலை வாசிக்கக் கிடைத்திருந்தால் சோல்பரி கமிஷன் வேறு விதமாக சிந்தித்திருக்க வாய்ப்பிருக்கிறது எனவும் இந்நூலுக்கு வழங்கியுள்ள முகவுரையில் சோல்பரி பிரபு குறிப்பிட்டிருக்கிறார்.

ப்ரைஸ் ரயனுக்குப் பின்னர் காலிங்க சில்வா வரை எவருமே சாதிப் பிரச்சினையைப் பற்றிப் பேசுவதற்குத் துணியவில்லை. வெடிக்கும் நிலையிலுள்ள இந்தப் பிரச்சினையில் தலையிடுவதில் இலங்கையின் சமூகவியலாளர்கள் கூட அக்கறை காட்டவில்லை. இதற்கான துணிச்சலும் அவர்களுக்கு இருக்கவில்லை. எமது சிந்தனை வறுமைக்கு இந்தப் படித்தவர்களும் காரணம்.

1971 கிளர்ச்சிக்கும் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கும் இடையிலான தொடர்பினை ஜான்ஸி ஜிகின்ஸ் தனது cast and family in the politics of Sinhalese 1947-1976 என்ற ஆய்வில் குறிப்பிடுகிறார். இலங்கையின் அரசியல் கட்சிகள் வேட்பாளர்களை நியமிக்கும் போது சாதியம் பெறும் முக்கியத்துவம், தாரா குமாரசாமியுடைய Parliamentary Representation in Sri Lanka 1931-1986 எனும் ஆய்வில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநரின் மனைவியான இவருடைய இந்த ஆய்வு இதுவரை நூலுருப் பெறவில்லை.

இன மத பேதங்களுக்குரிய அங்கீகாரத்தை இல்லாதொழிக்காமல் இன, மதங்களுக்கிடையே சகவாழ்வை ஏற்படுத்த முடியாது. பிரச்சினை இனங்களுக்கிடையே மட்டுமல்லாமல் இனங்களுக்குள்ளாலும் இருக்கிறது. இனங்களுக்குள்ளால் முளைவிட்டிருக்கும் பிரச்சினைக்கு பிரதான காரணியாக சாதியம் இருக்கிறது. தமிழ் சமூகத்துக்கும் சிங்கள சமூகத்துக்கும் இது பொதுவானது. மனித கௌரவத்துக்கே இழுக்கான இந்த சாதி முறை மறுமலர்ச்சி இயக்கத்தின் கலந்துரையாடல்களில் முக்கிய அங்கம் வகிக்கிறது.

நிலச் சுவாந்தர் காலப்பிரிவில் மக்களின் தொழிலை வைத்து அவர்கள் உயர்ந்த சாதியாகவும் தாழ்ந்த சாதியாகவும் பாகுபடுத்தப்பட்டனர். உயர்ந்த சாதியினருக்குப் பணிவிடை செய்யும் [illegible] பிரிவினராக தாழ்ந்த சாதியினர் கருதப்பட்டனர். சிங்கள சாதி முறையில் கொவி சாதியும் தமிழ் சாதி முறையில் வெள்ளாளர் சாதியும் உயர்ந்தவர்களாக மதிக்கப்பட்டனர். தமிழ் சாதிமுறை போல சிங்கள சாதிமுறையில் மதம் தாக்கம் செலுத்தாவிட்டாலும், சாதி என்பது பிறப்பால் வருகின்ற ஒன்று, அதனை மாற்ற முடியாது என்ற கோட்பாடு இங்கும் நில வியது. ஒவ்வொரு சாதியினதும் நடை, உடை, பாவனையைத் தீர்மானிக்கும் காரணியாக சாதி விளங்கியது.

இந்தச் சாதி முறைக்கெதிரான செயற்பாடுகளை சிங்கள வீரர்களன்றி பரதேசிகளாகக் கருதப்பட்ட ஆங்கிலேயர்களே முன்னெடுத்தார்கள். நிர்வாக, பொருளாதார முறைகளிலும், சட்டத்தின் முன் சகலரும் சமம் என்ற நீதி முறையிலும் அவர்கள் முன்னெடுத்த மாற்றங்களினால் சாதிமுறை அழிந்து போகாவிட்டாலும் உயர்வு தாழ்வு வேறுபாடு வலுவிழந்தது. சுதந்திரத்தின் போது தேசியத்தைக் கட்டியெழுப்புவதில் அக்கறை காட்டுவதற்குத் தவறியதால் இதனை முழுமையாக ஒழிக்க முடியவில்லை.

தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு சகலரும் சமானமாக மதிக்கப்படலும் சகலருக்கும் உரிய கௌரவம் வழங்கப்பட வேண்டும் என்பதும் கட்டாயமானது என்பதால் தான் மறுமலர்ச்சி இயக்கத்தின் செயற்பாடுகளில் சாதி வேறுபாட்டை ஒழித்தல் முக்கிய இடம்பெறுகிறது. இது தொடர்பான சமூகத்தின் அறிவு மட்டத்தை உயர்த்த முடியுமென்றிருந்தால் அனைத்துத் துறைகளிலும் மறுமலர்ச்சியையும் முன்னேற்றத்தையும் எழுச்சியையும் காண முடியும்.

இன மத பேதங்களுக்கப்பால் சாதியும் மக்களைப் பிரிக்கின்றதொரு விடயமாக இருப்பதை எந்த அரசியல் சக்தியும் இதுவரை கருத்தில் எடுக்கவில்லை. சிங்கள அரசியல் இயக்கங்களும் தமிழ் அரசியல் இயக்கங்களும் இதனையொரு பாரதூரமான பிரச்சினையாகக் கருதவில்லை. இடதுசாரிக் கட்சிகளும், பிரபாகரன், விஜே வீரவின் இயக்கங்களும் கூட இதனைப் பொருட்படுத்தவில்லை. இவர்கள் எல்லோரையும் விட மாறுபட்ட விதத்தில் மறுமலர்ச்சி இயக்கம் சாதியை ஒழிப்பதனை ஒரு நிபந்தனையாகவே கொண்டு செயலில் இறங்கியிருக்கிறது.

கலாவெவயில் நடந்த சந்திப்பொன்றில் இந்தக் கருத்துக்களை நான் கூறியபோது அங்கு வந்திருந்த பௌத்த மதகுரு இதனை மறுத்துப் பேசினார். இந்தக் கருத்துக்கள் இலங்கையின் கலாச்சாரத்துக்குப் பொருந்தாது என்றும், இங்கு வந்துள்ள யாருமே இந்தக் கருத்தை ஏற்க மாட்டார்கள் என்றும் கூறி, அப்படி யாரும் இவருடைய கருத்துக்களை ஏற்றுக் கொள்வதாக இருந்தால் தமது கைகளை உயர்த்திக் காட்டுமாறும் கேட்டுக் கொண்டார். அவரே ஆச்சரியப்படும் வகையில் அங்கு வந்திருந்த அனைவருமே என்னுடைய இந்தக் கருத்துக்கு ஆதரவாக கைகளை உயர்த்தினர். பிக்குவுடைய கருத்தை விமர்சித்து சபையில் கருத்துத் தெரிவித்தவர்களுள் ஒருவர், பிக்கு யதார்த்த உலகில் வாழவில்லை என்று தெரிவித்தார்.

வந்திருந்தவர்களில் சிலராவது பிக்குவுடைய கருத்தை ஆதரித்திருந்தால் மறுமலர்ச்சி இயக்கத்துக்கான பலத்த அடியாக அது அமைந்திருக்கும். இதற்கு மாற்றமாக அவர்கள் அனைவருமே மறுமலர்ச்சி இயக்கத்தினைப் பாதுகாத்து, அதனை வளர்ப்பதற்கு முன்வந்தமை, அவர்கள் இந்தக் கருத்துக்களை அங்கீகரிக்கிறார்கள் என்பதனையே காட்டுகிறது. கட்டியெழுப்பப்படுகின்ற புதிய சமூகத்தின் வெளிப்பாடாகவே இதனை நான் கருதுகின்றேன்.

மரணத் தருவாயில் இருக்கின்ற மக்களுக்கு உணர்வூட்டி உயிர் பெறச் செய்வதற்கும், அவர்களை ஒன்றிணைத்து தேசியத்தைக் கட்டியெழுப்பி சீரானதொரு மாற்றுச் சமுதாயமொன்றை உருவாக்குவதற்கும் மறுமலர்ச்சி இயக்கம் எடுத்து வரும் முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும் என்பதற்கான சுபசோபனங்களே தற்போது வெளிப்பட்டு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாநிதி சுஜாதா கமகே களுத்துறையை பிறப்பிடமாக கொண்டவர். இவர் தனது ஆரம்பக் கல்வியை களுத்துறை பாலிகாவிலும், உயர்கல்வியை பேராதனை மியுசியஸ் கல்லூரியிலும் பெற்றுள்ளார். பேராதனை பல்கலையில் இரசாயனவியல் விஞ்ஞா னப் பட்டத்தை பூர்த்திசெய்துள்ள கலாநிதி கமகே, இரசாயனவியல் விஞ்ஞானம் தொடர்பில் ஜயவர்தனபுர பல்கலையில் முதுமாணிப் பட்டத்தையும் அதே துறையில் கனடாவில் கலாநிதி பட்டத்தையும் நிறைவுசெய்துள்ளார். அதனை தொடர்ந்து 1985இல் கொழும்பு பல்கலையில் விரிவுரையாளராக இணைந்து கொண்டுள்ளார். சில காலம் அமெரிக்காவில் வசித்த அவர் அங்கு அரச கொள்கை முகாமைத்துவம் தொடர்பான துறையில் மேலதிக கற்கைகளை தொடர்ந்தார்.

மூன்றாம் நிலை கல்வி ஆணைக்குழுவின் பணிப்பாளராகவும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஆலோசகராகவும் பணியாற்றியுள்ள இவர், தற்பொழுது கல்வியமைச்சின் பரீட்சை முறை சீர்திருத்தப் பணியில் ஆலோசகராகவும், பாராளுமன்ற அரசியலமைப்பு வழிநடத்தல் குழுவின் சிறு கட்சிகளை பிரநதித்துவப்படுத்தும் ஆலோசகராகவும் செயற்பட்டு வருகின்றார்.

கல்வி, ஆராய்ச்சி, அறிவியல் தொடர்பில் மிகுந்த ஈடுபாடுள்ள கலாநிதி கமகே, கழிவு முகாமைத்துவம் தொடர்பாகவும், தரவுகளை பயன்படுத்தி ஆராய்ச்சிகளை மேற்கொள்வதிலும், தேர்தல் முறை தொடர்பிலும் பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அரசிடம் முறையான கொள்கைத் திட்டங்கள் ஏதும் இல்லை

## கலாநிதி சுஜாதா கமமே

-சந்திப்பு: ஹெட்டி ரம்ஸி-

- **புதிய தேர்தல் முறை சிறுபான்மைக்கு பாதகமாக அமையுமா?**

சிறிய கட்சிகளுக்கு இத்தேர்தல் முறை சற்று பாதகமாகவே அமையும். என்றாலும் சிறுபான்மை கட்சிகள் தங்களுக்கான பாதிப்புக்களை வெகுவாகக் குறைத்துக் கொண்டுள்ளன. விகிதாசாரத் தேர்தல் முறை சிறுபான்மை கட்சிகளுக்கு சாதகமாகவே இருந்தது. சிறுபான்மைக் கட்சிகள் பெரும்பாலும் பேரினக் கட்சிகளுடனேயே கூட்டுச் சேர்ந்துள்ளன. இதனால் பெரும்பான்மை கட்சிகள் சிறுபான்மை கட்சிகளை ஏமாற்றும் வித்தைகளை செய்ய மாட்டார்கள் என்றே கருதுகிறேன்.

100 உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள் என வைத்துக்கொள்வோம். முன்னர் முழு மாவட்டத்திலும் ஒவ்வொரு கட்சிக்குக் கிடைத்த வாக்குகளின் அடிப்படையிலேயே வேட்பாளர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள். 60 வீத வாக்குகளை ஒரு கட்சி பெறுமாக இருந்தால் அதற்கு 6 ஆசனங்கள் கிடைக்கும். தற்பொழுது 10 ஆசனங்கள் இருக்குமென்றால் அதில் 6 ஆசனங்கள் தொகுதிவாரி முறையிலேயே தெரிவு செய்யப்படுகின்றன.

சிறிய தொகுதிகளை உடைக்கும் போது, பெரும்பாலான தொகுதிகளில் சிறுபான்மையினர் பெரும்பான்மையாக இல்லை என்பது விளங்கியது. 25 வீதம் சிறுபான்மை உள்ள கண்டி மாவட்டத்தில் ஒரு தனித் தொகுதியையும் உருவாக்க முடியவில்லை. அக்குறணையில் மாத்திரம் ஒரு மாகாண சபைத் தொகுதியை உடைக்க முடிந்தது. எனவே 60 வீதமான பிரதிநிதிகள் பெரும்பான்மை சமூகத்திலிருந்தே தெரிவுசெய்யப்படுகின்றனர். சிறுபான்மை சிதறியிருப்பதே இதற்குக் காரணம். நிலையான நிலப்பகுதி என்பதும் இங்கு முக்கியமான விடயமாக உள்ளது.

உதாரணத்திற்கு ஒருவர் ஐ.தே.க. வேட்பாளர் பட்டியலில் முன்னிலையில் இருக்கிறார் என்றால் 10 ஆசனங்களில் 5 ஆசனங்கள் விகிதாசார முறையில் ஐ.தே.க.வுக்கே கிடைக்கின்றது. தொகுதியில் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. ஐ.தே.க. 6 தொகுதிகள் வென்றது என நினைப்போம். எனவே பட்டியலில் உள்ளவர்கள் தெரிவுசெய்யப்படுவதில்லை.

குருநாகல் மாவட்டம் என வைத்துக்கொண்டால் 6 சிங்களவர்களே தெரிவாகின்றனர். ஐ.தே.க.வுக்கு ஒரு முஸ்லிம் பிரதிநிதியேனும் அனுப்ப முடியாமல் போகும். ஆனாலும் வெற்றியீட்டிய கட்சிக்கு 2 போனஸ் கிடைக்கின்றது. அதன் மூலம் சிறுபான்மை பிரதிநிதிகளுக்கு வாய்ப்பளிக்க முடியும்.

இம்முறை வடமேல் மாகாண சபைத் தேர்தலில் ஐ.தே.க. வெற்றியீட்டினால் ஒரு முஸ்லிம் பிரதிநிதியும் தெரிவுசெய்யப்பட மாட்டார்கள் என நினைக்கின்றேன். தொகுதி முறையில் ஒரு முஸ்லிம் பிரதிநிதி நியமிக்கப்பட்டால் மாத்திரமே அது சிலவேளை சாத்தியமாகும்.

அளுத்கம, தர்காநகரில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டபோது அப்பகுதியை பிரதிநிதித்துவப்படுத்திய பாலித தெவரப்பெரும அங்கு சென்று அதற்கெதிராக குரல் எழுப்பியிருந்தார். இதனால் தொகுதியில் வேட்பாளராக களமிறங்கும் பெரும்பான்மை சமூகத்தவர் கருப்பா வெள்ளையா என்பதை பார்க்காமல் அவர் தமது தொகுதிக்கு விசுவாசமாக இருந்து சேவையாற்றுவார் என நினைத்தால் நாம் அதற்கான வாய்ப்பை வழங்குவதில் பிழையில்லை.

- **தேர்தலுக்கான எல்லை நிர்ணயப் பணிகள் எவ்வகையிலுள்ளது?**

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தொகுதி நிர்ணயம் என்பது வரலாற்று ரீதியிலான விடயம். சில பிரதேசங்களில் 5 லட்சம், சில பிரதேசங்களில் 1 லட்சம் என்பதாகவும் மக்கள் உள்ளனர். இதற்குள்ளால் தொகுதி நிர்ணயப் பணிகளை தொகுதி நிர்ணய ஆணைக் குழுக்கள் மேற்கொண்டுள்ளன. 2015 இல் எல்லை நிர்ணய அறிக்கை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. இதில் சில பிரச்சினைகள் காணப்பட்டன. இவ்வரசாங்கம் அசோக பீரிஸ் தலைமையில் ஒரு ஆணைக்குழுவை நியமித்தது. இதில் சில குறைபாடுகள் காணப்பட்டாலும் சகல மாவட்டங்களுக்கும் சென்று மக்கள் கருத்தறிந்து சில விடயங்களை சீர்திருத்தினார்கள்.

பொதுவாக கிராம சேவக தொகுதிகளை இணைத்து தொகுதிகள் உருவாக்கப்படுகின்றன. நுவரெலியாவில் 2 லட்சம் பேருக்கு ஒரு பிரதேச செயலாளர் பிரிவு என்று காணப்பட்டது. இம்முறை 4 பிரதேச சபைகளாக அமைக்கப்பட்டுள்ளன. எல்லை நிர்ணயப் பணி முழுமையாக நீதியானது இல்லா விட்டாலும் ஓரளவு திருப்திப்படுத்தக் கூடியதாக உள்ளது. தற்பொழுது மாகாண சபைகளுக்குரிய தொகுதி நிர்ணய ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. விரைவில் அவர்களும் தங்களது அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளனர். பாராளுமன்ற எல்லை நிர்ணயத்தில் 140 தொகுதி அடிப்படையிலும் மீதமான 90 விகிதாசார முறையிலும் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவதற்கான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **இவ்வரசாங்கத்தின் கீழ் எதிர்வரும் காலங்களில் முஸ்லிம்களது உரிமைகளும் எதிர்பார்ப்புக்களும் கவனத்திற் கொள்ளப்படுவதற்கான சாத்தியங்கள் எந்நிலையிலுள்ளது?**

எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் பெரும்பான்மை எதிர்ப்பு தெரிவித்தால் அவர்கள் எல்லா வாக்குறுதிகளையும் மறந்துவிட்டு பெரும்பான்மையை ஆற்றுப்படுத்தப் பார்ப்பார்கள். கடந்த காலப்பகுதியில் இதனை காண முடிந்தது. டட்லி சேனாநாயக்க மாவட்ட கவுன்ஸில் முறையை ஏற்படுத்த முனைந்த போது எதிர்க்கட்சி எதிர்ப்பு தெரிவித்தது. மக்களின் பிரதிபலிப்பே அரசாங்கம். முன்பை விட இன்று வித்தியாசமான மக்கள் உள்ளார்கள். மறுபுறத்தில் சிறுபான்மையினரின் உரிமைகளை பாதுகாப்பதற்கு சிறுபான்மை கட்சிகளும் கூடுதலாக பணியாற்றி வருகின்றன. இதனால் அக்கட்சிகள் தங்களது செயற்பாடுகளை இன்னும் விரிவுபடுத்த வேண்டும். அப்போது இவ்விடயத்தை சாத்தியப்படுத்திக்கொள்ளலாம் என நினைக்கிறேன்.

- **தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வாக நீங்கள் முன்வைக்கும் யோசனைகள் என்ன?**

13 ஆவது அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை பயன்படுத்தி இன்று எத்தனை மாகாண சபைகள் மக்களுக்கு சேவை செய்துள்ளன? எவ்வளவு விடயங்களை மக்களுக்கு செய்ய முடியும். அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை பயன்படுத்தி மக்களுக்கு உரிய சேவைகளை செய்யாத இவர்கள் இன்னும் கூடுதலான அதிகாரங்களை பெற்று இன்னும் சேவையாற்றுவார்களா?

வடமாகாணத்தில் அங்குள்ள தலைவர்கள் மக்களுக்கு என்ன செய்துள்ளார்கள்? காணிப் பிரச்சினை என்பது முக்கியம். தமிழர்களுள் பெரும் பாலானவர்கள் வெளிநாடுகளில் உள்ளனர். 13ஆவது அரசியலமைப்பில் குறிப்பிடப்படாவிட்டாலும் மாகாண சபைகள் இணைந்த ஒன்றியமொன்று அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். எல்லா சட்டங்களும் சகல மாகாணங்களுக்கும் அனுப்பப்படுகிறது. அதுவல்லாமல் எமக்கு தமிழர் சபையொன்றும் இருக்க வேண்டும். அதிலுள்ளோர் மாகாணங்களை பிரதிநிதித்துவப் படுத்துவதாக இருக்க வேண்டும். எனவே சட்டமொன்று அனுப்பப்படும்போது அது அச்சபைக்குள் கலந்துரையாடப்பட வேண்டும். அது குறித்த தீர்மானங்கள் சட்ட சபைக்கு அனுப்பப்பட வேண்டும்.

- **எமது நாட்டை ஒன்றிணைந்து கட்டியெழுப்பும் திட்டங்கள் குறித்து சொல்ல முடியுமா?**

மொழிக்கொள்கை அமுல்படுத்தப்பட்டதன் காரணமாக முஸ்லிம்களில் அதிகளவிலானோர் ஆங்கில மொழியை கற்றுள்ளனர். தற்பொழுது நான் ஆங்கில மொழி நிகழ்ச்சி திட்டமொன்றையும் முன்னெடுக்கிறேன். இதற்கு முஸ்லிம் ஆசிரியர்களை வளவாளர்களாக தேர்ந்தெடுக்கவுள்ளேன். முஸ்லிம்கள் வர்த்தகத்தில் சிறந்து விளங்குகிறார்கள். இதுபோன்ற வளங்களை நாம் நாட்டின் பலமாக கொள்ள வேண்டும். இதன் மூலம் நாட்டைக் கட்டியெழுப்பலாம்.

இதுபோன்று ஏனைய இனத்தவர்களிடம் காணப்படும் திறமைகளையும் ஒன்றிணைத்து தேசத்தைக் கட்டியெழுப்பும் பணியை பரந்துபட்ட அடிப்படையில் முன்னெடுக்கலாம். யாரும் தனது மதத்தைக் காட்சிப்படுத்தக் கூடாது. அது மனதில் மாத்திரமே இருக்க வேண்டும்.

இலங்கை கலாசாரத்திற்குள் முஸ்லிம் பெண்கள் முகத்தை மூடி ஆடை அணிந்து செல்கிறார்கள். ஆண்கள் காற்சட்டை அணிந்து செல்கிறார்கள். மத்திய கிழக்கில் ஆண்கள் முழு உடலையும் மறைத்து ஜில்பாப் அணிகிறார்கள். பெண்களும் அதுபோன்று ஆடை அணிகிறார்கள். அங்கு ஒரு பொருத்தப்பாடு உள்ளது. ஆனால் இங்கு ஆடைப் பயன்பாட்டில் பொருத்தப்பாடில்லை.

- **புதியதொரு அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டுமா? அல்லது இருக்கும் அரசியலமைப்பின் மூலம் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற முடியாதா?**

தற்போதுள்ள அரசியலமைப்பை வெற்றிகரமாக அமைத்துக்கொள்வது சிறந்தது. இதில் பொறுப்புக்கூறல் விடயம் கவனம் செலுத்தப்பட வேண்டும். அரசியலமைப்பில் உள்ள விடயங்கள் போதுமானது. இவற்றை முறையாக அமுல்படுத்தினாலே எண்ணற்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடிகின்றது. அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் குறித்து ஆராய வேண்டும். அவர்களது சேவை முறையாக முன்னெடுக்கப்பட்டால் நிறைய மாற்றங்களை நாடு கண்டிருக்கும். அரசிடம் எவ்வித கொள்கைத் திட்டங்களும் இல்லை. அவை தற்போதைய அரசிலமைப்பிற் [illegible] செய்யப்பட வேண்டும்.



# எழுவாய், பயமிலை

அபூ ஷாமில்

## யாப்பு வைக்கும் ஆப்பு

'உன்னைத் திருத்து, உலகம் திருந்தும்' என்று சொல்லுவார்கள். உலகை மாற்றுவது தன்னிலிருந்து ஆரம்பிக்க வேண்டும் என்ற கருத்தில்தான் இந்த வார்த்தைப் பிரயோகம் சமூகத்திலே வழக்கிலிருக்கிறது. ஆனாலும், 'ஊருக்குத்தான் உபதேசம், உனக்கல்லடி மகளே' என்ற பதப் பிரயோகமும் சமூகத்தில் புழக்கத்தில் இருக்கிறது. நடைமுறையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் முன்னைதை விட பின்னையது தான் சமூகத்துடன் பின்னிப் பிணைந்திருக்கிறது.

புதிதாக வரையப்படப் போகும் இலங்கைத் திருநாட்டின் அரசியல் யாப்பு பற்றி முஸ்லிம் சமூகம் பேசத் தொடங்கியிருக்கிறது. இதுவும் ஊருக்குத் தான் உபதேசம் என்ற பதத்துக்கு வியாக்கியானம் சொல்வதாக இருப்பது போலத்தான் தெரிகிறது. நாட்டிலே தங்களை ஆளுகின்ற யாப்பு எப்படியெல்லாம் அமைய வேண்டும் என்பது விவாதிக்கப்பட வேண்டியது வாஸ்தவம்தான். அந்தளவுக்கு அதனுடைய முக்கியத்துவத்தை நாங்கள் விளங்கி வைத்திருக்கிறோம் என்பது பெருமிதம் கொள்ள வேண்டிய விடயம். துன்யாவுடைய விவகாரம் என்று ஒதுக்கி வைக்காமல் உலமாக்களும் பள்ளிவாசல்களும் இந்த விடயத்தில் கரிசனை காட்டி வருகின்றன.

ஆனாலும் தம்மை ஆளுகின்ற எல்லா நிறுவனங்கள் தொடர்பிலும் இந்தக் கரிசனை இருக்கிறதா? எங்களை ஆளுகின்ற உடனடி மையங்களாக பள்ளிவாசல்கள் இருக்கின்றன. இந்தப் பள்ளிவாசல்கள் எந்த விதிமுறைகளில் தம்மீது ஆதிக்கம் செலுத்துகின்றன என்பதை ஜமாஅத்தார்கள் தேடிப் பார்த்ததுண்டா? யாப்பு என்றாலே துன்யாவுடைய விவகாரம் என்று மிம்பர்களை விட்டும் அதனைத் தூர வைப்பவர்கள் பள்ளிவாசலின் யாப்பையும் இப்படிக் கருதித்தான் ஜமாஅத்தார்களின் கவனத்தை விட்டும் அதனைத் தூரமாக்கி வைத்திருக்கிறார்களா?

இலங்கையில் உள்ள எல்லாப் பள்ளிவாசல்களும் வக்பு சபையில் பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டும் என்று நாட்டுச் சட்டம் சொல்கிறது. நாட்டின் சட்டத்துக்கு கட்டுப்பட வேண்டும் என்று மார்க்கம் சொல்கிறது. வக்பு சபையில் பதிவு செய்யப்படுவதற்கு பள்ளிவாசலின் யாப்பு அங்கு முன்வைக்கப்பட வேண்டும். ஆனாலும் நாட்டின் சட்டத்துக்கும் மார்க்கச் சட்டத்துக்கும் முரணாக எந்தவித யாப்புக்களும் இன்றி, இருந்தாலும் அது நடைமுறையிலின்றி எத்தனையோ இறை இல்லங்கள் இந்த நாட்டிலே இயங்குகின்றன. இருக்கின்ற யாப்புகளும் பெரும்பாலும் ஜமாஅத்தினரின் பெரும்பான்மையினால் நிறைவேற்றப்பட்டவைகள் அல்ல. அதனால் தமது பள்ளிவாசலின் யாப்பு பற்றி அப்பாவி ஜமாஅத்தினருக்கு எதுவுமே தெரிவதில்லை. இந்தப் பலவீனத்தை வைத்துக் கொண்டுதான் இறையில்லங்கள் அராஜகத்தின் இலச்சினைகளாக இலங்குகின்றன.

இறையில்லமே இந்த நிர்க்கதியில் இருக்கும் போது முஸ்லிம் சமூகத்தின் பெயரில் இயங்குகின்ற ஸ்தாபனங்களின் நிலையை கேட்க வேண்டியதில்லை. ஆளுக்கொரு சங்கமாக நாளுக்கொரு அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு புற்றீசல்களாகப் பெருகி வரும் எமது சமூகத்தில், எந்த அமைப்பிலும் இல்லாத ஒருவரை நிர்வாகத்துக்குத் தேர்ந்தெடுப்பது என்பது பகலில் பிறைகாண்பதற்கு ஒப்பானது. ஆனாலும் இந்த அமைப்புக்களில் எத்தனை அமைப்புக்களுக்கு அங்கத்தவர்களால் அங்கீகரிக்கப்பட்ட யாப்பு இருக்கிறது ? உருவாக்கப்பட்ட இந்த அமைப்புக்களின் யாப்பு பற்றிய தெளிவில்லாமல் காலப்போக்கில் அதற்கென உழைத்தவர்கள் மங்கிப் போகிறார்கள். கடைசியில் எஞ்சியிருப்பதற்குக் காத்திருந்தவர்கள் இருப்பதைச் சுருட்டிக் கொண்டு கம்பி நீட்டுகிறார்கள்.

யாப்பு தொடர்பிலான சமூகத்தின் நிலை இப்படித்தான் இருக்கிறது. அறையில் ஆடித் தான் அம்பலத்துக்கு வர வேண்டுமென்ற நிலையில் யாப்பு சம்பந்தமான எந்த முன்னனுபவத்தையும் எமக்குள் நாம் பெற்றுக் கொள்ளாமல், நாங்கள் நாட்டின் அரசியல் யாப்பை சீர்திருத்தப் போகிறோம் அல்லது புதிதாய் வரையப் போகிறோம். பள்ளிவாசல்களின் யாப்பு ஜமாஅத்தாருக்குத் தெரிவதில்லை. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் யாப்பு அதன் உறுப்பினர்களான பெற்றோருக்குத் தெரிவதில்லை. உலமா சபைகளின் யாப்பினை உலமாக்களே அறிந்து வைத்ததில்லை. அரசியல் கட்சிகளின் யாப்பை போராளிகள் தெரிந்து வைப்பதில்லை.

இந்த நிலையில் யாப்பு என்ற ஒன்றை வைத்தே ஏமாந்து போகின்றவர்களாகவே நமது சமூகம் இருக்கிறது. இதனால் தான் முஸ்லிம் சமய,சமூக நிறுவனங்களிலும் கட்சிகளிலும் தலைவர்கள் ஆயுட்கால வரம் பெற்றிருக்கிறார்கள். இதில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு தெரியாத சமூகம், புதிதாக இன்னொரு நிறுவனத்தை உருவாக்கிக் கொண்டு தன்னாலே பிரிந்து சென்று பல்கிப் பெருகுகிறது.

இலங்கை முஸ்லிம் சமூகத்தை அறிவூட்டும் பணி அத்தியாவசியமானது என்பதை இந்த யாப்பு வரைபு நடவடிக்கைகள் தெளிவுபடுத்துகின்றன. நாட்டினது யாப்பினை வரைவதற்கு முன்னர் நம்மில் பல யாப்புச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கின்றன. தன்னைத் திருத்தாமல் ஊருக்கு உபதேசம் செய்வது முஸ்லிம்களுக்கு, குறிப்பாக உலமாக்களுக்கு பொருத்தமான விடயமல்ல. நாட்டின் விவகாரங்களில் எங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கு உள்வீட்டு விவகாரங்களில் நாங்கள் போதிய பரிச்சயம் பெற்றிருப்பது பெரும் உதவியாக அமையும் என்ற வகையிலும், யாப்பு வரைபில் அகில இலங்கை ஜம்மியதுல் உலமாவும் ஈடுபடுகிறது என்பதனால் இது துன்யா சார்ந்த விடயமல்ல என்ற வகையிலும் நாங்கள் இந்த விவகாரங்களில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். இல்லாவிட்டால் யாப்பே நமக்கு ஆப்பாக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2020 இல் நான் அதிகாரத்தைக் கைவிட்டு விடுவேன் - உமர் பஷீர்



''2020 இல் எனது இரண்டாவது ஜனாதிபதி பதவிக் காலம் முடிவுக்கு வரும். அதற்கு மேல் நான் அதிகாரத்தில் நீடித்திருக்க மாட்டேன்'' என்று சூடான் ஜனாதிபதி உமர் அல் பஷீர் தெரிவித்துள்ளார். பஷீர் இந்த வாக்குறுதியை கடந்த ஆண்டில் அளித்ததோடு, மீண்டும் அதனை நினைவுகூர்ந்துள்ளார்.

''சூடானியர்களுக்கு நான் வாக்குறுதியளிக்கின்றேன். 2020 இல் தார்பூரிலும் நைல் டெல்டாவிலும் தெற்கு குர்துபான் பிராந்தியங்களிலும் நிலையான சமாதானத்தை ஈட்டிய பின் நான் பதவி விலகிச் சென்றுவிடுவேன்'' என சூடான் ஜனாதிபதி உமர் பஷீர் தெரிவித்தார்.

''2020 இற்குள் முடிக்க வேண்டிய சில பணிகள் உள்ளன. உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களின் முகாம்களை அகற்றுவது, அவர்களை சொந்த இடங்களில் மீள்குடியேற்றுவது, அவர்களுக்கான அடிப்படை வசதி வாய்ப்புகளை வழங்குவது, இவையே எனது அடுத்த கட்ட முன்னுரிமையாக இருக்கும்'' எனவும் பஷீர் குறிப்பிட்டார்.

1989 ஆம் ஆண்டில் உமர் பஷீர் இராணுவப் புரட்சியொன்றின் மூலம் பதவிக்கு வந்தார். 2020 இல் அவர் அதிகாரத்திற்கு வந்து 31 ஆண்டுகள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. பஷீரின் காலத்திலேயே தென் சூடான் தனிநாடாகப் பிரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தென் சூடானிலும் லிபியாவிலும் உள்ள கிளர்ச்சிக் குழுக்கள் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு உடன்படாவிட்டால் அவர்களுக்கு எதிராக பலப் பிரயோகத்தைப் பயன்படுத்தத் தயங்கப்போவதில்லை எனவும் பஷீர் தெரிவித்தார்.

# தூனிசியாவில் அரசாங்கத்திலிருந்து குடியரசுக் கட்சி இராஜினாமா



நவம்பர் 06 ஆம் திகதி அரசாங்கத்திலிருந்து தாம் விலகிக் கொள்வதாக தூனிசியாவின் குடியரசுக் கட்சி அறிவித்தது. கட்சியின் செயலாளர் இஸாம் பதவி விலகியமைக்கான காரணத்தைக் குறிப்பிடுகையில் அரசாங்கத்துடன் இருந்து தொடர்ந்தும் செயற்படுவதற்கான சாத்தியப்பாடு குறைவாக உள்ளமையே தமது முடிவுக்கான காரணம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

யூசுப் ஷாஹித் தலைமையிலான அரசாங்கத்தில் நாம் இதற்கு மேல் பங்கு கொள்ள விரும்பவில்லை. நிருவாக சீர்திருத்த சட்டங்கள் குறித்து தற்போதைய அரசாங்கத்தினுடைய நிலைப்பாட்டில் எமக்கு உடன்பாடில்லை. அரசாங்கப் பேச்சாளரான இயாத் தஹ்மானியின் கூற்றுகள் கூட்டாட்சிக்கு எதிராக உள்ளது. கட்சியில் எமக்கான இடம் சரியாக வழங்கப்படவில்லை. இவற்றை முன்வைத்து நாம் பதவி விலகுகிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சர்வதேசப் பார்வை

# நூற்றாண்டை நிறைவுசெய்யும் பெல்ஃபோர் பிரகடனம்

## இஸ்ரேலை உருவாக்கிய பிரிட்டன் மன்னிப்புக் கோர வேண்டும்




யூதர்களுக்கு அறபு முஸ்லிம்களின் பலஸ்தீனத்தில் நாடொன்றை உருவாக்கித் தருவதாக வாக்களித்து பிரிட்டன் அரசாங்கம் 1917 நவம்பர் 02 இல் பெல்ஃபோர் பிரகடனத்தை வெளியிட்டது. சட்டவிரோத குடியேற்ற நாடான இஸ்ரேலை உருவாக்குவதற்கு பெல்ஃபோர் பிரகடனமே ஊக்கமளித்தது.

இப்பிரகடனத்தை அடுத்தே கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சிதறிக் கிடந்த யூதர்கள் பலஸ்தீனில் குடியேறத் தொடங்கினர். சட்டவிரோத யூதக் குடியேற்றக்காரர்களுக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் பாதுகாப்பளித்ததோடு, நிராயுதபாணிகளான பலஸ்தீன மக்களுக்கு எதிரான பிரிட்டிஷ் படையில் யூதர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

1917 நவம்பர் 02 இல் பிரிட்டனின் வெளியுறவுச் செயலாளராக இருந்த ஆதர் ஜேம்ஸ் பெல்ஃபோர் இப்பிரகடனத்தை வெளியிட்டார். அதன் சாரம்சம் பின்வருமாறு இருந்தது.

''பலஸ்தீனத்தில் யூதர்களின் தேசிய தாயகம் ஸ்தாபிக்கப்படுவதை பிரிட்ஷ் அரசாங்கம் ஆதரிக்கும். இந்த நோக்கம் நிறைவேறுவதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் பிரிட்டன் மேற்கொள்ளும். அதன் மூலம் தற்போதுள்ள பலஸ்தீனத்திலுள்ள யூதர் அல்லாத பிற சமூகத்தவர்களுடைய பிரஜா உரிமைகளோ மத உரிமைகளையோ பாதிக்கக் கூடிய வகையில் பிரிட்டன் செயல்படாது'' எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

2017 நவம்பர் 02 ஆம் திகதியுடன் பெல்ஃபோர் பிரகடனம் ஒரு நூற்றாண்டை நிறைவுசெய்கின்றது. இஸ்லாமிய உலகின் பல்வேறு நாடுகளிலும் நிலவி வரும் பழமை வாய்ந்த பல பிரச்சினைகளுக்கு பிரிட்டன் ஏகாதிபத்தியமே காரணமாகும். மியன்மார் மற்றும் காஷ்மீர் பிரச்சினைகளை தோற்றுவித்த நாடு பிரிட்டன் ஆகும். அதேபோன்று பலஸ்தீனில் இஸ்ரேல் என்ற நாட்டை உருவாக்கியது பிரிட்டன் என்ற வகையில் அது தனது வரலாற்றுத் தவறுக்காக மன்னிப்புக் கோர வேண்டும் என லண்டனில் கொதித்தெழுந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் கோஷம் எழுப்பினர்.

பிரிட்டனின் பலஸ்தீனப் பேரவை, பலஸ்தீன் ஆதரவுச் சபை, அக்ஸாவின் நண்பர்கள், பிரிட்டன் முஸ்லிம் அசோசியேஷன், போரை நிறுத்து கூட்டணி என்பன இணைந்து பிரிட்டனுக்கு எதி ரான ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தின. பிரிட் டன் நூற்றாண்டைக் கொண்டாடுவதைக் கைவிட்டு, தனது தவறுக்காக வெட்கப்பட வேண்டும் எனவும் மன்னிப்புக் கோர வெண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் கோஷமிட்டனர்.

# ஊழலுக்கு எதிரான ஆணைக்குழுவால் விசாரிக்கப்படுகின்றவர்களுக்கு வெளிநாடு செல்லத் தடை

சமீபத்தில் ஊழல் குற்றச்சாட்டின் பெயரில் கைதுசெய்யப்பட்ட 11 இளவரசர்கள், நான்கு அமைச்சர்கள் மற்றும் பல முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்டோர் மீது வெளிநாட்டுப் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது. தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள இவர்கள் மீதான விசாரணைகள் ஆரம்பித்துள்ளதாக அரச வக்கீல் தரப்பு தெரிவித்துள்ளது.

பட்டத்துக்குரிய இளவரசர் அனைத்து அதிகாரங்களும் கொண்டவர் என்பதை நிரூபிக்கும் வகையிலும் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையிலுமே இந்த அதிரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளதாக மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் தெரிவித்துள்ளார்.

சவூதியின் முன்னணி கூட்டுக் கம்பனிகள் பலவற்றின் உரிமையாளர்களும் பிரதான நிறைவேற்று அதிகாரிகளும் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இறுதியாக அந்நாட்டின் மிகப் பெரிய பயணத் துறை கம்பனியான அத்தையார் நிறுவனத்தின் தலைவர் நாஸிர் பின் அகீலும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். வலீத் பின் தலால், நாஸர் பின் அகீல் உள்ளிட்ட எவரும் வெளிநாடுகளுக்குச் செல்ல முடியாது என்று தடைவிதிக்கப்பட்டுள்ளது.



# கூட்டுத் தண்டனைக்கு உட்பட்டிருக்கும் யெமனியர்கள்



மன்னர் காலித் சர்வதேச விமான நிலையத்தின் மீது யெமனில் நிலை கொண்டுள்ள ஹூதிகள் நடத்திய ஏவுகணைத் தாக்குதலை அடுத்து சவூதி அரேபியா யெமனுடனான நில, நீர், வான் எல்லைகளை மூடியுள்ளது. இது யெமனியர்கள் மீது விதிக்கப்படும் கூட்டுத் தண்டனை என வர்ணிக்கப்படுகிறது.

மில்லியன் கணக்கான பொதுமக்கள் இதனால் பாதிக்கப்படப் போகின்றனர். யெமனுக்கான உணவு மற்றும் மருத்துவ வசதிகள் தடைசெய்யப்பட்டால் பாரிய மனிதாபிமான நெருக்கடிகள் உருவாகும் என்று எச்சரிக்கப்படுகின்றது.

சவூதி மீதான ஏவுகணைத் தாக்குதல் [illegible]ந்து ஒரு சில மணித்தியாலங்களில் யெமன் தலைநகர் சன்ஆ மீது சவூதி கூட்டுப்படை நடாத்திய வான்வழித் தாக்குதல் ஜனாதிபதி மாளிகை, தேசிய பாதுகாப்பு தலைமையகம் மற்றும் உள் விவகார அமைச்சின் கட்டடம் என்பவற்றை இலக்கு வைத்தது. அதில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். முக்கிய கட்டடங்கள் அழிக்கப்பட்டன.

சவூதி அரேபியாவின் தற்போதைய நடவடிக்கைகள் ஒவ்வொரு யெமனியரையும் பாதிக்கும் என எல்லைகளற்ற வைத்தியர் அமைப்பு தெரிவித்துள்ளது. சவூதி அரேபியா ஊடாக யெமனை நோக்கி வரும் விமானங்கள், கப்பல்கள், தரைவழி வாகனங்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளதால் பாரிய நெருக்கடிக்கு மக்கள் முகம்கொடுத்துள்ளனர் என இவ்வமைப்பு எச்சரித்துள்ளது.

# லெபனான் பிரதமர் சஅத் ஹரீரி இராஜனாமா, தொலைபேசி மூலம் அறிவிப்பு



லெனான் பிரதமர் ஹரீரி சவூதியின் தலைநகர் ரியாதிலிருந்து தொலைபேசி வழியாக தான் பிரதமர் பதவியிலிருந்து விலகிக்கொள்வதாக அறிவித்துள்ளார். தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தே தனது பதவி விலகலை அவர் அறிவித்துள்ளார். ஈரான் மற்றும் அதனது லெபனானிய கைக்கூலியான ஹிஸ்புல்லாஹ் என்பன தனது உயிருக்கு ஆபத்தாக மாறியுள்ளதோடு, பிராந்தியத்தில் மோதலை உருவாக்க முனைவதாகவும் ஹரீரி குற்றம்சாட்டியுள்ளார்.

ஈரான்-சவூதி அரேபிய பிராந்திய மோதலின் மற்றொரு பலிக்கடாவாக லெபனான் மாற்றப்பட்டுள்ளது என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். லெபனானில் ஏற்கனவே ஷிஆ-சுன்னி குழுநிலைப் பதட்டம் தீவிரமடைந்து வரும் தருணத்தில் ஹரீரியின் பதவி விலகல் அரசியல் பதட்டத்தை அதிகரித்துள்ளது. லெபனானின் அரச படைக்கு வெளியே பலம் பொருந்திய ஆயுதப் படையாக ஹிஸ்புல்லாஹ் செயற்படுகின்றது. சிரியாவிலும் யெமனிலும் சவூதி கூட்டணிக்கு எதிரான தாக்குதல்களை ஹிஸ்புல்லாஹ் மேற்கொண்டு வருவதாகவும் ஈரான் அதற்கு ஆதரவளித்து வருவதாகவும் சவூதி அரேபியா குற்றம்சாட்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சவூதி அரேபியாவின் அதிகார விளையாட்டு

• ஜமால் அஷ்ஷையால்
(middleast monitor)

கடந்த சனிக்கிழமை (04-11-2017) சவூதி அரேபியாவில் ஒரு அரசியல் புயல் அடித்தது. லெபனான் பிரதமர் ஸஅத் ஹரீரியின் பதவி விலகலோடு இது ஆரம்பித்தது. ரியாதில் ஹரீரியின் பதவி விலகலை தூண்டிய பின்னரே இந்தப் புயல் முழு வீச்சுக் கொண்டது.

சவூதி அரேபியாவின் தொலைக்காட்சி அலைவரிசையொன்றில் தோன்றிய லெபனான் பிரதமர் ஹரீரி பதவி விலகுவதாக அறிவித்தார். அவரது சடுதியான இந்த அறிவிப்பு பிராந்தியத்தில் யாரும் எதிர்பார்த்திருக்காத ஒன்று. லெபனானின் உள்விவகாரங்களில் வெளிநாட்டுத் தலையீடு அதிகரிப்பதை எதிர்த்தே தான் பதவி விலகுவதாகவும் அவர் காரணம் சொன்னார். தனது தந்தை படுகொலையை எதிர்கொண்டது போன்று தானும் படுகொலை செய்யப்படும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் ஹரீரி தெரிவித்தார்.

கடந்த வாரத்தில் நிகழ்ந்த முதலாவது பெரிய அரசியல் குண்டுவெடிப்பு இது. அன்றைய தினம் மாலையில் மன்னர் காலித் சர்வதேச விமான நிலையத்திற்கு சமீபமாக குண்டுவெடிப்புச் சத்தம் கேட்டது. யெமன் தலைநகர் சன்ஆவிலிருந்து ஹூதி பிரிவினைவாதிகளால் அனுப்பப்பட்ட ஏவுகணைகளே அவை எனக் கூறப்பட்டது.

இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக சவூதியின் தலைமையில் நடாத்தப்பட்டு வரும் ''தீர்மானிக்கும் புயல்'' இராணுவத் தாக்குதல்களுக்குப் பின்னரேயே இது இடம்பெறுகின்றது. அதே தினம் நள்ளிரவான போது மற்றொரு பாரிய குண்டுத் தாக்குதல் நடந்தது. அது வேறெங்கும் இல்லை. மன்னர்களின் அரண்மனையிலேயே வெடித்துச் சிதறியது.

சவூதி இளவரசரர்கள், கோடீஸ்வரர்கள், செல்வாக்குள்ள புள்ளிகள் பலரை கைது செய்யுமாறு பட்டத்துக்குரிய இளவரசரிடமிருந்து கட்டளைகள் வந்தன. அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் பலரும் பதவி நீக்கப்பட்டனர். அவர்களில் முன்னாள் மன்னர் அப்துல்லாஹ்வின் மகன்மார்களும் அடங்குவர். பதவி நீக்கப்பட்ட சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகளுள் சவூதி தேசிய பாதுகாப்புப் படையின் தலைவரும் உள்ளடக்கம்.

மேலே குறிப்பிட்ட இம்மூன்று அதிரடி நிகழ்வுகளும் சவூதி அரேபியா மீது மட்டுமன்றி ஒட்டுமொத்தப் பிராந்தியத்திலும் -ஏன் அதற்கு வெளியிலும் மிகுந்த அரசியல் தாக்கம் கொண்டவை என்பதில் சந்தேகமில்லை.

பிராந்தியத்தில் மற்றொரு போர் வெடிப்பதை விரும்பாத எந்தவொரு அரசாங்கத்திற்கும் லெபானன் பிரதமரின் பதவி விலகல் ஓர் எச்சரிக்கை மணியை ஒங்கி ஒலித்துள்ளது. இந்த அதிரடி அரசியல் நகர்வுகளின் பின்னால் இஸ்ரேல் இருக்கிறது.

பல மாதங்களாகவே இஸ்ரேல் தனது வடக்கு எல்லைப் புறமாக இராணுவப் போர் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. இதே காலப் பகுதியில்தான் டமஸ்கஸில் அஸாதின் அரசைக் காப்பாற்றும் வேலையில் ஹிஸ்புல்லாஹ் ஈடுபட்டிருக்கிறது. இஸ்ரேலோ தனது ஏவுகணைப் பாதுகாப்பு முறையை நுணுக்கமாக வளர்த்து வருகிறது. அவற்றை நடைமுறையில் பிரயோகித்துப் பார்ப்பதற்கு இஸ்ரேல் தயங்காது.

அரசாங்கத்திலிருந்து ஹரீரியை பதவி விலகுமாறு ரியாத் வற்புறுத்தியமை லெபனானுக்கெதிரான இஸ்ரேல் ஆக்கிரமிப்புக்கு உதவப் போகின்றது. ஏற்கனவே ஹமாஸ் தனது அதிகாரத்தை பலஸ்தீன அதிகார சபையிடம் ஒப்படைத்த பின்னர் காஸா அரசியல் ரீதியாக நடுநிலைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, ஹிஸ்புல்லாஹ்வின் பலம் லெபனானில் குறைந்துள்ள நிலையில், காஸாவில் ஹமாஸின் பலம் குறைந்துள்ள நிலையில், இஸ்ரேலுக்கு இது நல்லதோர் தருணம் தான்.

லெபனான் மீதும் அங்குள்ள ஈரானிய முகவர்களை இலக்கு வைப்பதற்கும் இஸ்ரேலுக்கு இது அரிய வாய்ப்பு. அதேவேளை, இஸ்ரேலின் இந்தப் புதிய தாக்குதல் குறித்து சவூதி அரேபியாவின் மிதவாதத் தலைவர்கள் என்ன நிலைப்பாட்டை எடுக்கப் போகின்றார் என்பதை மேற்குலகு பரீட்சித்துப் பார்ப்பதற்கும் விரும்பும் தருணம் இது.

யெமனில் போரில் இறங்கியதன் மூலம் சவூதி மில்லியன் டொலர்களை இழந்துள்ளது. சன்ஆவில் சட்டபூர்வமான அரசாங்கத்தை மீளக் கொண்டு வருவதற்கும் ஈரானை வீழ்ச்சியுறச் செய்யவும் முஹம்மத் பின் ஸல்மான் ஆரம்பித்த போரே அது. ஆனால், இந்த இரண்டு இலக்குகளிலும் எதனையும் அது அடையவில்லை. மாறாக, பல்லாயிரக் கணக்கான அப்பாவி மக்களை கொன்று குவிப்பதிலும் மில்லியன் கணக்கானோரை இடம்பெயர வைப்பதிலும் மத்திய கிழக்கில் ஒடுக்கப்படுகின்றவர்களின் காவலனாக தெஹ்ரானை நிலைநிறுத்துவதிலும் சவூதி வெற்றி பெற்றுள்ளது.

தற்போது காலித் விமான நிலையத்தில் வெடித்துச் சிதறியுள்ள ஏவுகணையும் யெமன் மீதான ரியாதின் மூர்க்கத்தனத்தை இன்னும் தீவிரப்படுத்தும். இவையெல்லாவற்றுக்கும் மத்தியில் பொது மக்களும் கோடீஸ்வரர்களும் இளவரசர்களும் அதிரடியாகக் கைது செய்யப்பட்டது ஏன் என்பது சற்று மங்கலாகவே இருக்கிறது. அதில் தேசிய பாதுகாப்புப் படையின் தலைவர் மற்றும் வலீத் பின் தலால் ஆகியோரின் தடுப்புக் காவல் பெரிய கேள்விகளை எழுப்புகின்றது.

ஏனெனில், பட்டத்துக்குரிய இளவரசர் பின் ஸல்மான் போன்றே வலீத் பின் தலாலும் சவூதி அரேபியாவை மதச்சார்பற்ற சமூகமாக மாற்றுவதற்கு விரும்புகின்றவர். ஜனநாயகம் மற்றும் தாராளத் தன்மை என்பவற்றை ஆதரிக்கின்றவர். நாட்டின் சொத்துக்களையும் இறைமையையும் அமெரிக்காவிடம் ஒப்படைக்க விரும்புகின்றவர். இதனால் நான் வலீத் பின் தலாலின் கட்டட ஒப்பந்தக்காரர் ஒருவரோடு தொடர்பு கொண்டு அவர் கைதுசெய்யப்பட்டதற்கான காரணத்தை வினவினேன். தன்னிடமுள்ள கோடிக்கணக்கான பணத்தை சவூதி அரசாங்கத்திடம் ஒப்படைக்க அவர் மறுப்புத் தெரிவிப்பதே காரணம் எனத் தெரிவித்தார்.

சவூதியின் பொருளாதாரம் வேகமாக சரிந்து வருவதனால் தனிப்பட்ட கோடீஸ்வரர்களிடமுள்ள கோடி டொலர்களை உறிஞ்சும் திட்டத்தில் இளவரசர் ஈடுபட்டுள்ளாார். கோடிகளைத் திருப்பிக் கொடுங்கள், இல்லையெனில் கைதுசெய்யப்படுவீர்கள் என்பதுதான் இப்போது அங்கே நடைமுறையிலுள்ள வாய்ப்பாடு.

32 வயதான பின் ஸல்மான் முழுப் பிராந்தியத்தையும் பாரிய குழப்பமொன்றுக்குள் ஆழ்த்த விரும்புகின்றார். ஏற்கனவே இவரது நடவடிக்கைகள் வளைகுடா ஒப்பந்த நாடுகளின் சபையை நாசமாக்கி விட்டது. யெமன் சுமுகமான அரசாங்கமொன்று இல்லாத நாடாகவே மாறிவிட்டது. எகிப்து பிராந்தியத்தில் ஒரு டைம் பொம்பாக மாறிவிட்டது. [illegible] வெடித்துச் சிதற[illegible] இந்நிலைமைகள் குறித்து கவலை கொள்ள நிறைய விஷயங்கள் உள்ளன.

## கைதுசெய்யப்பட்டோரில் சிலர்...



### வலீத் பின் தலால்

சவூதி அரேபியாவின் முதற் தர கோடீஸ்வர வணிகர். இவரது சொத்து 17 பில்லியன் அமெ.டொலர். உலகச் செல்வந்தர்களில் ஒருவர். Twitter Apple, City Gruop, Lyft, News Corp. கம்பனிகளின் பங்குதாரர். 62 வயதான இவர் சவூதி லெபனான் இரட்டை பிரஜா உரிமை கொண்டவர். டைம்ஸ் சஞ்சிகையில் 2008 இல் உலகின் முதற் தர 100 கோடீஸ்வரர்களில் ஒருவர் என பட்டியல் படுத்தப்பட்டவர்.



### இளவரசர் வலீத் இப்றாஹீம்

மத்திய கிழக்கு வானொலிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர், ஸ்தபாகர். மத்திய கிழக்கிலும் வட ஆபிரிக்காவிலும் மிகப் பெரும் தனியார் ஊடகக் கம்பனிகளின் உரிமையாளர். அறபு வணிகர்களில் முதல் 50 பேர்களில் ஒருவர். மத்திய கிழக்கு வானொலிக் கூட்டுத்தாபனத்தின் கீழ் 18 தொலைக் காட்சி அலைவரிசைகள் உள்ளன.



### அம்ர் அத்தப்பாஹ்

இவர் அல் தப்பாஹ் குருப் கம்பனியின் உரிமையாளர். இது ஜித்தாவில் அமைந்துள்ளது. சவூதி அரேபிய பொது முதலீட்ட அதிகார சபையின் முன்னாள் தலைவர். அமைச்சர் பதவி வகித்தவர். தப்பாஹ் 1962 இல் ஸ்தாபிக்கப்பட்டது. 60 நாடுகளில் கிளைகளைக் கொண்டது.



### ஸாலிஹ் அப்துல்லாஹ் காமில்

இவர் ஜித்தாலை தளமாகக் கொண்ட தல்லாஹ் அல் பரகாஹ் கம்பனியின் ஸ்தாபகத் தலைவர். இது நிதிச் சேவைகள் உள்ளிட்டு உணவு மற்றும் சுற்றுச் சூழல் சுகாதார துறை தொடர்பான பொருட்கள் சேவைகளை வழங்கி வருகின்றது. 2 பில்லியன் அமெ.டொலர்களுக்கு உரிமையாளரான இவர், மத்திய கிழக்கு, இந்தோனேசியா, பாகிஸ்தான் ஆகியவற்றில் இயங்கும் அல் பரகா இஸ்லாமிய வங்கிக் குழுத்திற்கும் தலைமை வகிக்கிறார்.



### இம்றாஹீம் அல் அஸ்ஸாப்

அஸ்ஹாப் 20 ஆண்டுகளுக்கும் மேலாக நிதியமைச்சராகப் பணியாற்றியவர். 2016 நவம்பரிலிருந்து சவூதியின் ராஜாங்க அமைச்சராக இருந்தவர். அரம்கோ கம்பனியின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களில் ஒருவர். பொருளாதாரத் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்ற இவர், சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியிலும் பல பதவிகளை வகித்தவர்.



### பக்ர் பின் லேடன்

இவர் ஒஸாமா பின் லேடனின் சகோதரர். ஜித்தாவைத் தளமாகக் கொண்ட பின் லேடன் கட்டுமாண கம்பனியின் பெரிய பங்குதாரர். மக்காவில் ஹரம் ஷரீபின் விஸ்தரிப்பு, ஜித்தாவிலுள்ள மன்னர் அப்துல் அஸீஸ் விமான நிலையத்தின் கட்டுமாணம், கெய்ரோ அத்ன், தோஹா, டமஸ்கஸ் என்பவற்றிலும் பிரமாண்டமான கட்டுமாணத்தில் ஈடுபட்டுள்ள பல கம்பனிகளின் சொந்தக்காரர்.

# பொஸ்பொரஸ் கரையினிலே...

## துருக்கியின் வீழ்ச்சியும் எழுச்சியும் - 20

AKP 2001 ஆகஸ்டில் ஸ்தாபிக்கப்பட்டது. 2002 நவம்பர் தேர்தலில் 34 வீத வாக்குகளுடன் ஆட்சியமைத்தது. 1980 களுக்குப் பின்னர் தனியாக ஆட்சியமைத்த ஒரே கட்சி இதுவாகும். AKP அதிகாரத்தைக் கையேற்றபோது துருக்கி பொருளாதார வீழ்ச்சியில் வீழ்ந்து கிடந்தது. பணவீக்கம் அதிகரித்து, வாழ்க்கைச் செலவீனம் உயர்ந்து காணப்பட்டது. உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் என்பவற்றுக்குப் பெருந்தொகைக் கடனை செலுத்த வேண்டியிருந்தது. வேலையற்றொர் வீதம் 15ஐ தாண்டியிருந்தது. இராணுவத்தின் நிழல் அரசாங்கத்தின் கீழ் ஊழல் மோசடிகளும் நிதி முறைகேடுகளும் எல்லை மீறிப் போயிருந்தது.

முதல் உலகப் போரை அடுத்து ஐரோப்பாவின் நோயாளி என அடையாளப்படுத்தப்பட்ட துருக்கி, 2000 கள் வரை நோயாளியாகவே இருந்தது. 2002 இல் அர்தூகானின் தலைமையிலான AKP அதிகாரத்தைக் கைப்பற்றியபோது நாட்டின் பொருளாதாரப் பின்னடைவு, முறைகேடான நிதி நிர்வாகம் அனைத்தையும் தாண்டி பெரும்பாலான சர்வதேச ஊடகங்களும் உள்ளூர் ஊடகங்களும் எழுப்பிய முக்கிய கேள்வி, அர்தூகான் அரசாங்கம் கொடூரமான இராணுவத்தின் கெடுபிடிகளுக்கு முன்னால் தாக்குப் பிடிக்குமா என்பதுதான்.



கடந்த கால துருக்கியின் அரசியல் வரலாற்றை நோக்குகின்ற எவருக்கும் இந்தக் கேள்வி நியாயமானதாகவே தோன்றும் என்பதில் சந்தேகமில்லை.

1924 இல் கிலாபத் ஆட்சி ஒழிக்கப்பட்டு, மதச் சார்பின்மை பிரகடனம் செய்யப்பட்டதிலிருந்து துருக்கிய இராணுவமே துருக்கியின் காப்பாளர்கள் என அறிவிக்கப்பட்டது. முஸ்தபா கமால் அறிமுகப்படுத்திய மதச்சார்பற்ற குடியரசுக்கான யாப்பு எல்லையற்ற அதிகாரங்களை இராணுவத்திடம் குவித்தது. உலகில் எந்தவொரு நாட்டிலும் இராணுவத்திற்கு இல்லாத அதிகாரங்கள் துருக்கிய இராணுவத்திற்கு வழங்கப்பட்டது.

இஸ்லாத்திற்கும் மதச்சார்பற்ற கமாலிஸத்துக்கும் இடையிலான கடந்த 80 ஆண்டுகால மோதலில் துருக்கியின் இராணுவமே பிரதான நடிபங்கை ஆற்றி வந்தது. அரசாங்கத்தின் அனுமதியின்றி வெளிநாடுகளுடன் இராணுவ ஒப்பந்தங்கள் செய்யவும் ஆயுத கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடவும் அதிகாரம் பெற்றிருந்த இராணுவம், ஜனநாயகத்திற்கு பெரிய அச்சுறுத்தலாக இருந்து வந்தது.

உலக வரலாற்றில், நேரடியான இராணுவ ஆட்சி ஜனநாயகத்திற்கு நீண்டகாலமாக அச்சுறுத்தலாக இருந்து வந்த நாடு துருக்கிதான் என்பதில் சந்தேகமில்லை. எனவே, அர்தூகான் எதிர்கொண்ட முதற் பெரும் சவால் இராணுவத்தின் அதிகாரத்தை ஒழித்து ஜனநாயகத்தை நிலைநாட்டுவதுதான். இது மிகக் கடினமான ஒரு பணியாகும்.

1960 இல் முதல் இராணுவப் புரட்சி நடந்தது. 1971 இல் நாட்டின் பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்ட இராணுவம் புரட்சியில் இறங்கியது. 1980 இல் மூன்றாவது இராணுவப் புரட்சி இடம்பெற்றது. 1982 இல் இராணுவ ஜெனரல்களால் வடிவமைக்கப்பட்ட அரசியல் அமைப்பு நடைமுறைக்கு வந்தது. அதில் துருக்கியின் சிவில் சமூக மாற்றங்களுக்கும் கலாச்சார மாற்றத்திற்கும் ஜனநாயக முன்னேற்றங்களுக்கும் எதிரானதாக இருந்தது.

அவ்வரசியல் அமைப்பில் 15 ஆம் ஷரத்து இராணுவப் புரட்சியில் ஈடுபடும் இராணுவ ஜெனரல்களை எந்த வகையிலும் விசாரிக்க முடியாது என்று அழுத்திக் கூறுகின்றது. இராணுவம் விரும்பும் நேரத்தில் புரட்சியில் ஈடுபட்டு ஆட்சியைக் கைபற்றும். ஆனால், அவர்களை யாரும் விசாரிக்க முடியாது என்ற காட்டுச் சட்டமே நடைமுறையில் இருந்தது.

1997 இல் பேராசிரியர் நஜ்முதீன் அர்பகானின் அரசாங்கத்திற்கு எதிராக இரத்தம் சிந்தா புரட்சியொன்றை இராணுவம் நடத்தி முடித்தது. அர்பகான் கொண்டு வர உத்தேசித்த ஒவ்வொரு அரசியல் மாற்றத்திற்கும் இராணுவம் குறுக்கே நின்றது. தனிப்பட்ட வகையில் அர்பகானை மிரட்டியது. அச்சுறுத்தியது. பதவியிலிருந்து விலகாவிட்டால் இராணுவப் புரட்சியில் இறங்குவோம் என்றும் பயமுறுத்தியது. அர்பகான் மீது இராணுவம் வழங்கிய கடும் அழுத்தங்களை அடுத்தே அர்பகான் பதவி விலகினார்.

அப்போதைய துருக்கிய ஊடகங்கள் அதனை பின்நவீனத்துவப் புரட்ச (Post Modern Coup) என வர்ணித்தன. 2000களிலும் அதே இராணுவம் அதே மதச்சார்பின்னமை, இச்சூழ்நிலையில் ஜனநாயக மாற்றங்களை அர்தூகான் எங்கிருந்து தொடங்கப் போகின்றார் என்பதே எல்லோரினதும் கேள்வியாக இருந்தது. ஆனால், அந்த சவாலை அர்தூகான் நுணுக்கமாக வெற்றி கொண்டுள்ளார். அது எப்படிச் சாத்தியமானது?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி மன்றங்களுக்கான புதிய தேர்தல் முறை: சாதகமா? பாதகமா?



தற்பொழுது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்தும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறையின் புதிய மாற்றங்கள் குறித்தும் நாட்டில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த ஒகஸ்ட் மாதத்தில் மஹிந்த அணியினரின் எதிர்ப்புக்கு மத்தியில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் புதிய தேர்தல் முறை பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது. 2017 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற தேர்தல் திருத்தச் சட்டம் எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முதல் அமுலாகும்.

எனினும் குறித்த சட்டம் தொடர்பில் இந்நாட்டு மக்களிடமும், சில அரசியல் கட்சிகளிடமும், மக்கள் பிரதிநிதிகளிடமும், சமூக செயற்பாட்டாளர்களிடமும் போதிய தெளிவில்லாத நிலையை காணக்கூடியதாக உள்ளது. ஊடகங்கள் வாயிலாகவும் இது குறித்த விரிவான கலந்துரையாடல்கள் இடம்பெறவில்லை. அதனால், புதிய உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டம் தொடர்பிலும் அதன் உள்ளீடுகள் பற்றியும் விரிவானதொரு விளக்கத்தைப் பெறுவது அவசியமாகும்.

**தொகுதிவாரிப் பிரதிநிதித்துவ முறை**

1947 சோல்பரி அரசிலமைப்பு முதல் 1977 பொதுத்தேர்தல் வரையில் தொகுதி வாரிப் பிரதிநிதித்துவ முறையிலேயே தேர்தல்கள் இடம்பெற்றன. இத்தேர்தல் முறையானது இரு கட்சி முறையை உருவாக்கிய தேர்தல் முறையாகக் காணப்பட்டதுடன், சிறு கட்சிகளுக்கும் சிறுபான்மையினருக்கும் பாரிய அநீதிகளை ஏற்படுத்திய தேர்தல் முறையாகவும் காணப்பட்டது.

இம்முறையின் அடிப்படையில் ஏதாவதொரு தேர்தல் தொகுதியில் கூடுதலான வாக்குகளை பெற்றுக் கொள்ளும் வேட்பாளர் உறுப்பினராக தெரிவானார். சில தேர்தல் தொகுதிகளில் பெரும்பான்மை மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களும் கூட தொகுதியின் உறுப்பினராகத் தெரிவானார்.

**விகிதாசாரத் தேர்தல் முறை**

1947 முதல் அமுலில் இருந்த தொகுதி வாரி தேர்தல் முறை 1978 அரசியலமைப்பின் மூலம் விகிதாசார தேர்தல் முறையாக மாற்றப்பட்டது. இத்தேர்தல் முறையின் படி, இருகட்சி முறைக்கு பதிலாகப் பல கட்சி முறை உருவானது. (1977 தேர்தலில் சுதந்திரக் கட்சி பாரிய தோல்வியை சந்தித்தது போன்று எதிர்வரும் தேர்தல்களில் தமக்கும் அவ்வாறான நிலை ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்கு) சிறுபான்மை கட்சிகளுக்கும் தேர்தல்களில் வெற்றியை பெற்றுக் கொள்ளக் கூடிய முறையொன்றாக இத்தேர்தல் முறை காணப்பட்டது.

1981 மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தலிலும் விருப்பு வாக்கு முறை காணப்படவில்லை. இத்தேர்தல் முறையும் கூட சிற்சில சந்தர்ப்பங்களில் சீர்திருத்தப்பட்டது. இறுதியில் இத்தேர்தல் முறையின் மூலம் 5 வீத வாக்குகளை பெற்றுக்கொள்ளும் அரசியல் கட்சிகளுக்கும் போட்டில் தொடர்ந்திருப்பதற்கும், பெற்றுக் கொண்ட வாக்குகளின் சதவீதத்தின் அடிப்படையில் பிரதிநிதித்துவங்களை பெற்றுக்கொள்வதற்கும் சந்தர்ப்பம் உருவானது.

இத்தேர்தல் முறையில் பொதுத் தேர்தலில் முழு மாவட்டத்திலும் விருப்பு வாக்குகளை பெற்றுக்கொள்வதற்கு வேட்பாளர் கடுமையான பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. விகிதாசார முறையின் கீழ் பின்வருமாறு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். 5 வீதம் முதல் அதற்கு அதிகமாக வாக்குகளை பெற்றுக்கொண்ட கட்சி தொடர்ந்தும் போட்டியில் இருக்கும் போது 5 வீத்திற்கு குறைவான வாக்குகளை பெறும் கட்சி வாக்குகளுடன் போட்டியிலிருந்து நீக்கப்படும். எஞ்சிய கட்சிகள் பெற்றுக்கொண்ட செல்லுபடியான வாக்கு எண்ணிக்கை குறிப்பிட்ட மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட வேண்டிய பிரதிநிதிகளின் எண்ணிக்கையால் பிரிக்கப்படும். இதில் பிரதிநிதியொருவர் தெரிவுசெய்யப்படுவதற்குரிய வாக்குகள் எண்ணப்படும். அதன்படி, அந்தந்த அரசியல் கட்சிகளுக்கு கிடைக்க வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுகின்றது. இதில் பெரும்பான்மை உறுப்பினர்கள் தெரிவாகும் கட்சிக்கு மேலதிக (போனஸ்) ஆசனமொன்றும் கிடைக்கும்.

**பலவீனங்கள்**

இத்தேர்தல் முறை குறித்தும் சமூகத்தில் வெவ்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. விருப்பு வாக்கு முறை தொடர்பிலேயே மிக முக்கிய குற்றச்சாட்டு சுமத்தப்படுகின்றது. இத்தேர்தல் முறைக்கூடாக பணம் படைத்தவர்கள், அதவாது அதிக பணத்தை செலவளிக்கும் வேட்பாளர் பிரதிநிதிகளாகத் தெரிவாகினர். இறுதியில் அது பாராதூரமான அழிவுகளை நோக்கி நாட்டை தள்ளியது.

இம்முறைக்கூடாக சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களும் பணத்தைச் செலவு செய்து விருப்பு வாக்குகளை பெற்று மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவானார்கள். இறுதியில் தேர்தலுக்குச் செலவு செய்த பணத்தை ஈட்டிக்கொள்வதற்கு குறிப்பிட்ட மக்கள் பிரதிநிதிகள் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடலாயினர். வாக்குகளுக்காக வேண்டி ஒரே கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்கள் ஒருவரை ஒருவர் கொலை செய்யும் நிலையையும் இத்தேர்தல் முறையே ஏற்படுத்தியது.

1977 வரையில் நிலவிய தேர்தல் முறையை விட விகிதாசார தேர்தல் முறையில் ஒரு சில நல்ல அடையாளங்கள் காணப்பட்டாலும், அது நாட்டிற்கு மிகவும் பொருத்தமான தேர்தல் முறையாக அமையவில்லை. இதனால் இது குறித்து சமூகத்தில் கடுமையான வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட ஆரம்பித்திருந்தது.

தொடர்ந்தேர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வந்த எதிர்ப்புக்களை அடிப்படையாக கொண்டு ராஜபக்ஷ அரசாங்கத்தினால் பசில் ராஜபக்ஷ தலைமையில் 2012 இல் உள்ளூராட்சி மன்றங்களுக்கான புதிய தேர்தல் முறை குறித்த சட்டம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. இத்தேர்தல் முறைக்கான தொகுதி நிர்ணயங்களும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மீண்டும் தொகுதிவாரி முறைக்கு அதிக இடமளிக்கும் வகையிலேயே இத்தேர்தல் முறையும் உருவாக்கப்பட்டிருந்தது.

அப்போது ஆட்சியிலிருந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் பிரதான கூட்டுக் கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு சாதகமான முறையிலேயே இவ்வெல்லை நிர்ணயம் செய்யப்பட்டிருப்பது நிரூபணமானது. சுதந்திரக் கட்சி நீண்டகாலம் ஆட்சியில் இருக்கும் நோக்கிலேயே இவ்வெல்லை பிரிப்பு பின்பற்றப்பட்டிருப்பது தெரியவந்தது.

ராஜபக்ஷ ஆட்சிபீடத்திற்கு எதிராக நாட்டிற்குள் பாரிய எதிர்ப்புக்கள் கிளம்பின. நாட்டில் ஜனநாயகத்தை ஸ்தாபித்தல், நிறைவேற்று ஜனாதிபதி முறையை ரத்துச் செய்தல் போன்ற விடயங்களை அடிப்படையாக கொண்டு ராஜபக்ஷ அரசுக்கெதிராக பாரிய எதிர்ப்புக்கள் மேலெழுந்தன. இதன் விளைவாக 2015 ஜனவரியில் மக்கள் பலத்தால் ஜனாதிபதி ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்டார்.

அப்போது அணி திரண்ட சக்திகள் புதிய தேர்தல் முறையொன்றை வேண்டியது. இதன் விளைவாக நல்லாட்சி அரசாங்கத்திற்கு புதிய தேர்தல் முறை சீர்திருத்தம் தொடர்பில் குழுவொன்றை நியமிக்க வேண்டியேற்பட்டது. அதன்படி, உள்ளூராட்சி மன்றங்களை மையப்படுத்தி புதிய தேர்தல் முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்குரிய எல்லை நிர்ணய பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்டம் 2017 ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதி மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் மஹிந்த அணியினரின் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

**புதிய தேர்தல் முறை**

புதிய தேர்தல் முறைக்கமைய விருப்பு வாக்கு முறை இல்லாமல் போவதுடன் ஒரு தொகுதிக்கு ஒரு உறுப்பினர் தெரிவாகிறார். அத்துடன் விகிதாசார முறையும் பாதுகாக்கப்படுகிறது. உள்ளூராட்சி சபையொன்றுக்கு கடந்த காலப்பகுதியில் முழு உள்ளூராட்சி சபைகளையும் உள்ளடக்கும் வகையில் வேட்பாளர்களை தேர்தலில் களமிறக்கும் முறையே காணப்பட்டது. புதிய முறையின் கீழ் உள்ளூராட்சி சபைக்குரிய கிராம சேவகர் பிரிவுகளின் படி தொகுதி முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, உள்ளூராட்சி சபையொன்றுக்கு பல தொகுதிகள் இருக்கலாம். குறைந்தபட்சம் ஒரு தொகுதிக்குள் இரண்டு கிராம சேவகப் பிரிவுகளாவது உள்ளடங்கும். சிலபோது ஐந்தாறு கிராம சேவகப் பிரிவுகளும் உள்ளடங்குவதற்கான சாத்தியங்கள் உள்ளன. இதை விடவும் அதிகரிப்பதற்கான வாய்ப்புகளும் காணப்படுகின்றன. உள்ளூராட்சி மன்றங்களின் சனத்தொகை அடிப்படையிலேயே அது பிரிக்கப்படுகின்றது.

ஒரு உள்ளூராட்சி சபைக்கு இரண்டு வேட்மனுத் தாக்கலை சமர்ப்பிக்க வேண்டும். ஒரு வேட்புமனுப் பத்திரம் போட்டியிடுபவர்களின் பட்டியலாகவும் மற்றைய வேட்புமனுப் பத்திரம் மேலதிக பட்டியலொன்றாகவும் இருக்கும். குறித்த உள்ளூராட்சி சபைக்குரிய தொகுதியில் போட்டியிடும் பட்டியலில் 60 வீதமும், மேலதிக பட்டியலில் 40 வீதமும் என்பதாக வேட்பாளர்களை நியமிக்க வேண்டும். தொகுதியில் போட்டியிடும் பட்டியலுக்கு பெயரிடப்படும் வேட்பாளர்கள் அந்தந்த தொகுதியில் தான் வசிக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. எனினும் அவர் குறிப்பிட்ட உள்ளூராட்சி அதிகார எல்லைப் பிரதேசத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.

இதில் 40 வீதம் என முன்வைக்கப்படும் பட்டியலுக்கு கட்டாயமாக இன்னும் 3 பேர் உள்ளடக்கப்பட்டு அப்பட்டியல் தயாரிக்கப்படுகிறது. போட்டியாளர் பட்டியலில் கட்டாயம் 10 வீத பெண் பிரதிநித்துவம் காணப்பட வேண்டும். மேலதிக பட்டியலில் 50 வீத பெண் பிரதிநிதித்துவம் காணப்பட வேண்டும்.

தேர்தலின் பின்னர் அந்தந்த கட்சிக்கு அல்லது சுயேட்சைக் குழுவுக்கு கிடைக்கின்ற உறுப்பினர் எண்ணிக்கையில் 25 வீதம் பெண்கள் நியமிக்கப்பட வேண்டும். போட்டியிடாத பட்டியல் எனப்படும் விகிதாசாரப் பட்டியல் மூலம் உறுப்பினர்களை நியமிக்கும் முழு அதிகாரமும் அந்தந்த கட்சிகளின் பொதுச் செயலாளர்களுக்கும் சுயேட்சை குழுத் தலைவர்களுக்குமே உள்ளது.

உதாரணமாக 12 தொகுதிகள் உள்ள உள்ளூராட்சி சபையொன்றை எடுத்துக் கொள்வோம்.

01. தொகுதிகளில் (போட்டியிடும் பட்டியலில்) உறுப்பினர்கள் 12 = 60%

02. போட்டியிடாத பட்டியலில் உள்ள உறுப்பினர்கள் 08 = 40%

3 ஐ கூட்டினால் 8 + 3 = 11.

விகிதாசார முறையின் கீழ் உள்ளூ [illegible]

தேர்தல்களிலும் தெரிவுசெய்யப்பட வேண்டிய உறுப்பினர் எண்ணிக்கைக்கு 3 ஐ கூட்டி வேட்பாளர் பட்டியலை முன்வைக்கும் முறையே இதுவரை காலமுமாக காணப்பட்டது. இம்முறையானது புதிய உள்ளூராட்சி சபைத் தேர்தல் முறையிலும் அவ்வாறே செயற்படுத்தப்படுகின்றது.

ஏதாவதொரு உள்ளூராட்சி சபைக்கு தெரிவுசெய்யப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 20 என வைத்துக் கொள்வோம். நூற்றுக்கு 60 வீதம் என்பதாக 12 உறுப்பினர்கள் தொகுதி அடிப்படையில் தெரிவாவர். நூற்றுக்கு 40 வீதம் என்னும் 08 உறுப்பினர்கள் மேலதிக பட்டியலிலிருந்தே தெரிவாகின்றனர். அம்மேலதிக பட்டியல் 08 பேராக இருப்பினும் அப்பட்டியலில் கட்டாயமாக 3 ஐ சேர்த்து 11 பேரை கொண்ட மேலதிக பட்டியலொன்றைத் தயாரிக்க வேண்டும்.

சிலபோது தெரிவுசெய்யப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மாற்றத்திற்கு உள்ளாகலாம் என்பதனாலும் பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டும் என்கின்ற காரணத்தினாலுமே மேலதிக பட்டியலில் 3 பேரை இணைக்கும் யோசனை கொண்டு வரப்பட்டுள்ளது.

**வாக்காளர் அட்டை**

வாக்காளர் பட்டியலில் குறித்த தொகுதியில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேற்சைக் குழுக்களின் பெயர் மற்றும் தேர்தல் இலக்கங்கள் மாத்திரமே உள்ளடங்கியிருக்கும். வேட்பாளர்களின் பெயர் அதில் உள்ளடங்கியிருக்காது. அதாவது, வாக்காளர் ஏதாவதொரு கட்சிக்கு அல்லது சுயேட்சைக் குழுக்கே வாக்களிக்க வேண்டும்.

A, B, C ஆகிய 3 கட்சிகளும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெற்றுக் கொண்ட வாக்குகளின் சதவீதம் முறையே 50%, 30%, 20% என்பதாக வைத்துக் கொள்வோம். அப்போது அந்தந்த கட்சிக்குரிய உறுப்பினர்களின் எண்ணிக்கை விகிதாசார முறையில் தீர்மானிக்கப்படுகின்றது.

அதன்படி,

A கட்சி - (50%) - உறுப்பினர்களின் எண்ணிக்கை 10

B கட்சி - (30%) - உறுப்பிளர்களின் எண்ணிக்கை 06

C கட்சி - (20%) - உறுப்பினர்களின் எண்ணிக்கை 04

இங்கு A கட்சி 10 தொகுதிகளை வெற்றிகொண்டுள்ளது எனில், அவர்களுக்கு அடுத்த (மேலதிக) பட்டியலிலிருந்து நியமிப்புக்கள் தேவைப்படுவதில்லை. A கட்சி 08 தொகுதிகளை வெற்றிகொண்டுள்ளது எனில், அவர்களது உறுப்பினர்களின் எண்ணிக்கை பூர்த்தி செய்வதற்கு அடுத்த பட்டியலிலிருந்து இருவரை நியமிக்க வேண்டும். ஏதாவதொரு விதத்தில் A கட்சி 12 தொகுதிகளிலும் வெற்றிபெற்றுள்ளது என்றால் அவர்களுக்குரிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 10 அல்லது 12 ஆக மாறும்.

அவ்வாறான சந்தர்ப்பத்தில் சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 20 அல்லாமல் 22 ஆக மாறும். அதனால், இறுதிப் பெறுபேறு வெளியாகும் வரையில் உறுதியான உறுப்பினர் எண்ணிக்கை குறித்த ஆரூடங்களை கூற முடியாது. B மற்றும் C கட்சிகளுக்கும் மேற்போந்த வகையிலேயே உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர்.

**பெண்கள் பிரதிநித்துவம்**

A கட்சிக்குரிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 10 என்பதனால் அதில் 25% என்பது 2.5 ஆகும். அதனை 3 என்பதாகக் கருதி 10 உறுப்பினர்களுள் 3 பெண் பிரதிநித்துவம் வழங்கப்பட வேண்டும். இங்கு தொகுதி அடிப்படையில் ஒரு பெண் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என வைத்துக் கொண்டால் எஞ்சிய இரண்டு பேரையும் போட்டியிடாதோர் பட்டியலிலிருந்து நியமிக்க வேண்டும். தொகுதியிலிருந்து ஒரு பெண்ணாவது தெரிவு செய்யப்படாவிட்டால் அம்மூவரையும் பட்டியலிலருந்தே நியமிக்க வேண்டும். ஏதாவதொரு கட்சி பெற்றுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை 3 ஆக இருந்தால் அக்கட்சி குறைந்த பட்சம் ஒரு பெண் பிரதிநிதியை நியமிக்க வேண்டும். ஒரு கட்சி பெற்றுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை 2 அல்லது ஒன்று என்பதாக வைத்துக்கொண்டால் பெண் பிரதிநிதித்துவம் கட்டாயமில்லை.

முன்பிருந்த தேர்தல் முறையில் காணப்பட்ட வெற்றிபெறும் கட்சிக்கு கிடைக்கின்ற மேலதிக (போனஸ்) ஆசனம் புதிய தேர்தல் முறைக்கூடாக இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. புதிய தேர்தல் முறையின் படி, வெளிக்கள செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற அரசாங்க அதிகாரிகளுக்கு குறித்த தொகுதிக்குள் தேர்தலில் போட்டியிடுவது தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வதிகாரி குறித்த உள்ளூராட்சி மன்றத்திற்கு வெளியில் சேவையாற்றுகிறார் என்றால் குறித்த உள்ளூராட்சி சபைக்கு போட்டியிட முடியும். இது தொடர்பில் தேர்தல் சட்டத்தில் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது

"வெளிக்கள செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற அரச நிர்வாகியொருவர்" என்பதாக குறிப்பிட்டு அபிவிருத்தி, நலனோம்புகை, பொருளாதாரம், சமூகம், சுகாதாரம் அல்லது அவரது விடயப் பரப்புக்குள்ளால் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடும் ஒருவர் எனவும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

வாக்கெடுப்பு நடைபெறும் தினத்திற்கு முன்னைய வருடத்திற்குள் குறிப்பிட்ட அதிகாரி அவ் உள்ளூராட்சி அதிகார எல்லைப் பிரதேசத்திற்குள் சேவையாற்றியிருந்தால் அவருக்கு அச்சபைப் பிரதேசத்தில் உள்ள தொகுதியில் வேட்பாளராக களமிறங்க முடியாது.

**பல்அங்கத்தவர் தொகுதி**

ஒரு தேர்தல் தொகுதிக்கு இரண்டு உறுப்பினர்கள் அல்லது மூன்று உறுப்பினர்களை நியமிப்பதே பல் அங்கத்தவர் தொகுதி என அழைக்கப்படும். இரண்டு விடயங்களை அடிப்படையாக கொண்டு இம்முறை உருவாக்கப்பட்டுள்ளது. ஏதாவதொரு தொகுதியில் சிங்களம், தமிழ், முஸ்லிம் என இனங்கள் சம அளவில் உள்ளதென்றால் அங்கு 3 இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அது பல் அங்கத்தவர் தொகுதியாக பெயரிடப்படும். இதன் மூலம் குறித்த தொகுதிக்கு 3 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள். சில தொகுதிகளில் சிங்கள, முஸ்லிம் மக்கள் சமமாக இருப்பார்கள் என்றால், அது இரு அங்கத்தவர்களை கொண்ட தேர்தல் தொகுதியாக அமைக்கப்படும்.

ஒரு தொகுதியில் உள்ள சனத்தொகை அளவு அதிகரித்திருப்பதே மற்றைய முறையாக உள்ளது. இங்கும் பல் அங்கத்தவர் தொகுதி அமுல்படுத்தப்படும். ஏதாவதொரு பல் அங்கத்தவர் தொகுதியொன்றில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களுள் தொகுதியில் வெற்றியீட்டும் கட்சிக்கு அல்லது சுயாதீனக் குழுவுக்கு பல் அங்கத்தவர் தொகுதிக்குரிய உறுப்பினர்கள் கிடைக்கும். அப்பல் அங்கத்தவர் தொகுதியிலுள்ள வேறு கட்சிகளுக்கோ அல்லது சுயாதீன குழுக்களுக்கோ அவ்வுறுப்பினர்கள் பிரிந்து செல்லாது.

(பக்.15)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# “இளம் கண்டுபிடிப்பாளர்களை உருவாக்க வேண்டியது இலங்கையில் உள்ள ஒவ்வொரு பாடசாலையினதும் கடமை”

• அனஸ் அப்பாஸ்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக் குழு கண்டுபிடிப்பாளர் என்பதற்கு தகுதியையும், அந்தஸ்தையும் பெற்றவர்களை கௌரவிக்கும் முகமாக அடையாள அட்டையை (இலங்கை கண்டுபிடிப்பாளர் என்ற அரச அந்தஸ்து) வழங்க கடந்த வருட இளம் கண்டுபிடிப்பாளர்களுக்கான தினத்தில் தீர்மானித்தது.

அந்த வகையில் இந்த அடையாள அட்டை கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி மாணவன் ஜீ.எம். அப்ராத் அஹ்ஸன் என்ற மாணவனுக்கு இவ்வருடம் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (ஒக்டோபர் 26) விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த கலந்து கொண்ட இளம் கண்டுபிடிப்பாளர்களுக்கான தேசிய தின நிகழ்வில், இலங்கை புத்தாக்குனர் ஆணையாளர் ஸ்ரீ. மஹேஸ் எதிரிசிங்க அவர்களால் வழங்கி வைக்கப்பட்டது.

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு பின்வரும் சலுகைகளை இந்த அடையாள அட்டைக்கு வழங்கியுள்ளது.

1. அனைத்து அரச ஆராய்ச்சி அலுவலகங்களிலும் இலவசமாக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.
2. mydeal.lk இல் பொருட்களை கொள்வனவு செய்ய விலைக்கழிவு.
3. இலவச அரச போக்குவரத்து வசதிகள்.
4. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விஞ்ஞான கண்காட்சிப் போட்டிகளில் பங்குகொள்வதற்கான வசதிகள்.
5. கண்டுபிடிப்புக்களை வர்த்தக மயப் படுத்துவதற்கான உதவிகள்.
6. Airtel Sim மூலம் இலவசமாக அழைப்புகளை (call) மேற்கொள்ளல்.







7. Lanka hospital இல் சிகிச்சை பெற விஷேட சலுகை
8. Softlogic *10%* விலைக்கழிவு
9. DINAPALA group 10% விலைக்கழிவு
10. Masters hardware *5-25%* விலைக் கழிவு
11. Mahanama paint *30%* விலைக்கழிவு
12. Hameedia *10 %* விலைக்கழிவு
13. Great wall *10 %* விலைக்கழிவு
14. Chinese Dragon *10%* விலைக்கழிவு
15. Brown's batteries *25%* விலைக்கழிவு
16. Auto mirag *10%* விலைக்கழிவு
17. Titus stores *10%* விலைக்கழிவு

என பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

சமூகத்தில் உள்ள தேவைகளை ஆராய்ந்து பல புதிய கண்டுபிடிப்புக்களை உருவாக்குதல் தனது இலக்கு என்கிறார் கபூர் முஹம்மட் அப்ராத் அஹ்ஸன். அம்பாறை மாவட்டத்தில் சாய்ந்தமருது பிரதேச சபைக்கு உட்பட்ட வொலிவோரியன் கிராமத்தில் வசிக்கும் அப்துல் கபூர் மற்றும் ரிபாயா ஆகியோரின் இளைய மகனான இவர், ஸாஹிரா கல்லூரியில் தரம் 8 இல் கல்வி கற்கின்றார். இவரது கண்டுபிடிப்பு தானியங்களின் பதர்களை வேறாக்கும் மற்றும் மண்ணை பல பிரிவுகளாகப் பிரிக்கும் இயந்திரமாகும்.

இந்த இயந்திரம் குறைந்த நேரத்தில் குறைந்த மின்சக்தியைப் பயன்படுத்தி அதிகளவான தானியங்களின் பதர்களை வேறாக்குகிறது. கட்டுமாணப் பணிகளில் ஈடுபடும் கட்டுமாணப் பணியாளர்கள் மண்ணை பல பகுதியாகப் பிரிப்பதற்கு செலவாகும் அதிக நேரத்தை இந்த இயந்திரத்தைப் பயன்படுத்துவதால் குறைத்து, விரைவாக மண்ணை பல பிரிவுகளாகப் பிரிக்க முடிகிறது. இவ்வியந்திரத்தின் உற்பத்திச் செலவை தவிர வேறு எந்த ஒரு செலவும் இல்லை எனவும் எதிர்காலத்தில் இந்த இயந்திரத்தை சந்தைப்படுத்த இருப்பதாகவும் கூறுகிறார் அப்ராத்.

விஞ்ஞான தொழிநுட்ப ஆராய்ச்சி அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு நடாத்திய போட்டியில் தேசிய ரீதியில் பங்குபற்ற வாய்ப்பைப் பெற்ற அப்ராத், தனது பாடசாலை காலத்திலேயே பல கண்டுபிடிப்புக்களை உருவாக்கியதோடு நின்றுவிடாமல் அதற்கான அங்கீகாரமாக



இலங்கை புலமை உரிமைச் சொத்து நிறுவன ஆக்கவுரிமை பத்திரம், இலங்கை கண்டுபிடிப்பாளர் அடையாள அட்டை என்பன பெற்றுள்ளமை விஷேட அம்சம்.

அப்ராத் தரம் 5 இல் படிக்கும் காலத்தில், உயர்தர தொழில்நுட்ப பிரிவைச் சேர்ந்த மாணவர் ஒருவர் இயந்திரம் ஒன்றை உருவாக்கி தனது வகுப்பறைக்கு வந்து விளக்கிய போதே தானும் இதே போன்று பல புதிய கண்டுபிடிப்புக்களை உருவாக்க வேண்டும் என்று தனது ஆழ் மனதில் உதித்த ஆர்வத்தினால் தற்போது பல புத்தாக்கங்களை உருவாக்க முடிந்தது என்கிறார் அப்ராத்.

இலங்கையில் உள்ள கண்டுபிடிப்பாளர்களுக்காக போட்டிகளை நடாத்தும் இலங்கை பொறியியலாளர் நிறுவனம் நடாத்திய போட்டியில் தேசிய ரீதியில் இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு, களனி பல்கலைக்கழகம் தேசிய ரீதியாக நடாத்தும் Vidya - 2017 Green Innovation என்ற போட்டியிலும் கலந்து கொள்வதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளார்.

சாதனைக்கு அருள் கூர்ந்த வல்ல இறைவனுக்கும், அவனது மிகப்பெரும் அருளான தனது அன்பு பெற்றோர்க்கும், சகோதர, சகோதரிகள், முக்கியமாக கல்லூரி அதிபர் எம்.எஸ். முஹம்மட், கல்லூரி புத்தாக்குனர் கழக பொறுப்பாசிரியர் ஏ. ஆதம்பாவா, தனது வகுப்பாசிரியர் மற்றும் உயர் தர தொழில்நுட்பப் பிரிவு மாணவன் சவ்பாத் நானாவுக்கும் மனமார்ந்த நன்றிகளை காணிக்கையாக்கும் அப்ராத், ''எனது கண்டுபிடிப்புப் பயணத்தில் எனது தாயின் சகோதரர் ரிபாய் மாமாவின் பங்கு முக்கியமானது. நான் இயந்திரங்களை உருவாக்க தேவையான உபகரணங்களை பல இடங்களில் சென்று பெற்றுத் தருவார். எனது கண்டுபிடிப்புக்களின் பின்னால் அவரது ஒத்துழைப்பும் உள்ளது'' என்று சொல்லி முடிக்கின்றார்.

சாய்ந்தமருது இளம் கண்டுபிடிப்பாளர்களுக்கான ஒன்றியம், கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியின் புத்தாக்குனர் கழகம், மாவனல்லை ஸாஹிராக் கல்லூரியின் புத்தாக்குனர் குழு ஆகிய கண்டுபிடிப்பாளர் தோற்றுவாய்களை இலங்கையில் உள்ள இதர பாடசாலைகளின் நிர்வாகங்களும் அணுகி, அதன் மூலம் பெற்ற வழிகாட்டலை நடைமுறைப்படுத்தினால் சர்வதேச தரத்திற்கு தொடர் இளம் கண்டுபிடிப்பாளர்களை உருவாக்கிய பெருமை இந்நாட்டின் கௌரவ குடிமக்களாகிய எம்மைச் சாரும் என்பது எனது கருத்து. ஏனைய பாடசாலைகளுக்கு தனது அனுபவங்களை பகிரும் செயன்முறைகளை துரிதமாக ஆரம்பிப்பது இவ்வாறு கண்டுபிடிப்பாளர்களை உதயமாக்கும் பாடசாலைகளினது கடமை.

## பேரம் பேசும்... (03 ஆம் பக்கத் தொடர்)

அவர்களிடம் இஸ்லாம் எதிர்பார்க்கின்ற பண்பாகவும் இதுவே உள்ளது. அதைத்தான் அப்பாவி மக்களும் அவர்களிடம் எதிர்பார்த்தார்கள்.

நேர்மை, ஒழுக்க விழுமியம், கௌரவம், அர்ப்பணம் மிக்க சேவை என்பனவற்றுக்கு ஏனைய கட்சிகளுக்கு ஒரு உதாரணமாக முஸ்லிம் காங்கிரஸ் அமைந்திருக்க வேண்டும். காரணம் அவர்கள் மக்கள் மத்தியில் காட்டிய இஸ்லாம் என்ற கோஷம் இந்தப் பண்புகளைக் கொண்டவர்களாக அவர்களும் அவர்களது கட்சியும் இருக்க வேண்டும் என்பதைத்தான் வலியுறுத்துகின்றது.

ஆனால் இவை அனைத்துக்கும் முற்றிலும் மாறாக இன்றைய முஸ்லிம் காங்கிரஸ் ஊழலுக்கும், சந்தர்ப்பவாதத்துக்கும், அதிகாரம் மற்றும் பதவிப் பேராசைக்கும், குழுச் சண்டைக்கும், கேவலமான பாலியல் ஊழல்களுக்கும், பதவிக்காக ஒருவர் மற்றவரை காட்டிக் கொடுப்பதற்கும் உரித்தான ஒரு கும்பலைக் கொண்ட கட்சியாக மாறிவிட்டது. இந்த மாற்றம் சமூகத்தால் தாங்கிக் கொள்ள முடியாததாகவும், சமூகத்துக்கு ஒரு சுமையாகவும் காணப்படுகின்றது.

பெரும்பான்மை சமூகத்தில் உள்ள தேசியவாதிகளும் நவதேசியவாதிகளும் முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான தமது நிகழ்ச்சி நிரலை மிகவும் திட்டமிட்டு அமுல் செய்து வருகின்ற ஒரு காலப் பகுதியில் முஸ்லிம் அரசியல்வாதிகளினதும் மக்கள் பிரதி நிதிகளினதும் இன்றைய நிலை மிகவும் கவலைக்கிடமானதாகும்.

மஹிந்த ராஜபக்ஷ அரசில் இருந்து முஸ்லிம்கள் விலகியமைக்குக் காரணம் அவரது அரசால் முஸ்லிம்கள் மீது இழைக்கப்பட்ட கொடுமைகளே என்பதை முஸ்லிம் அரசியல் வாதிகள் வெளிச்சத்துக்கு கொண்டு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஹக்கீம் அனுப்பிய ராஜினாமாக் கடிதத்தில் ''எமது காலப் பகுதியின் பிரத்தியேகமான ஒரு அரசியல் தலைவராக உங்களது தனிப்பட்ட பங்களிப்புக்களை என்றும் நான் பசுமையுடன் நினைவு கூறுவேன். உங்கள் அமைச்சரவையில் ஒரு அமைச்சர் என்ற வகையில் நான் உங்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட மெச்சத்தக்க ஆதரவு உங்களிடம் இருந்து பிரிந்து செல்வதை வருத்தத்துக்குரிய ஒரு அனுபவமாகவே ஆக்கியுள்ளது. உங்களது தலைமையில் இந்த தேசம் பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. உங்களுக்கு மிக ஆழமான நன்றி செலுத்தியவனாகவும் நம்பிக்கையோடும் விடை பெறுகின்றேன்'' என்று தான் குறிப்பிட்டுள்ளார்.

மனதளவில் மஹிந்தவை புகழ்ந்து பாராட்டியவர்களாகத் தான் இவர்கள் இன்னமும் உள்ளனர். முன்னாள் ஜனாதிபதி பற்றிய ஹக்கீமின் வார்த்தைகள் அவ்வாறு தான் அமைந்துள்ளன. இந்த வார்த்தைகள் ஹக்கீமின் ராஜினாமாவோடு சம்பந்தப்பட்ட விடயம் அல்ல. ஆனால் மிகவும் தூர நோக்கோடு தேவை ஏற்பட்டால் மீண்டும் உங்களிடம் ஒரு ஊதாரியாக திரும்பி வருவேன் என்ற மழை காலத்தில் மீண்டும் ஒதுங்குவதற்கான ஒரு காப்புறுதி உத்தரவாதமாகத்தான் இந்தக் கடிதத்தின் வாசகங்கள் அமைந்துள்ளன.

இதே நிலைமைதான் அமைச்சர் பைஸர் முஸ்தபாவுடையதும். அளுத்கமை, பேருவளை, தர்காநகர் ஆகிய இடங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக அவ்வளவு பாரிய அளவிலான கலவரங்கள் இடம்பெற்றும் கூட மஹிந்த ராஜபக்ஷவையோ அல்லது அவரது சகோதரர் கோத்தாபய ராஜபக்ஷவையோ கண்டிக்க மறுத்தவர் தான் பைஸர் முஸ்தபா. மாறாக தமக்கு சில விடயங்களைக் கட்டுப்படுத்த அனுமதி தந்தமைக்காக பைஸர் முஸ்தபா இவர்கள் இருவரையும் பாராட்டவே செய்தார்.

அரசியல் யாப்பின் 18 ஆவது திருத்தம் நல்லாட்சியை நாட்டில் இருந்து அப்புறப்படுத்தி விட்டதாகவும், அப்போதைய ஜனாதிபதிக்கு மீண்டும் பதவிக்கு வரும் வாய்ப்புக்களை அது வழங்கியுள்ளதாகவும் தான் அதற்கு ஆதரவு வழங்க முன்னர் ஹக்கீம் கூறினார். ஆனால் 17 ஆவது திருத்தத்தில் அந்த விடயத்தை நீக்கும் பிரிவு மீண்டும் கடைசி நேரத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டது.

இவர்களது நிலைப்பாடுகள் எவ்வாறு இருந்தாலும் சரி தற்போதைய ஜனாதிபதியை நம்பி வாக்களித்த முஸ்லிம்களின் நிலைமை இன்று மிகவும் குழப்பமாகவும் மயக்கமாகவுமே உள்ளது. கொழுந்து விட்டு எரியும் தமது பிரச்சினைகளுக்கு முடிவுகள் கிட்டும் என்று அவர்கள் உறுதியாக நம்பினார்கள். மாறாக தமது நம்பிக்கை [illegible] முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு [illegible]டும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட வேண்டும் என்று அவர்கள் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை.

**முஸ்லிம்கள் இன்று எதிர்நோக்கியுள்ள சில முக்கிய பிரச்சினைகள்:**

1. அண்மைக்கால சில மதிப்பீடுகளின் படி கால் நூற்றாண்டுகளுக்கு முன்னால் வட பகுதியில் இருந்து விடுதலைப் புலிகளால் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களில் சுமார் 130,0000 பேர் இன்னமும் மீள் குடியேற்றப்படாதவர்களாகவே உள்ளனர்.

2. யுத்த காலத்தில் கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கு சொந்தமான சுமார் 30,000 ஏக்கர் பயிர்ச் செய்கை நிலங்கள் விடுதலைப் புலிகளாலும் தமிழ் மக்களாலும் பலவந்தமாகப் பறிக்கப்பட்டன. இன்னமும் அவை முஸ்லிம்களிடம் மீள ஒப்படைக்கப்படவில்லை. இது குறித்து யாருக்குமே அக்கறை இல்லை. ஆனால் பாதிக்கப்பட்ட மக்கள் மட்டும் இன்னமும் தவிப்புடன் காணப்படுகின்றனர்.

3. யுத்தம் நடந்த காலத்தில் மட்டக்களப்புக்கு அருகில் சிறிய கிராமங்களில் வாழ்ந்த முஸ்லிம்கள் பாதுகாப்பு காரணமாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். இந்த மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப வேண்டும் என விரும்புகின்றனர். ஆனால் யாருமே இதில் அக்கறை எடுத்துக் கொள்ளாததால் இன்னமும் அவர்களால் சொந்த இடங்களுக்கு செல்ல முடியாமல் உள்ளது. இதேபோல் மீள்குடியேற்றம் தொடர்பாக இன்னும் பல இடங்களில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன.

4. கிழக்கில் 30000 ஏக்கர் காணி தொடர்பான பிரச்சினை இனங்களுக்கு இடையிலான நல்லுறவுக்கு தொடர்ந்தும் பாதகமாகக் காணப்படுகின்றது. இந்தப் பிரச்சினைக்கு துரித தீர்வு கண்டால் தான் அது நல்லிணக்கத்துக்கு வழிவகுக்கும்.

5. இந்தப் பிரச்சினை ராஜபக்ஷ அரசின் கபடத்தனமான சிங்கள குடியேற்ற திட்டம் காரணமாக மேலும் மோசம் அடைந்தது. இந்த திட்டத்தின் கீழ் பாதுகாப்பை காரணம் காட்டி ஆயுதப் படைகளால் மேலும் பல முஸ்லிம்களுக்கு சொந்தமான காணிகள் அபகரிக்கப்பட்டன.

6. புல்மோட்டையிலும் முஸ்லிம் [illegible]

அங்கு முஸ்லிம்களுக்கு பெரும் அநீதி இழைக்கப்பட்டது. பல்வேறு தேவைகளுக்காக பயன்படுத்தக் கூடிய இந்தக் காணிகளை பறிகொடுத்து விட்டு முஸ்லிம்கள் நிர்க்கதி நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

7. ஏனைய பல பகுதிகளிலும் முஸ்லிம்களுக்கு சொந்தமான காணிகள் இவ்வாறு பலவந்தமாகப் பறிக்கப்பட்டுள்ளன.

8. அம்பாறை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக சவூதி அரேபிய அரசால் நன்கொடையாக வழங்கப்பட்ட 500 வீடுகள் முஸ்லிம்களுக்கு வழங்கப்படாமல் இன்று பற்றைக் காடுகளாக மாறியுள்ளன. சகல வசதிகளுடனும் இந்த வீடுகள் மாதிரிக் கிராமமாக உருவாக்கப்பட்டது. இந்த வீடுகளை வழங்க விடாமல் தடுத்தமை இந்த நாட்டில் சிங்கள இனவாதத்தின் அடையாளச் சின்னமாக அமைந்துள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணமாக வெளிநாடுகளால் அனுப்பப்பட்ட கோடிக்கணக்கான ரூபாய்களை இதயமே இன்றி கொள்ளையடித்து விட்டு தான் மக்களுக்கு நிவாரணமாகவும் நன்கொடையாகவும் வழங்கப்பட்ட இந்த வீடுகளையும் வழங்க விடாமல் தடுத்தார்கள்.

9. ஒலுவில் துறைமுகம் கட்டப்பட்டது முதல் இந்தப் பிரதேச மீனவர்கள் சொல்லொணா துயரங்களை எதிர் நோக்கியுள்ளனர். மீனவர்களின் வாழ்வாதாரத்தை மீளக் கட்டி எழுப்ப இந்த விடயங்களில் உடனடி கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

இவ்வாறான இன்னும் எத்தனையோ பிரச்சினைகளுக்கு முஸ்லிம் சமூகம் தனது அமைச்சர்கள் மூலமும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலமும் தீர்வினை எதிர்நோக்கியுள்ளது. இதனால் தனிநபர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்குவது சமூகத்துக்கு எந்த வகையிலும் பிரயோசனம் அற்றது என்ற முடிவுக்கு சமூகம் வந்துள்ளது.

2015 ஆகஸ்ட் 17 தேர்தல் முஸ்லிம் காங்கிரஸின் பல பிரதிநிதிகளையும் அதில் இருந்து பிரிந்து சென்றவர்களையும் கிட்டத்தட்ட நடு வீதிக்கு கொண்டு வந்து விட்டது என்று தான் குறிப்பிட வேண்டும். காரணம் இவர்கள் தெரிவு செய்யப்பட்டது தமது கட்சியின் வாக்குகளால் அல்ல மாறாக ஐக்கிய தேசியக் கட்சியின் முஸ்லிம் வாக்குகள் தான் இவர்களைக் கரை சேர்த்தது.

2015 தேர்தல் முடிவுகள் பற்றி கிழக்கு மாகாணத்தின் கீர்த்திமிக்க கல்விமானும் தற்போது அவுஸ்திரேலியாவில் வசிப்பவருமான கலாநிதி அமீர் அலி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

''ஒரு அரசியல் கட்சியின் உறுப்பினர்கள் தமது சொந்தக் கட்சியின் அசல் சின்னத்தையும், விஞ்ஞாபனத்தையும் இன்னொரு கட்சியிடம் சரணடையச் செய்து தேர்தலில் வெல்ல வேண்டும் என்பதற்காகவும் அமைச்சரவையில் இடம்பிடிப்பதற்காகவும் அந்தக் கட்சியைத் தழுவிக் கொண்டால் சம்பந்தப்பட்ட கட்சியின் அர்ப்பணம் மிக்க ஆதரவாளர்களுக்கும் தொண்டர்களுக்கும் அந்தக் கட்சி கூறும் செய்தி என்ன? அதேபோல் தாங்கள் தழுவிக் கொண்ட கட்சியின் ஆதரவாளர்களுக்கும் தொண்டர்களுக்கும் அவர்கள் கூறும் செய்தி தான் என்ன? இவர்கள் தமது சொந்தக் கட்சிக்கு துரோகம் செய்த ஒரு கூட்டம் அல்லவா? இவர்கள் இன்னொரு கட்சிக்குள் கூட்டமாகப் பறந்து சென்ற பறவைகள் போன்றவர்கள் அல்லவா? உடனுக்குடன் கோட்டையும் அதன் நிறத்தையும் மாற்றக் கூடிய இவர்களை யார் தான் நம்ப முடியும்?''

முஸ்லிம்கள் தமது சொந்த அரசியல் வாதிகளே தமக்கு துரோகம் இழைத்து விட்டதாகவும் தமது சொந்த நிகழ்ச்சி நிரலுக்காக சமூகம் காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும, கடந்த கால் நூற்றாண்டில் இவர்கள் சமூகத்துக்கு அழிவைத் தவிர வேறு எதையும் கொண்டு வரவில்லை எனவும் இன்று நம்புகின்றார்கள்.

இந்த ஏமாற்று அரசியல் பிரதிநிதித்துவத்தில் இருந்து முஸ்லிம் சமூகம் இன்று தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள வேண்டிய அல்லது விடுவித்துக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பான மாற்றங்கள் சவாலுக்கு உரியவை. அந்த சவாலை எதிர்நோக்க முஸ்லிம் சிவில் சமூகம் தயாரா என்பது தான் இன்றைய பிரதான கேள்வி. இன்று எதிர்நோக்கப்படும் சவால்களின் சரியான தாக்கத்தை இந்த சமூகம் உணர்ந்து கொள்ள இன்னும் பல காலம் செல்லலாம்.

சமூகத்துக்கு ஏற்பட்டுள்ள காலத்தின் தேவையை உணர்ந்து அகில இலங்கை ஜம்மிய்யத்துல் உலமாவும் மகத்தான பொறுப்பினை ஏற்க வேண்டிய ஒரு கால கட்டம் இதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



• ஷெய்க் அக்ரம் அப்துல் ஸமத்

## மகாஸித் தேடல்கள் (5)



# மகாஸிதுஷ் ஷரீஆ என்றால் என்ன?

மகாஸிதுஷ் ஷரீஆ என்ற சொல்லாடலுக்கு இன்றைய ஷரீஆ புழக்கத்தில் முதன்மையான ஒரு இடம் இருக்கிறது. சார்பாகவோ எதிராகவோ இன்று இந்த சொல்லைப் பயன்படுத்தாத ஷரீஆத் துறையினர் இல்லை என்று சொல்லும் அளவுக்கு, அந்த சொல்லின் மவுசு அதிகரித்திருக்கிறது. சில சமயங்களில் அது பெருமையாகவும் மாறிவிட்டிருக்கிறது.

ஆனால் அந்தச் சொல்லைப் பயன்படுத்தும் எல்லோரும் அதன் பொருள் பரப்பை மிகச் சரியாக விளங்கித்தான் பயன்படுத்துகின்றனரா? என்ற ஒரு கேள்வி என்னில் அடிக்கடி எழுவதுண்டு. சிலர் அதனை இன்றைய முகாமைத்துவக் கோட்பாடுகள் வரையறை செய்யும் 'Goal', 'Objective' போன்ற கலைச் சொற்களின் ஒத்த கருத்தாகப் பார்க்கின்றனர். இன்னும் சிலர் அதனை பொது விழுமியங்கள், விதிகள், கோட்பாடுகளாகப் புரிந்து கொள்கின்றனர்.

இங்கு இந்தப் புரிதல்களின் சரி பிழைகளுக்கு அப்பால் நாம் புரிந்துகொள்ள வேண்டிய ஒரு முக்கிய உண்மை இருக்கிறது. அதாவது, கலாநிதி ஜாஸிர் அவ்தா அவர்கள் கூறுவது போல்[1] மகாஸிதுஷ் ஷரீஆ எனும் கலை, சுத்தமாக இஸ்லாமிய பாரம்பரியங்களுக்கு உள்ளேயிருந்து கருக் கொண்ட ஒரு கலை. இந்தப் பிரபஞ்சம், மனித வாழ்வு குறித்த இஸ்லாமிய தர்க்கவியலின் அடிப்படையில் உருவான ஒரு கலை. அது மேற்குத் தத்துவங்களின் எதிரொலியாக இஸ்லாமியப் புலத்தில் முளைத்த ஒரு கலை என யாரும் புரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை.

அந்தவகையில் மகாஸித் குறித்த எச்சரிக்கைகளும் சந்தேகங்களும் அவசியமற்றவை. மாத்திரமன்றி, மகாஸிதுஷ் ஷரீஆ என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்வதற்கான முயற்சியும் கூட வேற்றுத் தத்துவங்களின் எதிரொலியாய் அன்றி, இஸ்லாமிய சிந்தனைப் பாரம்பரியத்தினுள்ளே அது எவ்வாறு பிரயோகிக்கப்பட்டிருக்கிறது என்ற புரிதலே முக்கியமானது. சில சமயங்களில் வேற்றுத் தத்துவங்களில் நின்று மகாஸிதுஷ் ஷரீஆவுக்கு விளக்கமளிக்கும்போது, அடிப்படையில் எளிமையான ஒன்றை நாமே வலிந்து சிக்கல் படுத்தியதாக மாறி விடவும் வாய்ப்பிருக்கிறது.

இனி, மகாஸிதுஷ் ஷரீஆ என்றால் என்ன? என்ற கேள்விக்கு வருவோம். அதன் தத்துவார்த்த விளக்கங்களைத் தாண்டி, முடிந்தவரை இலகுவாகச் சொல்ல முயற்சிக்கிறேன். கலாநிதி அஹ்மத் அர்ரைஸூனி அவர்கள் மகாஸிதுஷ் ஷரீஆ என்றால் என்ன என்பதை கீழ்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகிறார். இங்கு கலாநிதி அஹ்மத் அர்ரைஸூனியின் வரைவிலக்கணம் தெரிவு செய்யப்பட்டமைக்குக் காரணம் எனது தேடலில் மிகவும் இலகுவான வரைவிலக்கணமாக நான் அதனையே காண்கிறேன்.

''மகாஸிதுஷ் ஷரீஆ என்பது, ஷரீஆ இறக்கப்பட்டதன் மூலம் இந்த உலகில் அமுலாக்கப்பட வேண்டிய இலக்குகள், அந்த இலக்குகள் மனித நலனுக்குரியவையாகும்.''[2]

இந்த வரைவிலக்கணம் இரண்டு பிரதானமான செய்திகளைச் சொல்லுகின்றன. முதலாவது, ஷரீஆ ஏன் இறக்கப்பட்டுள்ளது என்பதற்கு அல்லாஹ் தஆலா சில நோக்கங்களை வைத்துள்ளான். அதாவது மனித வாழ்வில் நிகழ வேண்டிய மாற்றங்கள் எவை என்பது தான் அந்த நோக்கங்கள். இந்த மாற்றங்களை நிகழ்த்தவே அல்லாஹ் ஷரீஆவை இறக்கி வைத்தான். அந்த மாற்றங்கள் நிகழ்த்தப்பட வேண்டும் என்பதே அல்லாஹ்தஆலாவின் எதிர்பார்ப்பு. அந்த மாற்றங்களையே அல்லது நோக்கங்களையே நாம் மகாஸித் என்கிறோம்.

இரண்டாவது, மனித வாழ்வில் நிகழ்த்தப்படும் அனைத்து மாற்றங்களும், மனித நலன் சம்பந்தப்பட்ட மாற்றங்களன்றி வேறில்லை. ஏனெனில், இவை அல்லாஹ்வுடைய ஷரீஆவின் மூலம் நிகழ்த்தப்படும் மாற்றங்கள். ஷரீஆ நலனையன்றி தீங்கைக் கொண்டு வர மாட்டாது. எனவே, மனிதனுக்கு நலனைக் கொண்டு வரக்கூடிய மாற்றங்களையே நாம் மகாஸித் என்கிறோம்.

அந்த வகையில் மனித வாழ்வில் ஷரீஆ அடைய விரும்பும் மனித நலன் சம்பந்தப்பட்ட இலக்குகளே மகாஸிதுஷ் ஷரீஆ எனப்படுகிறது. மகாஸிதுஷ் ஷரீஆவுக்கான விளக்கம் மேற்கண்டவாறு முன்வைக்கப்படும்போது, பலரிடத்தில் அது ஒரு கேள்வியை அல்லது அச்சத்தைத் தோற்றுவித்து விடுகிறது. மனித நலன் சம்பந்தப்பட்ட இலக்குகள் என்று சொல்லும்போது, அங்கு மனோ இச்சைகள் செல்வாக்குச் செலுத்துவதற்கான வாய்ப்பிருக்கிறதே என்ற ஒரு கேள்வி அல்லது அச்சம் ஏற்படுகிறது.

அதாவது மகாஸித் எது? என்று தீர்மானிக்கப்படும்போது, அங்கு மனிதன் தனது நலனை மாத்திரம் பார்த்து, மார்க்கத்தின் நலனை கவனத்தில் கொள்ளாமல் விடலாம். எனவே மகாஸித் என்பது மனோஇச்சைகள் பெரிதும் ஆதிக்கம் செலுத்தி, ஷரீஆவின் பெறுமானங்கள் வலுவிழந்த ஒன்றாக அடையாளப்படுத்தப்பட வாய்ப்பிருப்பதாக சிலர் நினைக்கலாம்.

இந்தக் கேள்விக்கான அல்லது அச்சத்திற்கான பதிலைக் காணும்போது, நாம் இரண்டு உண்மைகளை ஒத்துக் கொள்ள வேண்டும். முதலாவது, ஷரீஆவின் அடிப்படை நோக்கம் மனிதநலன் என்பது, இரண்டாவது, எந்தவொரு மகாஸிதும் மனித அனுமானங்களிலிருந்து தீர்மானிக்கப்படுவதில்லை, மாற்றமாக அல்குர்ஆனிலிருந்தும் சுன்னாவிலிருந்தும் திட்டவட்டமாகத் தீர்மானிக்கப்படுகின்ற ஒன்றே மகாஸிதாக அமையும். இந்த உண்மைகளை மகாஸித் அறிஞர்கள் எவ்வாறு விளங்கப்படுத்தியிருக்கிறார்கள் என்பதைப் பாருங்கள்.

முதலில் இமாம் இப்னுல் கையிம் சொல்லும் உண்மையை சற்று கவனியுங்கள். ''இம்மை மறுமை நலன்கள், தத்துவங்களை அஸ்திவாரமாகக் கொண்டே ஷரீஅத் எழுந்து நிற்கின்றது. அது முழுமையாக நீதியானது, அருள் நிறைந்தது, நியாயபூர்வமானது, நலன் பயக்கக் கூடியது. எந்த விவகாரமும் நீதியை விட்டு விலகி அநீதியை நோக்கியும், அருளிலிருந்து விலகி அதற்கு மாற்றமான நிலையை நோக்கியும், நலன்களை விட்டு தீங்கை நோக்கியும், நியாயத் தன்மையிலிருந்து அர்த்தமற்ற நிலையை நோக்கியும் செல்லும் எனின், அது ஷரீஅத்தாகக் காணப்பட மாட்டாது. அது ஷரீஅத்தினுள் வலிந்த விளக்கங்களின் அடிப்படையில் சேர்க்கப்பட்டாலும் கூட'' என்றார்கள்[3].

இமாம் இப்னுல் கையிமுடைய இந்த வார்த்தைகள் ஷரீஆ என்பதே நலன், நீதி, அருள், பயன் என்றுதான் சொல்கிறது. இந்தப் பண்புகளைப் பிரதிபலிக்காத ஒன்றை ஷரீஆ என்ற வட்டத்திலேயே உள்ளடக்க முடியாது என்கிறார். எனவே மனித நலன் என்பது ஷரீஆவின் முழு மொத்தத் தத்துவம் என்பதைப் புரிந்து கொள்ளலாம். அந்த வகையில் மனித நலனல்லாத ஒன்று ஒருபோதும் மகாஸிதாக அமைய மாட்டாது.

அடுத்து, இமாம் ஷாதிபி அவர்கள் தனது முவாபகாத் எனும் நூலின் மூன்றாம் பகுதியான மகாஸித் எனும் தலைப்பிற்கு முன்னுரை வழங்கும்போது, இம்மையிலும் மறுமையிலும் ஒரு சேர மனித நலனை நிலைநாட்டும் வகையிலேயே ஷரீஅத் இறக்கப்பட்டுள்ளது என்றும் மகாஸிதுகள் ஒவ்வொன்றும் மனித நலனை நிலைநாட்டும் வகையிலேயே காணப்படுகின்றன என்றும் குறிப்பிடுகிறார். இக்கருத்தை நிறுவும் வகையில் பல்வேறு அல்குர்ஆன் வசனங்களை ஆதாரமாகக் கொண்டுவருவதுடன், ஷரீஆவில் இவ்வுண்மை ஓரிரு வசனங்கள் மூலம் நிறுவப்படும் உண்மையன்று. மாற்றமாக, 'இஸ்திக்ராஃ' எனும் ஷரீஆவின் பெரும்பாலான கிளைப் பகுதிகளை ஆய்வு செய்வதன் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் ஒரு பொது முடிவாகும் என்று விளக்குகிறார்[4].



கலாநிதி ஜாஸிர் அவ்தா அவர்கள், இமாம் ஷாதிபியுடைய மகாஸித் சிந்தனையின் சிறப்பம்சத்தை விளங்கப்படுத்தும் போது, இமாம் ஷாதிபி செய்த முக்கியமான பணி, மகாஸிதை ஷரீஆவின் அடிப்படைகளுள் ஒன்றாக மாற்றியமையாகும். அது எவ்வாறு சாத்தியப்பட்டது எனின், ஒவ்வொரு மகாஸிதும், ஷரீஆவின் கிளைப் பகுதிகள் அனைத்தையும் அல்லது பெரும்பாலானவற்றை ஆய்வு செய்வதன் மூலம் பெறப்படும் பொது முடிவாகும். அந்த வகையில் ஒவ்வொரு மகாஸிதும் மிகவும் திட்டவட்டமாக நிரூபிக்கப்பட்ட ஒரு உண்மையாக மாறுகிறது. எனவே அது ஷரீஆவின் அடிப்படைகளில் ஒன்றாக மகாஸித் மாறுகிறது, என்கிறார்.[5]

இதிலிருந்து நாம் புரிந்து கொள்ளும் உண்மை என்னவெனின், மகாஸித் மனித அனுமானங்களிலிருந்து தீர்மானிக்கப்படுவதில்லை, ஷரீஆவிலிருந்தே பெறப்படுகிறது.

இக்கருத்தை நவீன காலத்தின் மற்றுமொரு மகாஸித் சிந்தனையாளர், கலாநிதி வஹ்பி ஆஷூர் அவர்கள் மிக எளிமையாக விளங்கப்படுத்துகிறார். ''மகாஸிதுகள் ஊடாகவே ஷரீஆவை மிகச் சரியாக விளங்கிக் கொள்ள முடியும். அதுபோல், ஷரீஆவிலிருந்தே மகாஸிதுகள் பெறப்படுகின்றன''[6] என்கிறார்.

இந்தக் கூற்றின் முதல் பாதியை விடவும் இரண்டாம் பாதியே நான் பேசும் கருத்தைத் தெளிவாக வலியுறுத்துகிறது. அதாவது, மகாஸித் என்பது விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில், மனித அறிவை மாத்திரம் வைத்து தீர்மானிக்கும் ஒரு விடயமல்ல, மாற்றமாக ஷரீஆவின் மகாஸிதுகள் எவை என்பதும் கூட ஷரீஆவிலிருந்தே தீர்மானிக்கப்படுகின்றன.

அல்குர்ஆனும் சுன்னாவும் வெறுமனே சட்டங்களை மாத்திரம் முன்வைக்கவில்லை. மாற்றமாக அந்த சட்டங்கள் அமுல்படுத்தப்படுவதன் நோக்கங்கள் என்ன என்பதையும் இணைத்தே பேசியிருக்கின்றன. பல சமயங்களில் அல்குர்ஆனும் சுன்னாவும் ஒரு சட்டத்தை முன்வைக்கும் போதோ அல்லது ஒரு சிந்தனையை முன்வைக்கும் போதோ அதற்கான நோக்கத்தையும் நேரடியாக அதனுடன் இணைத்து முன்வைப்பதைக் காணலாம்.

உதாரணமாக தொழுகை பற்றி இவ்வாறு சொல்கிறது. ''தொழுகையை நிலைநாட்டுங்கள். தொழுகை மானக்கேடானவற்றிலிருந்தும், பாவங்களிலிருந்தும் தடுக்கிறது. அல்லாஹ்வை நினைவுபடுத்தலே அதில் மிகவும் பிரதானமானது. நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிகிறான்'' (அன்கபூத் : 45).

இங்கு தொழுகை நிலைநாட்டப்பட வேண்டும் என்ற சட்டம் மாத்திரம் முன்வைக்கப்படவில்லை. மாற்றமாக தொழுகை ஏன் நிலைநாட்டப்பட வேண்டும் என்ற நோக்கமும் சொல்லப்படுகிறது. ஒன்று தொழுகை பாவ சூழலை பூமியில் இல்லாது செய்துவிடும். இரண்டாவது, அது இறை சிந்தனையை மனிதனில் எப்பொழுதும் தக்க வைத்திருக்கும்.

அதுபோல், அல்குர்ஆனும் சுன்னாவும் நோக்கங்களை நேரடியாக முன்வைக்காமல், மறைமுகமாக பல்வேறு வடிவில் மனித சிந்தனையை எட்டச் செய்கின்ற அணுகுமுறையையும் கடைபிடிக்கிறது. இதனைக் கண்டு கொள்ளும் வழியைத்தான் இமாம் ஷாதிபி அவர்கள் 'இஸ்திக்ராஃ' என்றார்கள். அதாவது, அல்குர்ஆனின் ஓரிரு வசனங்களிலோ அல்லது ஓரிரு ஹதீஸ்களிலோ அந்த நோக்கம் சொல்லப்பட்டிருக்க மாட்டாது. மாற்றமாக அல்குர்ஆனும் சுன்னாவும் சட்டங்களை முன்வைக்கும் போது ஒழுங்கை ஆய்வு செய்து பார்க்கின்ற பொழுது குறித்த சில பொது இலக்குகளை மையப்படுத்தி அனைத்து சட்டங்களும் அல்லது பெரும்பாலான சட்டங்கள் வகுக்கப்பட்டிருப்பதை அவதானிக்க முடியுமாக இருக்கும்.

உதாரணமாக நீதி, சுதந்திரம் போன்ற மகாஸிதுகள் மேற்சொன்ன வடிவிலேயே அல்குர்ஆனில் நிறுவப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் மனித வாழ்வில் நிலை நாட்டப்பட வேண்டும் என்ற வகையிலேயே இஸ்லாத்தின் அனைத்து சட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் இவை இஸ்லாம் முன்வைக்கும் முக்கியமான மகாஸிதுகள் என இமாம்கள் கருதுகின்றனர்.

மேற்சொன்ன விளக்கத்தின் சாராம்சம் என்னவெனின், மகாஸித் என்பது ஷரீஆவிலிருந்தே பெறப்படுகின்றது. ஒருபோதும் மனித மனோஇச்சைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் ஒரு விடயமல்ல. இது மகாஸித் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ளும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கியமான ஒரு வரையறையாகும்.

அடுத்து, மகாஸிதுஷ் ஷரீஆ என்று சொல்லும் போது நாம் புரிந்து கொள்ள வேண்டிய மற்றொரு வரையறை இருக்கிறது. அதாவது பலர் பல சமயங்களில் மகாஸித் என்பதை முகாமைத்துவ கற்கைகளில் முன்வைக்கப்படும் Goal, Objective போன்ற கலைச் சொற்களுக்கு சமானமானதாக விளங்கிக் கொள்கின்றனர். அதனடியாக நோக்கம் என்பது வேறு, வழிமுறை என்பது வேறு என்று பிரித்தறிகின்றனர்.

இந்தப் புரிதல் அடிப்படையில் தவறானதல்ல. ஆனால் இந்தப் புரிதலில் தவறு நிகழ்கின்ற ஒரு இடமிருக்கிறது. அதாவது, இஸ்லாமிய சிந்தனைப் பாரம்பரியம், பல சமயங்களில் முகாமைத்துவக் கற்கைகள் பேசும் வழிமுறைகள், அணுகுமுறைகள், மூலோபாயங்கள் போன்ற எண்ணக்கருக்களையும் மகாஸித் என்ற வட்டத்தினுள் உள்ளடக்கியிருக்கிறது.

முகாமைத்துவக் கற்கைகளின் Goal, Objective போன்ற சொற்கள் உணர்த்தும் பரிபாஷைக் கருத்தான ஒரு இலக்கு நிலையை மாத்திரம் மகாஸித் என்ற சொல் குறிக்கவில்லை. மாற்றமாக நீண்டகால விளைவுள்ள, நிலையான ஒரு பண்பையே மகாஸித் என்கிறது. அது ஒரு இலக்காக அமையவும் முடியும், மூலோபாயமாக அமையவும் முடியும், ஒரு வழிமுறையாக அமையவும் முடியும். இந்தக் கருத்தை வலியுறுத்தும் வகையில்தான் அல்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது: ''கழிவு பயனற்றுப் போய்விடும், மக்களுக்குப் பயனுள்ளதே உலகில் நிலைத்து நிற்கும்'' (ரஃத் - 17).

இந்த வசனம் சொல்வது போல், மக்களுக்குப் பயனுள்ள ஒன்றே உலகில் நிலைத்து நிற்கும். பயனற்றவைக்கு நிலைத்த தன்மை கிடையாது. அந்த வகையில் மகாஸித் என்பதன் பொருள், உலகில் நிலைத்து நிற்கக் கூடிய ஒன்று மக்களுக்குப் பயன் தரக்கூடிய ஒன்று.

இந்தப் பின்புலத்தில்தான் கலாநிதி இஷாம் பஷீர் அவர்கள் 'ஹிக்மத்' சமயோசிதம் என்பதை தஃவாவின் மகாஸித்களில் ஒன்றாக அடையாளப்படுத்துகிறார்.[7] உண்மையில் முகாமைத்துவக் கண்ணோட்டத்தில் பார்க்கின்ற பொழுது, ஹிக்மத் என்பது அடைவதற்குரிய ஒரு இலக்கல்ல. மாற்றமாக அது ஒரு அணுகுமுறை. ஆனால் ஷரீஆ அதனை ஒரு மக்ஸத் என்கிறது. காரணம், அந்த அணுகுமுறை எல்லாக் காலத்திலும் நிலைத்து நிற்கக்கூடிய ஒரு அணுகுமுறை. கால மாற்றத்தால் மாறக் கூடியதல்ல. அதேநேரம் என்றும் பயன் மிக்க ஒரு அணுகுமுறை.

இதே கண்ணோட்டத்தில்தான், இமாம் முஹம்மத் அத்தாஹிர் இப்னு ஆஷூர் அவர்கள் கிலாபத் கட்டமைப்பை ஒரு மக்ஸத் என்கிறார்[8]. முகாமைத்துவக் கண்ணோட்டத்தில் கட்டமைப்பு என்பது ஒரு இலக்கல்ல. ஆனால் கிலாபத் கட்டமைப்பு என்பது முஸ்லிம் உம்மத்தை ஒருங்கிணைக்கும் ஒருமைப்பாட்டுப் பொறிமுறை என்ற வகையில், உலகில் இஸ்லாத்தின் இலக்குகளை அடைந்து கொள்வதற்கான நிலையானதொரு மூலோபாயம். உச்ச பயன் தரும் ஒரு மூலோபாயம். எனவேதான் அது ஒரு மக்ஸதாக மாறுகிறது. கட்டமைப்பின் வடிவம் மாறுபடலாம். ஆனால் ஒருங்கிணைப்புப் பொறிமுறை ஒன்று இன்றியமையாதது என்பதையே அது மக்ஸத் என்பது உணர்த்துகிறது.

இறுதியாக, மகாஸிதுஷ் ஷரீஆ என்றால் என்ன என்ற கேள்வியை மீண்டும் கேட்டுப் பார்த்தால், இவ்வாறு சுருக்கமாக அதற்குப் பதில் தரலாம்.

- மகாஸித் என்பது ஷரீஆ இறக்கப்பட்டமைக்கான நோக்கங்கள்
- அந்த ஒவ்வொரு நோக்கமும் மனித வாழ்வில் நிலைபெற வேண்டும் என்பதையே ஷரீஆவை இறக்கியதன் மூலம் அல்லாஹ்தஆலா எதிர்பார்க்கிறான்.
- அந்த நோக்கங்கள் ஒவ்வொன்றும் மனித நலன் சம்பந்தப்பட்டவையே. ஏனெனில் மனித நலனுக்காகவே ஷரீஅத் இறக்கப்பட்டுள்ளது.
- அந்த நோக்கங்கள் ஒவ்வொன்றும் நீண்டு நிலைத்திருக்கக் கூடியவை, என்றும் பயன்தரக் கூடியவை. அந்த வகையில் மகாஸித் இலக்கு வடிவிலும், மூலோபாய வடிவிலும், அணுகுமுறை வடிவிலும் காணப்படலாம்.

(1) கலாநிதி ஜாஸிர் அவ்தா, மகாஸிதுஷ் ஷரீஆ தலிலுன் லில் முப்ததிஈன், அல்மஃஹதுல் ஆலமி லில் பிக்ரில் இஸ்லாமி, பக்கம் 55.

(2) கலாநிதி அஹ்மத் அர்ரைஸூனி, நழரிய்யதுல் மகாஸித் இன்தல் இமாம் அஷ்ஷாதிபி, பதிப்பகம் : தாருல் கலிமா வின் நஷ்ர் வத்தௌஸி, எகிப்து, முதலாம் பதிப்பு 2010, பக்கம் 07.

(3) ஷம்ஸுத்தீன் இப்னுல் கையிம், இஃலாமுல் முஅக்கயீன், செம்மையாக்கல் : தாஹா அப்துல் ரஊப் ஸஃத் - பெய்ரூத், தாருல் ஜீல், 1973, முதலாம் பாகம், பக்கம் 333.

(4) அபூ இஸ்ஹாக் அஷ்ஷாதிபி, அல் முவாபகாத், ஷெய்க் அப்துல்லாஹ் தர்ராஸின் குறிப்புரையுடன்,பிக்ருல் அரபி, இரண்டாம் பதிப்பு 1975, இரண்டாம் பாகம், பக்கம் 5,6,7.

(5) கலாநிதி ஜாஸிர் அவ்தா,முகர்ரர் திராஸாத் உல்யா ஹௌலல் மகாஸித் வல் இஜ்திஹாத், யூடியூப் தொடர் உரை.

(6) கலாநிதி வஹ்பி ஆஷூர் அபூஸைத், மகாஸிதுஷ் ஷரீஆ வல் பத்வா, மஅ சுவைபிஃ நிகழ்ச்சி, முக்மிலீன் தொலைக்காட்சி சேவை, 2015

(7) கலாநிதி இஷாம் அஹ்மத் அல்பஷீர், மக்ஸதா அத்ததர்ருஜ் வல் ஹிக்மா, இஃமாலுல் மகாஸித் பில் மஜால் அத்தஅவி, ஆய்வுகளின் தொகுப்பு, வெளியீடு - இஸ்லாமிய முதுசங்களுக்கான அல்புர்கான் நிறுவனம், மகாஸிதுஷ் ஷரீஆ கற்கைகளுக்கான மையம், முதலாம் பதிப்பு 2016, பக்கம் 53-79.

(8) இமாம் முகம்மத் அத்தாஹிர் இப்னு ஆஷூர், மகாஸிதுஷ் ஷரீஆ அல் இஸ்லாமிய்யா, செம்மையாக்கல்: முகம்மத் அத்தாஹிர் அல்மைஸாவி, தாருன் நபாஇஸ் பதிப்பகம், இரண்டாம் பதிப்பு 2001, பக்கம் 405, 406.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பங்கு குறித்த இரண்டு ஆய்வுகள்



பாடசாலைக் கல்வியின் பிரதான பங்காளர்களுள் ஆசிரியர்களும் அடங்குவர். நேரடியாகக் கல்வி பெறும் மாணவர்கள் பௌதிக வளங்களை உறுதி செய்து, சிறந்த தலைமைத்துவம் வழங்கும் அதிபர், பிள்ளைகளின் கல்விக்கு கண்காணிப்பாளர்களாகவும் உறுதுணையாளர்களாகவும் இருக்கும் பெற்றோர், 'எல்லோருக்கும் கல்வி' என்ற அடிப்படைக் கோட்பாட்டை அமுல்நடாத்தும் அரசாங்கம், பாடசாலைக் கல்விக்குக் கைகொடுக்கும் பழைய மாணவர்கள் போன்ற கல்விப் பங்காளர்களில் மிக வினைத்திறனுள்ள, அதிகூடிய செல்வாக்குச் செலுத்தக் கூடிய தரப்பு யார் என்பதை சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வு நிறுவியுள்ளது.

மாணவர்களின் அடைவிலும் அவர்களின் கற்றல் ஆர்வத்திலும் மிகச் செறிந்த செல்வாக்குள்ளவர்கள் ஆசிரியர்களே என்பதை பின்லாந்தில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வு நிறுவியுள்ளது. அதன்படி மாணவர்களுக்கு நம்பிக்கையூட்டி, கற்பிக்கின்ற ஆசிரியர்கள், அவர்களின் அடைவு மட்டத்தில் 68.7%மான தாக்கத்தைக் கொண்டுள்ளனர் என அந்த ஆய்வு தெரிவிக்கின்றது.

பாடசாலை அடைவு மட்டத்தில் செல்வாக்குச் செலுத்தும் மாறிகளாக அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர், அரச நிருவாகம் என்பன கொள்ளப்பட்டன. அவர்களில் ஒப்பீட்டு ரீதியில் மாணவர்களின் அடைவு மட்டத்தில் மிகப் பெரிய செல்வாக்குள்ளவர்களாக ஆசிரியர்கள் அடையாளப்படுத்தப்பட்டனர். பெற்றொர் அடுத்த இடத்திலும் பாடசாலை வளங்கள் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

இதுபோன்றே, ஆபிரிக்காவிலுள்ள கென்யா என்ற நாட்டில் மரக்வெத் மாவட்டத்தில் "இரண்டாம் நிலை பாடசாலை மாணவர்களின் இடைவிலகலில் ஆசிரியரின் பண்புக் குணங்கள் செல்வாக்குப் பெற்றுள்ளனவா" என்பது குறித்து இடம்பெற்ற ஆய்விலும் சில உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டன.

தொழில் மற்றும் தொழில்நுட்பக் கல்விக்கான சர்வதேச ஆய்விதழில் இது தொடர்பான கட்டுரை வெளிவந்துள்ளது. இவ்வாய்வில், இடைநிலைப் பாடசாலை மாணவர்கள் இடைவிலகுவதில் ஆசிரியர்களும் மறைமுகமாகப் பங்களிக்கின்றனர் என்பது நிறுவப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கு அதிபர்களால் வழங்கப்படும் மிகையான முகாமைத்துவப் பொறுப்புக்களால் வகுப்பறைக் கற்பித்தலிலிருந்து ஆசிரியர்களின் கவனம் திரும்புகின்றது. பாடசாலையில் நிருவாகப் பொறுப்புகளைச் சுமந்த ஆசிரியர்கள் வினைத் திறனுள்ள கற்பித்தலில் கோட்டை விடுகின்றனர். அத்தகைய ஆசிரியரின் கண்காணிப்பிலுள்ள அல்லது கற்பித்தலுக்கு உட்படுகின்ற மெல்லக் கற்போருக்கான கவனம் குறைகின்றது.

நாளாந்தம் மாணவர்களின் வகுப்பறை வேலைகளையும் வீட்டில் வழங்கப்படும் பயிற்சிகளையும் (Homework) ஆசிரியர்கள் பரிசீலிக்கத் தவறுகின்றபோது மெல்லக் கற்போரின் உளவியல் பாதிக்கப்படுகின்றது. ஆசிரியர்கள் தம்மை கவனிப்பதில்லை என்ற குறைபாட்டை உணரும் மாணவர்கள் படிப்படியாக கற்றல் ஆர்வத்தை இழக்கின்றனர். அதன் இறுதி விளைவாக, பெருந்தொகையான மெல்லக் கற்போர் பாடசாலைகளிலிருந்து இடைவிலகுகின்றனர்.

உண்மையில் வகுப்பறையிலுள்ள மெல்லக் கற்போர் குறித்து ஆசிரியர்கள் எந்தளவுக்குக் கவனம் செலுத்துகின்றார்கள், ஆசிரியர்களின் கற்பித்தல் முறையின் செல்வாக்கு எப்படியுள்ளது, அவர்கள் சுமந்துள்ள நிர்வாகப் பொறுப்புகளுக்கும் கற்பித்தலுக்கும் இடையிலான தொடர்பு என்ன என்பதைக் கண்டுபிடிப்பதே இந்த ஆய்வின் குறிக்கோள்களாக இருந்தன.

மாணவன் இடைவிலகலில் வறுமை, பாடசாலையின் தொலைவு, நெறிகெட்ட சமூக சூழல், மாணவர்கள் போதை வஸ்து போன்ற பழக்கங்களுக்கு அடிமையாதல், கல்வி மீதான பெற்றோரின் அக்கறையீனம், பாடசாலைகளில் பௌதிக வளப் பற்றாக்குறை, மாணவர்களைக் கவராத பாடசாலைச் சூழல் என பல்வேறு மாறிகள் (Veriuables) ஆய்வில் கவனத்தில் கொள்ளப்பட்ட போதும், ஆசிரியரின் கற்பித்தல் ஈடுபாடும் மெல்லக் கற்போருக்கான கவனமும் மிக முக்கிய மாறிகளாகக் கொள்ளப்பட்டன.

14 இடைநிலைப் பாடசாலைகளைச் சேர்ந்த 28 ஆசிரியர்கள் குடித்தொகையாகக் கொள்ளப்பட்டதோடு, எழுமாறான மாதிரி எடுப்புக்களோடு தரவுகள் சேகரிக்கப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்டது. இதில் சாராமாறியாக ஆசிரியர் பண்புகளும் சார்மாறியாக மாணவர் இடைவிலகலும் கொள்ளப்பட்டது. மெல்லக் கற்போர் குறிப்பாகவும், இடைநிலை வகுப்பறை மாணவர்கள் பொதுவாகவும் இடைவிலகிச் செல்வதற்கு ஆசிரியர்கள் மூன்று வகையில் காரணமாக இருக்கின்றனர் என்பதை கென்யாவில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வு நிறுவியுள்ளது.

1. அளவுக்கு மீறிய நிருவாகப் பொறுப்புக்களை ஏற்றல்
2. மெல்லக் கற்போருக்கான ஆசிரியரின் குறைந்தபட்சக் கவனம்
3. மாணவர்களின் வீட்டுப் பயிற்சிப் புத்தகங்களை ஆசிரியர் பரிசீலிக்கத் தவறுதல்

ஆய்வின் விதப்புரையாக சில விடயங்களையும் ஆய்வறிக்கை முன்வைத்துள்ளது. அதில்

1. ஆசிரியர்கள் கண்டிப்பாக மெல்லக் கற்போர் மீது கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

2. அடிக்கடி மாணவர்களின் பயிற்சிப் புத்தகங்களைப் பரிசீலிக்க வேண்டும். அதன் மூலம் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு உதவ வேண்டும்.

3. பாடசாலையின் நிருவாகக் கொள்கைகள் மாணவர் இடைவிலகலுக்கு பங்களிக்காது என்பதை உறுதி செய்யும் விதத்திலான கண்காணிப்புத் திட்டங்களை அரசாங்கம் அமுல்படுத்த வேண்டும்.

மேலே குறிப்பிட்ட இரண்டு ஆய்வுகளும் நமக்குச் சொல்லும் செய்தி என்ன? ஆசிரியர்கள் முயற்சித்தால் மாணவர்களை வகுப்பறைகளில் கற்க வைத்து, அடைவு மட்டத்தை உயர்த்தலாம். அதே போன்று ஆசிரியர்களின் கவனயீனத்தால் மாணவர்கள் பாடசாலைகளை விட்டு இடைவிலகவும் நேரிடலாம். ஆக, பாடசாலைக் கல்வியில் எல்லாத் தரப் பினரை விடவும் முக்கிய பங்காற்றுகின்றவர்களாக ஆசிரியர்களே உள்ளனர் என்பதை இவ்விரு ஆய்வுகளும் நிறுவியுள்ளன.



# சுமையா பின்கல்தூன்

## எனும் பல்கலைக்கழகப் பேராசிரியை

சுமையா பின் கல்தூன் 1963 இல் மொரோக்கோவில் மராகிஷ் நகரில் பிறந்தவர். பொறியியல் துறையில் அறிவியல் ஆராய்ச்சிப் பட்டம் பெற்று வெளியேறிய இவர், 1994 முதல் 2006 ஆம் ஆண்டு வரையுள்ள காலப் பகுதியில் இப்னு துபைல் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றியவர்.

முஹம்மதிய்யா பொறியியல் கல்லூரியில் பயின்ற இவருக்கு அறிவியல் ஆராய்ச்சிகளிலும் தொழில் நுட்பத் துறையிலும் மிகுந்த ஈடுபாடு உள்ளது. இஸ்லாமிய உலக நாடுகளை ஒன்றிணைக்கும் ISCECO அமைப்பின் பெண்கள் மற்றும் அபிவிருத்தித் துறையின் நிபுணத்துவ ஆலோசகராகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

2002 முதல் 2012 வரை மொரோக்கோ பாராளுமன்றத்தில் இரண்டு முறை பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்துள்ளார். பாராளுமன்றத்தில் இஸ்லாமிய விவகாரங்கள், தேசிய பாதுகாப்பு மற்றும் வெளிவிவகாரக் குழுவின் தலைவியாக செயற்பட்ட இவர், மொரோக்கோ பாராளுமன்ற பெண்கள் அணியின் உறுப்பினராகவும் செயற்பட்டுள்ளார்.

மொரோக்கொவில் ஆளும் கட்சியாகவுள்ள நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சியின் பல்வேறு பதவி நிலைகளை வகித்த சுமையா, ஒரு கட்டத்தில் அதன் பொதுச் செயலாளராகவும் இயங்கியவர். சமூகப் பணிகளில் மிகுந்த உற்சாகத்துடன் ஈடுபட்டு வரும் சுமையா, அஸ்ஸஹ்றா எனப்படும் மொரோக்கோ பெண்கள் அமைப்பின் தலைவியாகவும் இருந்தவர்.

பிராந்திய ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கும் உலகப் பெண்களின் கூட்டமைப்பை நிறுவியவர்களில் சுமையாவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. மொரோக்கொவின் கிராமப் புறங்களில் பெண் குழந்தைகளின் கல்வியை மேம்படுத்துவதற்காகச் செயற்பட்டு வரும் மவத்தா எனும் அமைப்பை ஸ்தாபித்து, அதன் தலைவியாகவும் சுமையா செயற்பட்டு வருகின்றார்.

நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சியின் பெண்கள் பிரிவின் நிறைவேற்றுக் குழு உறுப்பினராக இவர், பால் நிலை சமத்துவம் மற்றும் சம வாய்ப்புகளுக்கான ஆணைக்குழுவின் தலைவியாகவும் செயற்படுகின்றார்.

உயர் கல்வி, பெண்கள், மனித உரிமை, அபிவிருத்தி, கலாசார உரையாடல், சர்வதேச உறவுகள் போன்ற தளங்களில் பல்வேறு மாநாடுகளிலும் உரையாடல்களிலும் சுமையா பின் கல்தூன் ஈடுபட்டு வருகின்றார். தற்போது மொரோக்கோவின் உயர் கல்வி அமைச்சில் நிபுணத்துவ அலோசகராகப் பணியாற்றி வரும் இவர், அந்நாட்டில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட முஸ்லிம் தனியார் சட்ட சீர்திருத்தத்தில் முக்கிய பங்காற்றியதோடு, சர்வதேச நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளும் மொரோக்கொ அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ தூதுக் குழுவில் முக்கிய உறுப்பினராகப் பங்கெடுத்து வருகின்றார்.

வட ஆபிரிக்காவின் பிற நாடுகளான தூனிசியா, லிபியா, எகிப்து, மொரிட்டானியா, அல்ஜீரியா போன்ற நாடுகளுக்கான உயர் கல்வி அமைச்சின் விஷேட தூதுக் குழுவில் சுமையா பங்கெடுத்து வருகின்றார். பாடசாலைகள், பல்கலைக் கழகங்களின் கலைத் திட்டம், மற்றும் பொதுவான கல்விச் சீர்திருத்த ஆலோசனைகளை வழங்கி வரும் இவர், இஸ்லாமிய பற்றுறுதியும் மார்க்க உணர்வும் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தனது இஸ்லாமிய அடையாளத்தைப் பாதுகாத்துக் கொண்டு சமூக நலப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றார். இப்னு துபைல் கல்கலைக்கழகத்தில் 12 ஆண்டுகள் இவர் பேராசிரியராகப் பணியாற்றி காலம் பல்கலைக்கழகத் திற்குக் கிடைத்த ஒரு வரப் பிரசாதம் என்று இவரது காலத்தில் கற்ற மாணவிகள் கருத்து வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# மனநலத்தின் அவசியம்

நீண்டகாலம் வாழ்வதற்கும் உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கும் ஒருவரது உள ஆரோக்கியம் முக்கியமாகும். உள ஆரோக்கியத்தைப் பராமரிப்பது நீண்ட காலத்திற்கு உடல் ஆரோக்கியத்தோடு வாழ உதவுகின்றது என ரிச்சட்ஸ், மியூஸ் போன்ற உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இக்கருத்தின் பின்னணியிலேயே உள மருத்துவ நோய் எதிர்ப்பியல் வளர்ச்சியடைந்துள்ளது. ஒருவரது உள ஆரோக்கியத்தில் மன எழுச்சிகளை ஆற்றுப்படுத்துவதும் முகாமை செய்வதும் முக்கிய பங்கு வகிக்கின்றன. உணர்ச்சிகளை முகாமை செய்வதுதான் உள ஆரோக்கியத்தின் அடிப்படையாகும். உணர்ச்சிகளை சரியாக வெளிப்படுத்துவதும் அடுத்தவர்களின் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்வதும் உள அரோக்கியத்தில் முக்கியமானவையாகும்.

உணர்ச்சி ரீதியில் பாதிக்கப்படுகின்றவர்களே காலவோட்டத்தில் மதுபானம் மற்றும் பிற போதைப் பொருள் பாவனைக்கு ஆளாகின்றனர். ஒரு மனிதரின் ஆரோக்கியத்தில் பல்வகைப்பட்ட காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. உள நன்னிலை (Mental Welbeing) என்பது மன எழுச்சி சார் நன்னிலை என்று அர்த்தம் கொள்ளப்படும் அளவுக்கு மனவெழுச்சி சார் காரணிகள் முக்கியம் பெறுகின்றன.

வாழ்க்கை அவ்வப்போது தவிர்க்க முடியாத பல மாற்றங்களுக்கு உள்ளாகின்றது. சில மாற்றங்கள் எதிர்பார்க்கக் கூடியன. வேறு சில மாற்றங்களோ சடுதியானவை. அத்தகைய எதிர்பார்க்காத மாற்றங்களை ஏற்றுக் கொள்ளும் நெகிழ்வும் மனப் பக்குவமம் இல்லாதபோது ஒருவரது உள ஆரோக்கியம் இழக்கப்படுகின்றது.

வாழ்க்கை பற்றி நேர்முகமான நோக்குகளும் பார்வைகளுமே மனிதனை மகிழ்ச்சியாக வைத்திருக்க உதவுகின்றன. இதன் பின்னணியிலேயே இன்று நேர்முக உளவியல் (Positive



Psychology) குறித்துப் பேசப்படுகின்றது. ஒருவரது சமய [illegible] ஆரோக்கியத்துடன் தொடர்புபடுகின்றன.

விட்மர், சுவீனி, எம்மியர் ஆகிய மூவரும் உளநல மாதிரியொன்றை அறிமுகம் செய்துள்ளனர். அதில் ஐந்து வாழ்வியல் செயல்பாடுகள் உள்ளடங்குகின்றன. ஆன்மீகம், தொழில், பொழுது போக்கு, நட்பு, அன்பும் சுயமான இயக்கமும் ஆகிய ஐந்து காரணிகள் உள ஆரோக்கியத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவர்களது இந்த உள ஆரோக்கிய மாதிரியில் (Mental Welness Model) 12 துணைச் செயற்பாடுகளும் உள்ளடங்குகின்றன.

தான் பெறுமதியானவன் என்ற உணர்வு, சுய கட்டுப்பாடு, யதார்த்தபூர்வமான நம்பிக்கை, தனது மன எழுச்சிகளை அறிந்தவராக இருத்தல், நெருக்கடிகளை எதிர்கொள்ளல், பிரச்சினைகளைத் தீர்த்தல், புத்தாக்கம், ஹாஷ்ய உணர்வு, போஷாக்கு, தன் கவனிப்பு, உடற் பயிற்சி, மனஅழுத்த முகாமை, பால் நிலை அடையாளம் மற்றும் கலாசார அடையாளம் என்பனவே அவை.

உள ஆரோக்கியத்தைப் பாதிக்கின்ற காரணிகளுள் ஒன்றாக ஊடகம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. 2013 இல் Sueki என்ற உளவியலாளர் மேற்கோண்ட ஒரு கள ஆய்வு The Effect of suicide - related internet users metal health - a longitudinal study எனும் பெயரில் வெளிவந்தது. அதில் "தற்கொலையுடன் தொடர்பான இணையங்களைப் பாவிப்பவர்கள் மீதுஅதன் உள்ளடக்கம் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. பொதுவாக இத்தகைய இணையங்களை தொடர்ச்சியாகப் பார்க்கின்றவர்கள் தற்கொலைச் சிந்தனைக்கு உள்ளாகின்றனர். அவர்களிடம் மனச்சோர்வு, தனிமை உணர்வு, பதகளிப்பு போன்ற எதிர் மனவெழுச்சிகள் ஏற்படுகின்றன.

இத்தகைய இணையப் பாவனையாளர்களின் உளநலம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது என சூகி கூறுகிறார். இவ்வாய்வுக்கென 950 இணையப் பாவனையாளர்களை அவர் ஆய்வுக் குடித்தொகையாகக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மு.த.ச. ... (01 ஆம் பக்கத் தொடர்)

நீதியரசர் ஸலீம் மர்சூப் தலைமையிலான குழுவினர் கடந்த 07 வருடங்களாக இந்தப் பணியில் எந்த முன்னேற்றமும் காட்டாத நிலையில் இந்த நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவில் அமைச்சர்களான கபீர் ஹாஷிம், ரவூப் ஹக்கீம், ரிஷாட் பதியுதீன், பைஸர் முஸ்தபா, எம்.எச்.எம்.ஹலீம், சந்த்ராணி பண்டார, டாக். சுதர்ஷனீ பெர்னான்டோபுள்ளே ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

07 வருடங்களாகக் கலந்துரையாடியும் இவர்களால் (ஸலீம் மர்சூப் தலைமையிலான குழு) முன்மொழிவொன்றைச் சமர்ப்பிக்க முடியாமையே இந்த அமைச்சரவை உப குழுவை அமைப்பதற்கு தன்னைத் தூண்டியது என அப்போதைய நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

இந்தக் குழு நியமிக்கப்பட்டதன் பின்னர் நீதியரசர் ஸலீம் மர்சூப் தலைமையிலான குழுவினர் துரிதமாய்ச் செயற்பட்டனர். அகில இலங்கை ஜம்மியதுல் உலமாவுடன் உடன்பாடுகளை எட்டுவதில் உள்ள சில தாமதங்கள், நளீமியா இஸ்லாமிய அறிஞர்கள் உட்பட பல்வேறு தரப்பினராலும் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை ஆராய்வதற்கான அவகாசங்கள் என பல்வேறு காரணங்களால் இறுதி அறிக்கை வெளிவருவது தாமதமாகின. பின்னர் குறித்த விடயங்கள் ஒவ்வொன்று தொடர்பிலும் அகில இலங்கை ஜம்மியதுல் உலமாவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாகவும், பல விடயங்களில் உடன்பாடு காணப்பட்டுள்ளதாகவும் அறிக்கை விரைவில் வெளிவரும் என்றும் செய்திகள் வெளிவந்தன.

இறுதியாக இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஒரு திகதியும் குறிக்கப்பட்டு, குறித்த தினத்தில் அறிக்கை வெளிவரும் எனச் சொல்லப்பட்ட போதும் இது வரையும் எந்த அறிக்கையும் வெளியிடப்படவில்லை.

இடைப்பட்ட ஒரு வருட காலப் பிரிவில் நாட்டுக்கான புதிய யாப்பு, தேர்தல் முறை தொடர்பான சட்டம், எல்லை நிர்ணயம், வட்டாரப் பிரிப்பு என பாரிய பல முயற்சிகள் நடந்து முடிந்துள்ள போதும், முஸ்லிம் தனியார் சட்டத்தின் விவாக, விவாக ரத்துச் சட்டத்தையேனும் திருத்துவதற்கான முன்மொழிவுகளை முன்வைப்பதற்கு எட்டு வருடங்களாகியும் குறித்த குழுவினரால் முடியாமல் போயிருக்கிறது.

அறிக்கையை அவசரமாக வெளியிடுமாறு முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தச் செயல் முன்னணி (MPLRAG) உட்பட பல அமைப்புக்களும் தனிநபர்களும் விடுத்த வேண்டுகோள்களின் பின்னரும் அறிக்கை வெளிவராத நிலையில், முஸ்லிம் தனியார் சட்ட திருத்த முன்மொழிவை முன்வைப்பதற்கான குழுவின் தலைவராக வேறொருவரை நியமிப்பது தொடர்பாக பேசப்பட்டு வருவதாகவும், பெரும்பாலும் ஜனாதிபதி சட்டத்தரணி ஒருவர் இதற்கென நியமிக்கப்படலாமென்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

## பொதுபல ... (01 ஆம் பக்கத் தொடர்)

வெளியாகியிருந்தன. எதனையும் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்வது, தவறுகளை மன்னித்து அவற்றைத் திருத்திக் கொள்வதற்கு வழிவகுப்பது என்ற முஸ்லிம்களின் மகத்தான பண்பினை வெளிக்காட்டும் விதமாக இந்தப் பேச்சுவார்த்தைகள் அமைந்திருப்பதாக பலரும் கருத்து வெளியிட்டிருந்தனர்.

இருந்த போதிலும், பொதுபலசேனாவின் செயற்பாடுகளினால் ஒட்டுமொத்த இரண்டு மில்லியன் முஸ்லிம்களும் பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் எட்டப்படுகின்ற இந்தச் சமரசத் தீர்வுகள் முஸ்லிம் சமூகத்தின் அங்கீகாரத்துடன்தான் நடைபெறுகின்றனவா என்ற கேள்வி முஸ்லிம் சமூகத்துக்குள்ளால் இருந்தே எழுப்பப்பட்டு வருகின்றது.

முஸ்லிம் சமூகம் சார்பில் எடுக்கப்படும் தீர்மானங்கள் முஸ்லிம் சமூகத்தின் அங்கீகாரத்துடனேயே எடுக்கப்பட வேண்டும் என்பதனால், இது போன்ற சந்திப்புக்களின் போது முஸ்லிம் சமூகத்தில் அக்கறை காட்டிச் செயற்படுகின்ற அகில இலங்கை ஜம்மியதுல் உலமா, ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸில், தேசிய ஷூறா சபை ஆகியவற்றின் உத்தியோகபூர்வ பிரசன்னம் வேண்டப்படுவதோடு, எட்டப்படும் தீர்வுகளும் இவை அனைத்தினதும் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்பட்டாலேயே அது முஸ்லிம் சமூகத்தின் தீர்வாக அமையும் என பலரும் சுட்டிக் காட்டுகின்றனர்.

முஸ்லிம் அரசியல் தலைமைகளால் முஸ்லிம் சமூகம் விற்கப்பட்டு ஏமாற்றப்படும் நிலையில், தற்போதைய இறுதி நம்பிக்கையாக முஸ்லிம் சிவில் தலைமைகள் மீது முஸ்லிம்கள் வைத்துள்ள நம்பிக்கை சிதைவடையாத வண்ணம் முஸ்லிம் சிவில் தலைமைகள் நடந்து கொள்ள வேண்டும் என்ற கருத்து தற்போது பரவலாகப் பேசப்பட்டு வருகிறது.

முஸ்லிம் சமூகத்துக்கான அரசியல் தீர்வை ஒரு தனிக்கட்சி முன்வைக்க முடியாதது போலவே, முஸ்லிம் சமூகம் தொடர்பான விவகாரங்களையும் ஒரு சில அமைப்புக்களோ தனிநபர்களோ கையாள முடியாது எனவும் சமூகத்தில் இருந்து குரல்கள் எழுப்பப்பட்டு வருகின்றன.

## பயங்கரவாத... (01 ஆம் பக்கத் தொடர்)



சுமார் நாற்பது வருடங்களாகத் தொடர்ந்து அமுலில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக சர்வதேச மனித உரிமை வரையறைகளுக்கு ஏற்ற புதிய சட்டம் ஒன்று உருவாக்கப்படும் என்று 2016 ஆம் ஆண்டு இலங்கைக்கு பயணம் மேற்கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்திடம் அரசு உயர் அதிகாரிகள் உறுதியளித்திருந்தனர்.

இலங்கைக்கு ஜிஎஸ்பி வரிச்சலுகையை வழங்குவதற்கு அவசியமான நிபந்தனையான, அனைத்துலக மரபு நெறிகளையும், தேசிய நல்லிணக்கச் செயற்பாடுகளையும் நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்ற நிலைமையை ஆராய்வதற்காக ஜீன் லெம்பட் தலைமையிலான நான்கு பேர் கொண்ட ஐரோப்பிய நாடாளுமன்ற குழு இலங்கைக்கு வந்திருந்தது.

'ஜிஎஸ்பி வரிச்சலுகைக்கு முன் நிபந்தனையாக முன்வைக்கப்பட்ட இந்த உறுதிமொழி இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அதற்கான நடவடிக்கைகள் மந்தமாகவே நடைபெற்று வருகின்றன' என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

'அது நிறைவேற்றப்படும் என்று எங்களிடம் கூறப்பட்டது. எனவே, துரிதமாக மாற்றங்கள் ஏற்படும் என்று நாங்கள் எண்ணியிருந்தோம். ஆனால் அது நடைபெறவில்லை. வரவு செலவுத் திட்ட நடவடிக்கைகள் முடிவுற்றவுடன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கு நாடாளுமன்றத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என நம்புகிறோம்' என ஜீன் லெம்பட் கருத்து வெளியிட்டார்.

ஜிஎஸ்பி வரிச்சலுகை ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டதுதானே என்று இந்த சலுகையை பெற்றுக்கொண்டோர் ஆறுதலுடன் இருக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்பார்த்ததை விட தாமதமாகவே நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது குறித்து, இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற பிரதிநிதிகள் தமது கரிசனையை வெளியிட்டனர். ஆயினும் முன்னேற்றத்திற்கு அவசியமான, அடித்தளம் அநேகமாக முன்னெடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அவர்கள் சுட்டிக் காட்டினர்.

## இலங்கையில் ... (01 ஆம் பக்கத் தொடர்)

இந்தியாவைப் பொறுத்தவரை மத உணர்விலான வன்முறைகளையும் பாகுபாட்டினையும் குறைப்பதற்கு இந்த நிதி வழங்கப்படவுள்ளது. இருநாடுகளிலும் இந்தத் துறையில் செயற்படுகின்ற நிறுவனங்களிடமிருந்து கிடைக்கின்ற விண்ணப்பங்களை பரிசீலித்த பின்னர், இந்த நிதிக்குரிய நிறுவனங்கள் தெரிவு செய்யப்படவுள்ளன.

பாரிய அளவிலான வன்முறைகள் தொடர்பில் முன்னறிவுப்புச் செய்கின்ற திட்டங்கள், பெரும்பான்மைக்கும் சிறுபான்மைக்கும் இடையிலான முரண்பாடுகளை குறைப்பதற்கான நடைமுறைகள் போன்றவற்றில் முன்மொழிவுகளை இந்திய அரசு கோரியுள்ளது. அனைத்து ஊடகங்களிலும் வெறுப்புணர்வையும் பேதங்களையும் வளர்க்கும் பேச்சுக்களை ஆக்கபூர்வமாக அணுகுவதற்கான வழிமுறைகள், சிறுபான்மையினரின் மதச் சுதந்திரத்தை சட்ட ரீதியாகப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் சிவில் சமூகத்தை அறிவூட்டல், மதச் சுதந்திரத்தைப் பாதிக்கும் விடயங்கள் தொடர்பில் உரிய இடங்களில் முறையிடுவதற்கான தெளிவை வழங்குதல் போன்ற விடயங்கள் இந்த முன்மொழிவுகளில் உள்ளடக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

மதச் சுதந்திரத்தை மேம்படுத்துவதற்கான இந்த அமெரிக்க நிதி தற்போது இந்தப் பிராந்தியத்திலுள்ள பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், கஸகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், துருக்மேனிஸ்தான், உஸ்பெகிஸ்தான், நேபாளம் ஆகிய நாடுகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை இதற்கென 17 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை இந்த நிதித் திட்டத்தில் அடங்காத இலங்கையிலும் இந்தியாவிலும் இதற்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன.

கிறிஸ்தவ, முஸ்லிம் சமூகங்களை மதரீதியான தாக்குதல்களில் இருந்து பாதுகாப்பதற்கான போதுமான நடவடிக்கைகளை இந்த நாடுகளின் அரசாங்கங்கள் எடுக்கவில்லை என சர்வதேச மதச் சுதந்திர அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

## சாய்ந்தமருது... (03 ஆம் பக்கத் தொடர்)

தமது ஊரைச் சேர்ந்த அரசியல்வாதிகளும் தம்முடைய ஆதரவைப் பெற்ற மு.காவும் எவ்வாறு இந்தப் பிரிப்புக்கு துணை போகலாம்? என்று கல்முனை மக்கள் கொதித்தெழுந்தனர். எனவே, தமதூர் மக்களைத் திருப்திப்படுத்துவதற்காக, பிரதியமைச்சரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஜவாத்தும் கல்முனைக்குச் சார்பான நிலைப்பாட்டை எடுத்தனர்.

இதன் பின்னர், இவ்விவகாரம் பூதாகரமாகியது. முன்னொரு காலத்தில் கரைவாகு தெற்காக இருந்த சாய்ந்தமருது பிரதேசத்தை, கல்முனையுடன் இணைக்கின்றபோது, அதற்காக எதிர்க்காத சாய்ந்தமருது மக்கள், தமது பிரதேசத்தைத் தனியாகப் பிரித்து, உள்ளூராட்சி சபையைத் தந்தே தீர வேண்டும் என்ற கோரிக்கையை உரத்த குரலில் முன்வைத்தனர்.

கல்முனை பட்டின சபையில், தமிழர் ஒருவரைப் பிரதித் தவிசாளராக அமர்த்தி அழகுபார்த்த கல்முனை மக்கள், சாய்ந்தமருதைத் தனியாகப் பிரிக்கக் கூடாது என்று குறுக்கே நின்றனர்; நிற்கின்றனர். இது பெரும் சிக்கலைத் தோற்றுவித்தது.

கல்முனையில் இருந்து, சில அரசியல்வாதிகளும் சாய்ந்தமருதைச் சேர்ந்த சிலரும் கொழும்பிலிருந்து ஒரு சிலரும் இதற்குப் பின்னால் நின்று, ஆட்டுவித்துக் கொண்டிருந்தனர் என்பது இரகசியமல்ல. சாய்ந்தமருது மக்கள் விடாப்பிடியாக நிற்க, கல்முனை மக்கள் பிரதிநிதிகளோ, தனியாகப் பிரிக்கவே கூடாது என்று பிடிவாதம் பிடித்தனர்.

''எங்களுக்கென்று தனியான அபிலாஷைகள், அரசியல் சுயநிர்ணயம், தேவைப்பாடுகள் உள்ளன. எனவே, எமக்கு முன்பிருந்தது போன்று, தனியான ஓர் உள்ளூராட்சி சபையைத் தர வேண்டும்'' என்று சாய்ந்தமருது மக்கள் கோரி நின்றனர்; நிற்கின்றனர். இதற்கப்பால் எந்த விட்டுக் கொடுப்புகளுக்கும் தயாரில்லை என்பது அவர்களது நிலைப்பாடாகும்.

மறுபுறத்தில், இவ்வாறு பிரிக்கப்படுவது குறித்து, கல்முனை மக்கள் கடுமையாக அச்சப்படுகின்றனர். ''இவ்வாறு, பிரிக்க வேண்டுமென்றால், பழைய படி நான்காகப் பிரிக்கட்டும்'' என்று அவர்கள் கூறுகின்றனர்.

கல்முனை மாநகர சபைக்குள், தமிழ்ப் பிரதேசங்களும் அப்படியே உள்ளடங்கியிருக்கத் தக்கதாக, அதிக வாக்காளர்களைக் கொண்ட ஊரான சாய்ந்தமருது பிரிந்து செல்லுமாயின், கல்முனையின் இனங்களுக்கு இடையிலான விகிதாசாரப் பங்கில் மாற்றம் ஏற்படும் என்று கருதுகின்றனர். இதனால் ஆட்சியதிகாரம் பலமிழந்து போகுமென அவர்கள் அஞ்சுகின்றனர்.

கல்முனையில் பிரதமர் வாக்குறுதியளித்தபோது, அதற்குப் பின்னர் இத்தனை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், 'தனியே பிரிக்கப்படக் கூடாது' என்ற கோதாவில், கருத்துகளை முன்வைக்கத் தவறிய கல்முனை அரசியல்வாதிகள், 'இப்போது தனியே சாய்ந்தமருது மட்டும் பிரிக்கப்படக் கூடாது, நான்காகவே பிரிக்கப்பட வேண்டும்' என்று கடந்த சில நாட்களாகக் கூறி வருவதற்கு, மேற்படி அச்சமே காரணமாகும்.

ஒப்பீட்டளவில் இந்தக் கோரிக்கை, மிக அண்மைக் காலத்திலேயே, பொது வெளியில் முன்வைக்கப்பட்டுள்ளது. இதை முன்னரே சொல்லியிருக்க வேண்டும். எல்லாம் கைக்கூடி வரும் நேரத்தில், நான்கு சபைகளுக்கு அழுத்தம் கொடுப்பதன் பின்னாலுள்ள நோக்கத்தைச் சாய்ந்தமருது மக்கள் வேறுவிதமாகவே நோக்குகின்றனர்.

இவ்வாறு, இந்த விவகாரத்தில் இரு ஊர்களும், அதற்குப் பின்னாலுள்ள அரசியல்வாதிகளும் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில், கல்முனையில் பலமாகவிருக்கும் அரசியல்வாதிகளின் முயற்சியால், பிரதான முஸ்லிம் கட்சி ஒன்றின் ஊடாக, அரச உயர்மட்டத்துக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, சாய்ந்தமருதுக்கு உள்ளூராட்சி சபை கிடைக்க வாய்ப்பில்லை என்றும் தகவல்கள் கசிந்தன.

இதனால், சாய்ந்தமருது மக்கள் வெகுஜனப் போராட்டத்தில் குதித்தனர். கடந்த திங்கட் கிழமை தொடக்கம் மூன்று நாட்களுக்கு கடையடைப்பும், சத்தியாக்கிரகமும் முன்னெடுக்கப்பட்டன.

இதன் காரணமாக, வர்த்தமானி அறிவித்தலில், சாய்ந்தமருதையும் ஒரு புதிய உள்ளூராட்சி சபையாக அறிவிக்கப்பட்டு விடுவதைத் தடுப்பதற்காக, கல்முனை மக்களும் இதற்கு எதிராக எழுந்து நிற்க வேண்டியேற்பட்டது.

எனவே, கல்முனையிலும் பேரணிகள், நான்காக பிரிக்கக் கோரும் பிரசாரங்கள் இடம்பெற்றதுடன், சாய்ந்தமருது கடையடைப்பின் கடைசித் தினமான கடந்த முதலாம் திகதி, கல்முனையிலும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இவ்வாறு, சாய்ந்தமருதைத் தனியாகப் பிரிப்பதில், அங்கு செயற்படும் அரசியல் கட்சிகளுக்கு இடையில் ஏற்பட்ட இழுபறியாலும், பின்னர் நான்காகப் பிரிப்பதற்குத் தமிழ் அரசியல்வாதிகள் மறைமுகமாக ஆட்சேபனை தெரிவித்தமையாலும், இவை எல்லாவற்றையும் மீறி, சாய்ந்தமருதைப் புதிய உள்ளூராட்சி சபையாக வர்த்தமானியில் உள்ளடக்க முடியாத நிலைக்கு, அமைச்சர் பைசர் முஸ்தபா தள்ளப்பட்டார். இரு ஊர்களுக்கும் இடையில், இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளபட்ட சுமார் 20 வரையான பேச்சுவார்த்தைகளும் தோல்வி கண்டன.

இவ்வாறிருக்கையில், உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான வர்த்தமானியில் அமைச்சர் பைஸர் முஸ்தபா, புதன் கிழமை (01) ஒப்பமிட்டிருந்தார். எனவே, தமக்கு உள்ளூராட்சி சபை இப்போது கிடைக்காது என்பதை உணர்ந்து கொண்ட சாய்ந்தமருது செயற்பாட்டாளர்கள், இறுதிக் கட்ட நடவடிக்கையாக ஹக்கீம், ரிஷாட், ஹரீஸ் உள்ளிட்ட அரசியல்வாதிகளின் கொடும்பாவியை எரித்து, தமது ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டனர்.

அதன் பிறகு, சாய்ந்தமருது, மாளிகைக்காடு ஜூம்ஆப் பள்ளிவாசல்கள் நம்பிக்கையாளர் சபையின் தலைமையில் ஒன்பது பிரகடனங்கள் வாசிக்கப்பட்டன. இத்தோடு, கடையடைப்பு போராட்டமும் முடிவுக்கு வந்தது.

இப்பிரகடனத்தில் பிரதானமான விடயம், சாய்ந்தமருதுக்கான தனியான உள்ளூராட்சி சபை அறிவிக்கப்படும் வரையில், சாய்ந்தமருது, மாளிகைக்காடு எல்லைக்குள், எல்லா அரசியல் கட்சிகளினதும் செயற்பாட்டுக்கு தடை விதிப்பதும், இவ்விரு ஊர்களும் அது வரை தேர்தல்களில் சுயேட்சையாகப் போட்டியிடுவதுமாகும்.

இதேவேளை, ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய கல்முனை பள்ளிவாசல்கள் பொது நிறுவனங்களின் சம்மேளனமானது, ''சாய்ந்தமருதுக்கு தனியான உள்ளூராட்சி சபை வழங்குவதை நாம் வரவேற்கின்றோம். ஆனால், ஏக காலத்தில் கல்முனை மாநகராட்சிக்குள் இருக்கும் பிரதேசங்கள் முன்பிருந்தது போல், சபைகளாகப் பிரிக்கப்பட வேண்டும். தனியே சாய்ந்தமருதை மட்டும் பிரிப்பதால், பல பாதகங்கள் உருவாகும்.

எனவே, ஒன்றாகச் சேர்ந்தோம்; ஒன்றாகப் பிரிவோம்'' என்று கூறி, தமது பிரசாரங்களை முடிவுக்கு கொண்டு வந்தது. இந்தளவில், கல்முனை - சாய்ந்தமருது முறுகல் நிலை, சற்று ஓய்வடைந்துள்ளது.

இரு பக்கங்களிலும் நியாயங்கள் இருக்கின்றன. ஆனால், சாய்ந்தமருது பிரதேச சபையைக் கோரிய வேளையிலேயே, 'பிரிக்க வேண்டுமென்றால், நான்காகப் பிரிக்க வேண்டும்' என்று கல்முனை அரசியல்வாதிகள் ஆரம்பத்திலிருந்தே கோரி வந்திருந்தால் இந்தளவுக்கு சிக்கல் வந்திருக்காது.

அல்லது, 'சாய்ந்தமருதுக்கு தருவது கடினம்' என்று அப்போதே சொல்லியிருக்கலாம். கல்முனை மக்கள் சொல்வதில் நியாயங்கள் நிறையவே இருந்தாலும், சாய்ந்தமருது பிரதேசத்துக்கு ஆசைகாட்டி மோசம் செய்யப்பட்டிருக்கின்றது.

சத்தம் போடாமல் அமைச்சர் மனோ கணேசன் போராடி, நுவரெலியாவில் நான்கு பிரதேச சபைகளை உருவாக்கியிருக்கின்றார். ஆனால், இத்தனை ஆர்ப்பரிப்புகள், பந்தாக்களோடு சாய்ந்தமருதுக்கு வாக்குறுதியளித்த முஸ்லிம் தலைமைகள் அதைப் பெற்றுக் கொடுக்கவில்லை.

அந்தவகையில், சாய்ந்தமருது கடுமையாக ஏமாற்றப்பட்டிருக்கின்றது. மறுபுறத்தில் 'நான்காகப் பிரிப்போம்' என்று கல்முனை மக்களுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தால், அதை நிறைவேற்றாமல் விட்டதன் மூலம், கல்முனை மக்களும் ஏமாற்றப்பட்டிருக்கின்றார்கள் என்றே கருத வேண்டியுள்ளது.

இந்த ஏமாற்று அரசியலால், இரு ஊர்களுக்கும் ஏற்பட்டுள்ள வலியின் பாரதூரத்தை, அடுத்த தேர்தலில் அரசியல்வாதிகள் அனுபவிப்பார்கள்.

மீள்பார்வை

### உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்

| | | | |
|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி - ரூபா 40.00 | இந்தியா | மத்திய கிழக்கு நாடுகள் - 4000.00 | ஐக்கிய இராச்சியம் - 5500.00 |
| 12 இதழ்கள் - ரூபா 600.00 | தனிப் பிரதி - ரூபா 100.00 | மலேசியா - 4000.00 | அமெரிக்கா - 6500.00 |
| 24 இதழ்கள் - ரூபா 1200.00 | ஒரு வருடம் - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் - 4000.00 | அவுஸ்திரேலியா - 4700.00 |
| | | | சீனா - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline. 0777 681 661 People's Bank A/c: 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மந்தமான ஐன்ஸ்டீன்!



ஐன்ஸ்டீன் சிறுவயதில் யாருடனும் அதிகம் பேச மாட்டார். தனியாகவே விளையாடுவார். உடல் வளர்ச்சி, மூளை வளர்ச்சி ஆகியன எல்லாம் வயதுக் கேற்றவாறு இல்லை. பேச்சே வர வில்லை. டாக்டரிடம் அழைத்துச் சென்றனர். அவரும் இந்தக் குழந்தை - கொஞ்சம் மந்தம்தான் - என்று சொல்லிவிட்டார். பெற்றோர்களுக்கோ பெரும் கவலை.

ஒரு நாள் இரவுச் சாப்பாட்டிற்கு அனைவரும் மேசையில் அமர்ந்தனர்.

திடீரென சின்னப் பயல் ஐன்ஸ்டீன், "அம்மா இந்த சூப்பு மிகவும் சூடாக இருக்கிறது" என்று தாய்மொழியில் (ஜெர்மன் மொழியில்) கத்தினான். பெற்றோர்களுக்குத் தூக்கிவாரிப் போட்டது. பேரானந்தம்! ஆனந்தக் கண்ணீர் வடித்தனர்.


"அடப் பாவி மகனே! ஏனடா இவ்வளவு காலம் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை?" என்று சொல்லி கட்டி அணைத்துக் கொண்டனர்.

சின்னப் பையன் ஐன்ஸ்டீன் சொன்னான்:

"இவ்வளவு காலம் வரை எல்லாம் சரியாக இருந்தது!" (அதனால் பேசத் தேவை எழவில்லை).

இதற்குப் பின்னர் இப்படி சிறு வயதில் வளர்ச்சி குன்றி, பிற்காலத்தில் பெரும் மேதைகளாக வரும் 'நோய்க்கு' ஐன்ஸ்டீன் சிந்ஈரோம் என்று பெயர் சூட்டினர் மருத்துவ வல்லுநர்கள்.

உங்கள் பிள்ளை கொஞ்சம் மந்தமாக இருந்தால் கவலைப்படாதீர்கள்" யார் அறிவார்? ஐன்ஸ்டீனை விடப்பெரிய கண்டுபிடிப்புகளைச் செய்யக் கூடும்!!!



தொகுப்பு: அஸாருதீன்

# "ஒரு வேளை நான் தோற்றுப் போனால்" என்ற 'பயம்'

இவ்வுலகில் ஏராளமான சாதனைகள் நிகழ்த்தப்படாமலேயே இருப்பதற்கான காரணங்களில் தலையானது 'பயம்'. ஒரு வேளை நான் தோற்றுப் போனால் என்கின்ற பயமே, எமது பல சாதனைகளுக்கு முட்டுக் கட்டையாக அமைந்து விடுகின்றது.

செய்து தோற்றுப் போவதை விட முயற்சி செய்யாமலேயே என்னால் இது முடியாது என்று கூறி ஒதுங்கிப் போகும் மனோபாவமே எம்மில் பெரும்பாலானோருக்கு இருக்கின்றது.

தோற்றுப் போவதென்பது ஒரு அனுபவமே அது நிச்சயம் வெற்றிக்கான அடித்தளத்தையே தரும் என்பதில் எனக்கு துளியும் ஐயமில்லை.

முயற்சி செய்யாமலேயே, நான் தோற்று விடுவேன் என்று நினைத்தே எம்மில் பலர் அவர்களது ஆயுளில் எந்தவொரு முயற்சியும் எடுக்காமலேயே மரணித்து விடுகின்றனர். ஒரு சிலரே "எதுவானாலும் ஒரு கை பாப்போம், என்ன உயிரா போகும்" என்று முயற்சி செய்கின்றனர். அதில் அவர்கள் வெற்றி பெறுகிறார்களா? இல்லையா? என்பது விடயமல்ல. முயற்சி செய்கிறார்களே அதுதான் நிஜமான வெற்றி.

"ஏன் நீ மற்றவனுக்காக வாழ வேண்டும்? உனக்காக ஒரு நாள் வாழ்ந்து பார் வாழ்க்கையின் ஆழம் புரியும்".என்பதுதான் காலம் காலமாக சொல்லப்பட்டு வரும் ஒரு வாழ்வியல் தத்துவம்.

உண்மையில் எம்மில் பலபேர் மற்றவனுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இதுதான் எமது முயற்சிக்கு முதல் எதிரியாகவும் முட்டுக்கட்டையாகவும் அமைந்து விடுகின்றது. அடுத்தவனுக்காகவே வாழ்ந்து அடுத்தவனுக்காகவே மரணிப்பதுதான் வாழ்க்கையா? கொஞ்சம் சிந்திக்கலாமே?

"நான் ஒரு வேளை தோற்றுப் போனால் மற்றவன் என்னைப் பற்றி என்ன நினைப்பான்" என்கின்ற பயமனோபாவம் என்னுடன் சேர்த்து பல பேரை தொற்றிக் கொண்டிருக்கின்றது என்பதுதான் எம்மில் பலர் அறியாத உண்மையாகும்.

இதிலிருந்து விடுபட்டு எப்போது ஒருவன் வெளியேறி விடுகிறானோ அன்றிலிருந்து அவனது வெற்றிக்கான அடித்தளம் இடப்படுகின்றது என்றுதான் அர்த்தம். நிச்சயமாக வாழ்க்கையில் தோற்றுப் போவதென்பது ஒரு விடயமல்ல. ஆனால் முயற்சி செய்யாமலேயே தோற்றுப் போவதுதான் கவனிக்கப்பட வேண்டிய மற்றும் களையப்பட வேண்டியதொரு விடயமாகும்.

## கண்ணுக்குப்... (01 ஆம் பக்கத் தொடர்)

தாஜுதீனின் படுகொலை தொடர்பான நீதி விசாரணைகள் இன்று நல்லாட்சியின் நீதியை நிலைநாட்டும் செயற்பாட்டுக்கு ஒரு உதாரணமாகவும் அடையாளமாகவும் மாறியிருக்கிறது. கொலை செய்து புதைக்கப்பட்டிருந்த தாஜுதீனை நாங்கள் 2015 ஜனவரி மாதம் எமக்குக் கிடைத்த வெற்றியை அடுத்து வெளியே எடுத்தோம்.

தாஜுதீனுக்கு நீதியை நியாயத்தையும் வழங்குவதாகக் கூறித்தான் அவரை நாங்கள் வெளியே எடுத்தோம். இந்நாட்டு மக்கள் அனைவரும் தாஜுதீனுக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பாக கதைத்தனர். அவருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்று நினைத்தனர்.

கடந்த ஆட்சியின் போது இடம்பெற்ற இந்தக் கொலையை மூடி மறைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இது கொலையல்ல இது ஒரு விபத்து என்று மூடி மறைப்பதற்கு முயற்சிகள் இடம்பெற்ற போது அவற்றை தடுத்து, நடந்திருப்பது கொலை என்ற உண்மையை வெளியே கொண்டு வந்து உறுதிப்படுத்த எங்களால் முடியுமாக இருந்தது.

இன்று தாஜுதீனின் கொலை தொடர்பான செயற்பாடுகளில் மீண்டும் ஒரு சந்தேகமான நிலை உருவாகியிருக்கிறது. எமது கண்ணுக்கு புலப்படாத சக்தியொன்று தாஜுதீனின் கொலையை மூடி மறைக்கும் முயற்சியில் இறங்கியிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இந்த கொலை வழக்கின் விசாரணைகளின் போக்கைப் பார்க்கும் போது எமக்கு அந்த சந்தேகம் எழுகிறது.

இந்த வழக்கின் சந்தேக நபர்களாக பொலிஸ் அதிகாரி அநுர சேனாநாயக்கவும், நாராஹேன்பிட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் இருக்கின்றார்கள். குற்றவியல் சட்டத்தின் 297 ஆவது பிரிவின் கீழ் இவர்கள் இருவரும் நீதிமன்றில் நிறுத்தப்பட்டனர். இந்தக் கொலையில் முக்கியமான சந்தேக நபராக பேசப்பட்ட நபர்தான் ஆனந்த சமரசேகர என்ற சட்ட மருத்துவ அதிகாரி.

முன்னாள் சட்ட வைத்திய அதிகாரியான இவர் தான் இந்த கொலை தொடர்பாக மருத்துவ அறிக்கையை வழங்கியவர். இது கொலையல்ல விபத்து என்று மருத்து அறிக்கை வழங்கியவர் இவர்தான். இவருக்கு கீழ் கடமையாற்றிய இரண்டு அதிகாரிகள் குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு முக்கியமான வாக்குமூலங்களை வழங்கியுள்ளனர். ஆனந்த சமரசேகர என்ற இந்த சட்ட வைத்திய அதிகாரி இந்த இரண்டு அதிகாரிகளுக்கும் வாக்குமூலம் கொடுக்கும் விதம் பற்றி அழுத்தம் கொடுத்திருக்கின்றார். இது தொடர்பாக இந்த இரண்டு அதிகாரிகளும் தமது வாக்கு மூலத்தில் பதிந்தும் இருக்கின்றார்கள். ஆனால் ஆனந்த சமரசேகரவை கைது செய்ய வில்லை.

அநுர சேனாநாயக்கவையும், நாராஹேன்பிட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியையும் குற்றவியல் சட்டத்தின் 297 பிரிவின் கீழ் கைது செய்து ஒரு வருடமாக சிறையில் வைத்திருந்தவர்கள், இந்த வழக்கில் முக்கிய நபராக இருக்கும் ஆனந்த சமரசேகரவை கைது செய்து ஒரே நாளில் பிணை வழங்கி வெளியே அனுப்பினார்கள். இது எப்படி முடியும்?

சட்டமா அதிபர் காரியாலயம் இந்த வழக்கு தொடர்பாக ஒழுங்கான உபதேசம் வழங்குவதில்லை. 2017.10.02 ம் திகதி குற்றப் புலனாய்வு பிரிவு நீதிமன்றிற்கு மனு ஒன்றை சமர்ப்பித்தனர். குற்றவியல் சட்டத்தின் 198 ம் பிரிவின் கீழ் சாட்சிகளை மறைத்த குற்றத்தின் பிரகாரம் ஆனந்த சமரசிங்கவை கைது செய்ய உத்தரவிடுமாறு கோரினார்கள். ஆனால் அதற்கான உத்தரவு கிடைக்கவில்லை. ஆனால் 2017.10.19ம் திகதி ஆனந்த சமரசிங்க நீதி மன்றில் ஆஜராகி ஒரே நாளில் பிணை வழங்கப்பட்டு வெளியே செல்கிறார்.

இந்த வழக்கு விசாரணையின் போது சட்டமா அதிபர் காரியாலய அதிகாரிகள் நீதிமன்றுக்கு வருவதில்லை. குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு ஆலோசனை வழங்குவதில்லை. குற்றப்புலனாய்வு பிரிவினர் சட்டமா அதிபர் அலுவலகத்திற்கு வழக்கு தொடர்பாக அறிவித்தாலும் அவர்கள் நீதிமன்றிற்கு சமுகமளிப்பதில்லை. இதுதான் இன்றுள்ள பிரச்சினை.

ஆனந்த சமரசிங்க தன்னை கைது செய்வதை தடுக்கும் முகமாக முன் பிணைக்கோரி நீதிமன்றங்களுக்குச் சென்றார். அவருக்கு முன் பிணை மறுக்கப்பட்டது. ஆனால் வியக்கத்தக்க விடயம் என்ன வென்றால் இந்த வழக்கை விசாரிக்கும் நீதிமன்றமே அவருக்கு பிணையை வழங்கியது என்றும் அவர் கூறினார்.

# மௌனமாய் ஒரு வெற்றி

வெளியூர் சென்று கொண்டிருந்த ஒருவன் வழியில் ஒரு சத்திரத்தைக் கண்டான். இங்கே தங்கி ஓய்வெடுத்துச் செல்லலாம் என்ற எண்ணத்தில் குதிரையை விட்டு இறங்கினான். குதிரையை அருகிலிருந்த மரத்தில் கட்டினான். அது உண்பதற் காகப் புல் போட்டு விட்டு சத்திரத்திற்குள் நுழைந்தான்.

அப்பொழுது அங்கிருந்த குறும்பன் ஒருவன் குதிரையின் வால் முடியைப் பிடித்து இழுத்தான். இதைப் பார்த்த அவன், "தம்பி இது முரட்டுக் குதிரை. வால் முடியைப் பிடித்து இழுக்காதே உதைத்தால் உன் பற்கள் எல்லாம் போய்விடும்" என்று எச்சரித்து விட்டு உள்ளே சென்றான்.

ஆனால் அந்தக் குறும்பன் இந்த எச்சரிக்கையை சிறிதும் பொருட்படுத்தவில்லை. மீண்டும் குதிரையின் வால் முடியைப் பிடித்து இழுத்தான். குதிரையால் வலியைப் பொறுக்க முடிய வில்லை. விட்டது ஒரு உதை. அவன் நான்கைந்து குட்டிக்கர ணங்கள் போட்டு சிறிது தொலைவில் விழுந்தான். முன் பற்கள் விழுந்ததோடு அல்லாமல் நல்ல காயமும் அவனுக்கு ஏற்பட்டது.

இந்த அநியாயத்தைக் கேட்பார் யாரும் இங்கு இல்லையா? என்று கூச்சலிட்டான் அவன். அங்கே கூட்டம் கூடி விட்டது. என் இந்த நிலைக்கு முரட்டுக் குதிரையின் சொந்தக்காரன்தான் காரணம் என்றான் அவன். தனக்கு இழப்புத் தொகையோ அல்லது குதிரை உரிமையாளனுக்கு தண்டனையோ தர வேண்டும் என்று நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தான்.

வழக்கு தொடங்கியது. குதிரை சொந்தக்காரனைப் பார்த்து நீதிபதி இந்த முரட்டுக் குதிரை உன்னுடையது தானா? என்று கேட்டார். ஆனால் அவனோ ஏதும் பேசவில்லை. 'உன் குதிரையால்தான் இவனுக்கு இவ்வளவு காயம் ஏற்பட்டு இருக்கிறது. இதற்கு என்ன சொல்கிறாய்' என்று மீண்டும் கேட்டார் நீதிபதி. இப்பொழுதும் அவன் ஒன்றும் பேசவில்லை. இதைக் கண்ட நீதிபதி 'இவன் செவிட்டு ஊமை போல் இருக்கிறான். என்ன கேட்டாலும் பதில் பேசாமல் இருக்கிறான். என்ன கேட்டாலும் பதில் சொல்லாமல் நிற்கிறானே' என்றார்.

உடனே வழக்கு தொடுத்தவன் 'என்ன வாயிலே கொழுக்கட்டையா வைத்து இருக்கிறாய்? இது முரட்டுக் குதிரை. வால் முடியைப் பிடத்து இழுக்காதே. உதைத் தால் பல்லெல்லாம் போய் விடும் என்று அப்பொழுது கத்தினாயே. இப்பொழுது செவிட்டு ஊமை போல நடித்து ஏமாற்றவா பார்க்கிறாய்' என்று கோபத்துடன் கத்தி னான். இதைக் கேட்டதும் நீதிபதிக்கு உண்மை புரிந்தது. வழக்கு தொடுத்தவனைப் பார்த்து, 'அவர் எச்சரித்த பிறகும் குதிரையின் வால் முடியைப் பிடித்து இழுத் தாயா?' என்று கேட்டார். அவன் தலை கவிழ்ந்து நின்றான்.

குதிரையின் சொந்தகாரன், 'நீதிபதி அவர்களே தங்க ளுக்கு உண்மை தெரிய வேண்டும் என்பதற் காகவே ஊமை போல நடித்தேன். என்னை மன்னித்து விடுங்கள்' என்றான். வழக்கு தொடுத்த வனைக் கடுமை யாகக் கண்டித்து அனுப்பிய நீதிபதி குதிரை சொந்தக் காரனின் அறிவு கூர்மையைப் பாராட்டினார்.

## கருத்துக்களை... (01 ஆம் பக்கத் தொடர்)

நிச்சயமாக வெற்றியீட்டும் கட்சிக்கு அல்லது சுயேட்சைக் குழுவுக்கு மாத்திரம் பல் அங்கத்தவர் தொகுதிக்கான உறுப்பினர் தொகை கிடைக்கும். இச்சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் பொழுது 2 முக்கிய விடயங்களை முன்வைத்து மஹிந்த அணியினர் இச்சட்டத்திற்கு எதிராக வாக்களித்தனர். முதலாவது விடயம், ஏதாவதொரு கட்சி அல்லது சுயேட்சைக் குழு பெற்றுக் கொள்ள வேண்டிய 5 வீதமாக காணப்பட்ட வாக்குகளின் சதவீதம், 2.5 வீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இக்குறைப்பு விடயமானது சிறிய அரசியல் கட்சிகளின் கருத்தைப் பிரதிபலிக்கச் செய்வதற்கான அத்தியாவசிய விடயமாக உள்ளது. இதற்கு மஹிந்த அணி எதிர்ப்புத் தெரிவிப்பது அவர்களது ஜனநாயக எதிர்ப்புக்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

இரண்டாவது விடயம், வெளிக்கள செயற்பாடுகளில் ஈடுபடும் அரசாங்க அதிகாரிகளுக்கு தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு வழங்கப்பட்டிருப்பதாகும். இது முக்கியமானதொரு விடயம். ஏனெனில், குறிப்பிட்ட தொகுதியொன்றில் சேவையாற்றும் சமுர்த்தி அதிகாரிகள், அபிவிருத்தி அதிகாரிகள், வெளிக்கள துறைசார் அதிகாரிகள் தேர்தலில் போட்டியிடுவதன் மூலம் குறிப்பிட்ட பிரதேசத்தின் மக்களுக்கு தாக்கங்களை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளன. அதனால், ராஜபக்ஷ அணியினர் தமது ஆட்சிக் காலப்பகுதியில் அவ்வாறான அதிகாரிகளை நியமித்திருந்தமையினாலேயே இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

வெற்றிபெறுகின்ற கட்சிக்குக் கிடைக்கும் போனஸ் உறுப்புரிமை இல்லாமல் செய்யப்பட்டமை தொடர்பிலும் ராஜபக்ஷ அணியினர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் அணியினது அல்லது தலைவரினது முறையற்ற அதிகாரங்களை மட்டுப்படுத்துவதற்கு இது முக்கியத்துவம் பெறுகின்றது.

எவ்வாறிருப்பினும் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னரே தேர்தல் ஜனநாயகபூர்வமானதாக உள்ளதா என்பது மக்களுக்கு புரிய ஆரம்பிக்கும். புதிய தேர்தல் முறைக்கமைய உடனடியாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அரசாங்கம் நடாத்த வேண்டும். தேர்தலை பிற்போடுவதற்கான பல்வேறு வியூகங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. என்றாலும் சமூக மட்டத்திலிருந்து விடுக்கப்பட்டு வருகின்ற பாரிய அழுத்தங்களுக்கு மத்தியில் 2018 ஜனவரி மாதத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டிய கட்டத்திற்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது.

இதுவரையில் உருவாக்கப்பட்ட தேர்தல் முறைகளுள் இது மிகவும் ஜனநாயக தேர்தல் முறையொன்று என்பது இதன் மூலம் விளங்குகின்றது. இத்தேர்தல் முறையின் மூலம் விருப்பு வாக்கு முறை முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளது. இதனால் அதிகூடிய நிதி செலவாவதை தவிர்க்க முடிகின்றது. தொகுதிக்கு பொறுப்புச் சொல்லும் உறுப்பினர் ஒருவரை தெரிவுசெய்யும் போது தமது தொகுதிக்கு யாரை தெரிவு செய்ய வேண்டும் என்பதை மக்களுக்கு சரியான முறையில் முடிவெடுத்துக்கொள்ள முடிகின்றது. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் பெரும்பாலும் அத்தொகுதிகளையே பிரதிநித்துவம் செய்வதனால் அவர் தொடர்பான புரிதல் அத்தொகுதி மக்களிடம் காணப்படும். இதனை சிறந்தொரு விடயமாக நோக்க முடியும்.

அத்தோடு இப்புதிய தேர்தல் முறையின் மூலம் விகிதாசார முறையும் பாதுகாக்கப்படுகின்றது. இது சகல கட்சிகளினதும் சுயேட்சைக் குழுக்களினதும் கருத்துக்களை உள்ளூராட்சி மன்றங்களுக்குள் பிரதிபலிக்கச் செய்வதற்கான களமொன்றை ஏற்படுத்தியுள்ளது. இது ஜனநாயக ரீதியில் மிக முக்கியமானதொரு விடயமாகும்.

மறுபுறத்தில் இலங்கை சமூகத்தில் உஆம் பிரஜையாக்கப்பட்டுள்ள பெண்களை சமூக செயற்பாடுகளில் முன் கொண்டு வர முடிகின்றது. இதில் 25 வீத பெண்கள் பிரதிநித்துவம் பாரிய தாக்கங்களை உண்டுபன்னும் என்பதில் சந்தேகம் இல்லை. இதையும் ஒரு சிறந்த வெளிப்பாடாக நோக்கலாம். இவ்வனைத்து விடயங்களையும் நோக்கும் போது முன்பிருந்த தேர்தல் முறையுடன் ஒப்பிடுகையில் புதிய தேர்தல் முறையில் மிகவும் சிறந்த அடையாளங்கள் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. எனினும் இதன் உண்மையான பிரயோசனத்தை பெற மக்கள் அறிவுபூர்வமான முறையில் வாக்குகளைப் பயன்படுத்த வேண்டும்.

## கருத்துக்களை... (01 ஆம் பக்கத் தொடர்)

குறித்த திகதியில் பலரும் பல முன்மொழிவுகளை எங்களுக்கு முன்வைத்திருந்தார்கள். இந்த முன்மொழிவுகள் அனைத்தும் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும். தற்போது மாவட்டங்களுக்கு மேற்கொள்ளப்படுகின்ற விஜயங்களின் போது இந்த முன்மொழிவுகள் கலந்துரையாடலுக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. மாகாண எல்லை நிர்ணயம் தொடர்பில் மேலும் முன்வைக்க வேண்டும் என்று கருதுகின்ற விடயங்களை இந்தக் குழுவினரிடம் முன்வைக்க முடியும் என சமன் ஸ்ரீ ரத்நாயக்க மீள்பார்வைக்குத் தெரிவித்தார்.

அநுராதபுர, திருகோணமலை மாவட்டங்களுக்கான விஜயங்கள் நிறைவடைந்துள்ளன. பொலன்னறுவை, மட்டக்களப்பு மாவட்டங்களுக்கான சந்திப்பு இன்று (10) நடைபெறுகிறது. 11 ஆம் திகதி அம்பாறை மாவட்டத்திலும் (மு.ப. 8.30 - ந.ப.12.00) 15 ஆம் திகதி கேகாலை (மு.ப. 8.30 - ந.ப.12.00), இரத்தினபுரி (பி.ப.2.30 - 6.00) மாவட்டங்களிலும், 20 ஆம் திகதி குருநாகல் (மு.ப. 8.30 - ந.ப.12.00), புத்தளம் (பி.ப.2.30 - 6.00) மாவட்டங்களிலும், 22 ஆம் திகதி மாத்தளை (மு.ப. 8.30 - ந.ப.12.00), கண்டி(பி.ப.2.30 - 6.00) மாவட்டங்களிலும், 23 ஆம் திகதி நுவரெலியா (மு.ப. 8.30 - ந.ப.12.00), பதுளை (பி.ப.2.30 - 6.00) மாவட்டங்களிலும், 24 ஆம் திகதி மொனராகலை (மு.ப. 8.30 - ந.ப.12.00). மாவட்டத்திலும், 27 ஆம் திகதி வவுனியா (பி.ப.2.30 - 6.00) மாவட்டத்திலும், 28 ஆம் திகதி யாழ்ப்பாணம் (மு.ப. 8.30 - ந.ப.12.00), கிளிநொச்சி (பி.ப.2.30 - 6.00) மாவட்டங்களிலும், 29 ஆம் திகதி முல்லைத்தீவு (மு.ப. 8.30 - ந.ப.12.00), மன்னார் (பி.ப.2.30 - 6.00) மாவட்டங்களிலும், டிசம்பர் 06 ஆம் திகதி கொழும்பு (மு.ப. 8.30 - ந.ப.12.00), கம்பஹா (பி.ப.2.30 - 6.00) மாவட்டங்களிலும், 07 ஆம் திகதி களுத்துறை (மு.ப. 8.30 - ந.ப.12.00), காலி(பி.ப.2.30-6.00)மாவட்டங்களிலும், 08 ஆம் திகதி மாத்தறை (மு.ப. 8.30 - ந.ப.12.00), அம்பாந்தோட்டை (பி.ப.2.30 - 6.00) மாவட்டங்களிலும் சந்திப்புக்கள் நடைபெறும். சந்திப்புக்கள் அனைத்தும் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்பார்வை விளையாட்டு

இலங்கையில் முதல் முதலாக....
100% இயற்கையானது
Zanjabeel
கோப்பி மற்றும் பால் கோப்பி
2 நிமிடத்தில் தயாரித்து பருகலாம்..

பால் கோப்பி / Milk Coffee
Ingredients
தூய கோப்பி — Coffee
முழு ஆடைபால்மா — Milk powder
ஏலக்காய் — Cardamom
சீனி — Sugar
இஞ்சி — Dry Ginger

கோப்பி / Pure Coffee
Ingredients
தூய கோப்பி — Coffee
ஏலக்காய் — Cardamom
சீனி — Sugar
இஞ்சி — Dry Ginger
கராம்பு — Clove
சுவையானது சுத்தமானது
ஆரோக்கியமானது கலப்படமற்றது
Distributer
Mr M.B.M. Alufar
077 6060269
186/5, PETTAH PLAZA, 2ND CROSS STREET, COLOMBO-11



## தேசிய நீச்சல் அரங்கில் 4 புதிய சாதனைகள் நிலைநாட்டிய கிமிகோ ரஹீம்

தேசிய குறுந்தூர நீச்சல் போட்டித் தொடரில் தெற்காசியாவின் அதிவேக நீச்சல் வீராங்கனையும், இலங்கை அணியின் தேசிய நீச்சல் வீராங்கனையுமான கிமிகோ ரஹீம், தான் பங்குபற்றிய 5 போட்டிகளிலும் தங்கப் பதக்கம் வென்று அசத்தியதுடன், 4 போட்டிகளில் புதிய தேசிய சாதனைகளையும் படைத்துள்ளார்.

தேசிய குறுந்தூர நீச்சல் போட்டித் தொடர் கடந்த 26ஆம் திகதி முதல் தொடர்ந்து 4 தினங்களாக நீர்கொழும்பு லொயலா கல்லூரி நீச்சல் தடாகத்தில் இடம்பெற்றது. இதில் 15 வயதுக்குட்பட்ட மற்றும் திறந்த வயதுப் பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றன.

போட்டித் தொடரின் முதல் நாளில் பெண்களுக்கான 400 மீற்றர் சாதாரண நீச்சல் போட்டியில் கலந்துகொண்ட கிமிகோ ரஹீம், போட்டியை 4 நிமி. 20:23 செக்கன்களில் நிறைவு செய்து புதிய தேசிய சாதனை படைத்தார். எனினும், குறித்த போட்டியில் தனது சகோதரியான மச்சிகோ ரஹீம், போட்டியை 4 நிமி. 30:46 செக்கன்களில் நிறைவுசெய்து வெள்ளிப் பதக்கத்தை வென்று 2014 இல் நிகழ்த்தப்பட்ட போட்டிச் சாதனையை முறியடித்தார்.

இந்நிலையில், அன்றைய தினம் மாலை நடைபெற்ற 200 மீற்றர் கலப்பு நீச்சல் போட்டியில் கலந்துகொண்ட கிமிகோ ரஹீம், போட்டியை 2 நிமி. 21:97 செக்கன்களில் நிறைவு செய்து புதிய தேசிய சாதனையுடன் தங்கப் பதக்கத்தை வென்றிருந்தார். அத்துடன் 2014 ஆம் ஆண்டு கிமிகோ ரஹீம் மூலம் நிகழ்த்தப்பட்ட (2 நிமி. 24:97 செக்கன்கள்) சாதனையையும் இதன்போது அவரே முறியடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து போட்டித் தொடரின் 2 ஆவது நாளில் 100 மீற்றர் சாதாரண நீச்சலில் கலந்துகொண்ட அவர், போட்டியை 56.31 செக்கன்களில் நிறைவுசெய்து புதிய தேசிய சாதனை படைத்தார். அத்துடன் கடந்த வருடம் இந்தியாவில் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டு விழாவில் குறித்த போட்டியில் 57.20 செக்கன்களில் நிறைவுசெய்து நிகழ்த்திய அவரது தனிப்பட்ட சாதனையையும் அவர் முறியடித்திருந்தார்.

அத்துடன் போட்டியின் 3ஆவது நாளில் பெண்களுக்கான 200 மீற்றர் சாதாரண நீச்சல் போட்டியில் கலந்துகொண்ட கிமிகோ, 2 நிமி. 04:97 செக்கன்களில் போட்டியை நிறைவு செய்து தங்கப் பதக்கத்தை வென்றார்.

மேலும், கடந்த (29) பெண்களுக்கான 50 மீற்றர் சாதாரண நீச்சல் போட்டியிலும் கலந்துகொண்டு 26.16 செக்கன்களில் போட்டியை நிறைவுசெய்து தனது சொந்த சாதனையை முறியடித்து தங்கப் பதக்கம் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

18 வயதான கிமிகோ ரஹீம், கடந்த வருடம் இந்தியாவில் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டு விழா மற்றும் கொழும்பில் நடைபெற்ற அங்குரார்ப் பண தெற்காசிய நீர்நிலைப் போட்டிகளில் தலா 5 தங்கப் பதக்கங்களை வென்றிருந்தார். இம்முறை நடை பெற்ற தேசிய குறுந்தூர நீச்சல் போட்டித் தொடரின் திறந்த வயதுப் பிரிவில்தான் பங்குபற்றிய 4 போட்டி களிலும் புதிய தேசிய சாதனை படைத்திருந்தார்.

இவை அனைத்திற்கும் மேலாக, இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி இளம் வயதிலேயே, கடந்த வருடம் நடைபெற்ற றியோ ஒலிம்பிக் போட்டிகளில் கிமிகோ ரஹீம் கலந்துகொண்டிருந்தமையும் நினைவு கூறத்தக்கது.

இந்நிலையில், இம்முறை போட்டித் தொடரின் திறந்த வயதுப் பிரிவுகளில் ஆண்கள் பிரிவின் சம்பியனாக நாலந்தா கல்லூரியைச் சேர்ந்த ஷெஹான் டிலாகவும், பெண்கள் பிரிவின் சம்பியனாக கில்லர் வேல்ஸ் கழகத்தைச் சேர்ந்த கிமிகோ ரஹீமும் தெரிவாகினர்.

அத்துடன், கனிஷ்ட பிரிவில் ஆண்கள் மற்றும் பெண்கள் சம்பியன்களாக கொழும்பு கேட்வே கல்லூரியின் எல்வின் அருள்மாரண் மற்றும் வத்தளை லைசியம் சர்வதேச பாடசாலையைச் சேர்ந்த சஸ்னா மாஹிரும் தெரிவாகியிருந்தனர்.

வெளிவந்து விட்டது


விலை 60/-
Published by:
Salamah Publication
No. 1 A, Hill Castle Place, Bandaranayaka Mawatha,
Colombo 12 Contact: 0777 386364



தேசிய ஒருமைப்பாட்டுக்கான பாக்கிர் மார்கார் நிலையமும், தேசிய நல்லிணக்க செயலகமும் இணைந்து நடத்திய பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கட்டுரை, சித்திரப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் கடந்த 2017.11.01 ஆம் திகதியன்று பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தேசிய ஒருமைப்பாட்டுக்கான பாக்கிர் மாக்கார் நிலையத்தின் தலைவர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, கல்வி அமைச்சர் அகில விராஜ் காரிவசம், இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி, ஜனாதிபதியின் செயலாளர் ஒகஸ்டின் பெர்னான்டோ, தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி மற்றும் பல பிரமுகர்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

மீள்பார்வை கலண்டர் 2018


சுற்றுச் சூழலைக் காத்திடுவோம்
சுகமாய் வாழ வழிவகுப்போம்
சுற்றுச் சூழலைக் காத்திடுவோம்
சுகமாய் வாழ வழிவகுப்போம்
எனும் கருப்பொருளில்...
கலண்டர்களை வாங்கி மீள்பார்வையின் ஊடகப் பயணத்தில் நீங்களும் கைகொடுங்கள்
12 பக்கங்களைக் கொண்ட
வித்தியாசமான வடிவமைப்பில்
தொடர்புகளுக்கு:
077 0448133, 0777 798096

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org